கீழே அறுதியிட்டுள்ளோம. இப்படியிருக்க "தானுகந்த ப4க3வத கைங்கர்யங்களில இச்சை2யாகிற முமுக்ஷுத்வம இவனுக்கு இல்லையன்றோ" என்று நம ஸ்வாமி (ப. 32) அஸங்க3தமாக எழுதுவது அஸத்த2ாமே.

(2) அநங்க3நிஷ்டா2 — "பராபகாந்தர பரித்யாக3மே அங்க3ம பரபத்தி ஸத்2லத்தில. ப்ரவருத்திரூபாங்க3ம கிடையாது. பரபத்திக்கு அங்க3ம நிவருத்திரூபமாகும்' என்று கீழே லோகதே3ஶிக ஸூத்ரங்களைக்கொண்டு அறுதியிட்டுள்ளோம. இப்படியிருக்க. நம ஸ்வாமி "அங்க3மில்லாத நிஷ்டை2யிது' (ப 33) என்று எழுதுவது அஸத்த2ாமே.

(3) அவிதி4நா க்ருதா— விதி4ப்ரத்யயார்த்த2ம க்ருதி ஸாத்4யத்வம் என்று கீழே (ப. 71) நிரூபித்தோம அப்படியிருக்க "விதி4க்கப்படாதவை" என்று நம ஸ்வாமி (ப. 33) எழுதுவது அஸ்தத2ாமே

(4) ஆபராபதிப4யதா3 (5) உபேக்ஷ்யா (6) ச்யுதா— ஸித்3த4ஸாத4ந நிஷ்டை2யின பரபே4க3ம ஆசார்யாபி4மாநம, இதுவே அமோக4ம என்று அறுதியிடப்பட்டுள்ளது. நம ஸ்வாமி (ப. 33) சரமபர்வநிஷ்டை2யைக காட்டிலும ஸித்3த4ஸாத4நநிஷ்டை2க்குச் சொல்லும தோ3ஷங்கள நமக்கு இஷ்டமே. இதனுல் ஸ்வக3தஸ்வீகார நிஷ்டை2யைக காட்டிலும ஸித்3த4ஸாத4நநிஷ்டை2 தாழ்ந்தது எனத்தேறுது, நேராக உயர்ந்தது என விரிவாக நிரூபித்துளளோம்.

(7) அநநுஷ்டி2தா— ஆழவாரகள ஸித்3த4ஸாத4ந நிஷ்ட2ாகள் என்பது கீழே நிரூபிதம. இப்படியிருக்க நம ஸ்வாமி புந புந "ஆழவாரகள ஸ்வக3த ஸ்வீகார நிஷ்ட2ாகள்" (ப. 34) என்று எழுதுவது லோகப்ரதாரணம (லோகவஞ்சனை) ஆகும.

இவவளவால, உததரஸலோகமும, அதன பொருளை விவரிககும பகுதியும பதிலளிககபபடடதாயிறறு. அநத ப$_4$ாக$_3$ததில ''நிதயாப$_4$யபரத$_3$ா'' எனபதனை விவரிககுமிடததில ஸ்ரீவசநபூ$_4$ஷண ஸூதரஙகளை உத$_3$ாஹரிககிறா (ப. 35) நம ஸவாமி ஸவக$_3$தஸவீகாரம ஶரணயஹ்ருத$_3$யாநுஸாரியலலாதபோது ப$_2$லிககாது எனறு லோகதே$_3$ஶிகன ஸ்ரீவசநபூ$_4$ஷணததில 145-வது ஸூதரததில நிருபிததுள்ளார். மாமுனிகள வ்யாக$_2$யாநததைதக காண்க. வஸதுஸதி$_2$தியிபபடியிருகக ஸ்ரீவசநபூ$_4$ஷண ஸூதரஙகளை உத$_3$ாஹரிதது ''ஸவக$_3$தஸவீகாரநிஷ்டை$_2$ நிதயாப$_4$யபரத$_3$ா ஸதி$_2$ரா'' எனறு நம ஸவாமி (ப. 35, 36) எழுதுவதெலலாம அஸத$_2$ாநே.

நம ஸவாமி (ப. 38) ''ஆர்த்த ப்ரபத்தி ஸவக$_3$த ஸவீகாரம, த்$_3$ருபதபரபததி பரக$_3$தஸ்வீகாரம்'' எனறு கொள்ளவேண்டுமெனகிறார். இதற்கு ஸமயாசார நிஷ்காஷ க$_3$ரநத$_2$ததை ஸம்வாத$_3$ பரமாணமாகவும காட்டுகிறார். இஙகே உணமையை உணாததுகிறேன, கேணமின. ஸ்ரீ வைஷ்ணவ ஸமயாசார நிஷ்காஷததில ஸித$_3$தே$_4$பாய விவேக பரகரணததில (தமிழபதிபபு 119-122 பககஙகளில) பிளளைலோகம ஜீயா ''இனி இநத பரபததியானது ஸவக$_3$த ஸவீகார பரக$_3$தஸவீகாரததாலே இரணடுபடிபபடடிருககும. தததநநிஷ்ட$_2$ரான அதி$_4$காரிகளை. 'குரஙகு பூனைககுடடிகளைப போலிருககுமவா' எனனுமது—வ்யகதயநதரஙகளில இபபடி உணடாகிலும, பரஸித$_3$த$_4$பரதே$_3$வதாதி$_3$ ஸத$_2$லபரவேஶமுளளது இவ்விரணடுககுமாகையால, இவறறை அவாகளுககு த$_3$ருஷ்டாநதமாகச சொலலலாமிறே. இவைதான தனனைபபறறி நடககையுடைத்தானதாயும, கிடககுமிடத்தில எடுபபை உடைததானதாயுமாயிருககும, தத்போஷ்யஙகள் இவறறைக கடடுவது வாயைபபாரபபதாயிருககும; இபபடி நேசமுளளதாய் ரக்ஷிககைககு இலககாயிருககுமிடததில ஒன்று 'விடில தொடேன்'

என்றிருக்கும். ஒன்று ‘தான் கொடில விடேன்’ என்று எடுத்து ரக்ஷிக்கும். இப்படியாயிற்று அவற்றின் படிகளிருக்கும்படி. அவற்றில் எடுப்பே முக2்யமாகையால் அதுக்கு ஒரு வசநமுமில்லை. இவற்றை ஸது3பதே3ஶார்த்3த4ஜ்ஞன் ஸத்3ாசார்யன் உணர்த்த உணர்ந்தானாயிற்று ஸ்வக3த ஸ்வீகாரத்தை இகழ்ந்து, பரக3த ஸ்வீகாரத்தை மகிழ்ந்து, நிர்ப4ரோ நிர்ப4யோऽஸ்மி” [சுமையற்றவனாய், ப4யமற்றவனாயிருக்கிறேன்.] என்கிற நிர்ப4ரத்வாநுஸந்தா4நம் உண்டாய் உஜ்ஜீவிப்பது” என்றும், “அந்த ப்ரபத்திதான் ஆர்த்ததத்3ருப்த அதி4காரிபே4த3த்தாலே த்3விவிதை4யாயிருக்கும். ஆர்த்த ப்ரபத்தியாவது,— யதா3 பராநந்வயிபி4ா து3ஸ்ஸகஸம்ருத்3திபி4ா விநா। தேந தத்புரத: பாத: ஸா ப்ரபத்திஸ் ஸதா3 ப4வேத்||” [பரமாத்மாவோடு தொடர்பற்றிருக்கையால் பொறுக்கவொண்ணாதிருக்கும் நினைவுகளோடு துவக்கற்று அதே காரணத்தால் அப்பரமனின் முன்னால் விழுகையே எப்போதும் ப்ரபத்தியெனப்படும்.] என்றும், ‘பு3த்3தி4ர்த்4யவஸாயாத்மா யாசஞாபாயவஸாயிநீ। ப்ராப்யேச்சே2ாநுரூபா யா’ இத்யாரப்4ய ‘ப்ரபத்தி ஶரணாக3தி’ [மனவுறுதியோடு கூடியதாய் (அவனையே உபாயமென) யாசிப்பதில் தலைக்கட்டுவதாய் ப்ராப்யத்தை விரும்பும் அதி4காரியின் ஸ்வரூபத்திற்குப் பொருந்துவதான அறிவு என்று தொடங்கி, இதுவே ப்ரபத்தியென்றும் ஶரணாக3தியென்றும் கூறப்படுகிறது] என்றும் இத்யாதி3களில் சொல்லுகிறபடியே ‘அந்தர் ப3ஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண:” [அவ்வனைத்தையும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்] என்று எங்கும் பரிபூர்ணனாயிருக்கிற ஶ்ரிய:பதி திருவடிகளிலே விழுந்து, ‘பிதரம் மாதரம் தா3ராந்’ [தாய், தந்தை, தா3ரம் முதலான உறவினர் செல்வங்கள், ஸமஸ்த உபாயஉபேயங்கள் ஆகிய அனைத்தையும் கைவிட்டுத் திருவுலகளந்தருளிய உன் திருவடிகளையே உபாயமாகப்பற்றினேன்] இத்யாதி3ப்படியே பரித்யக்தஸ

களான அவையெலலாம, ஸ்ரிய பதி சரணாரவிந்த3த்தில உண்டாக உணாந்து, அவிசசி2நநப4க3வத3கு3ணாநுப4வகைங்கர்ய நிஷ்டை2ச்சு2வாய் ஸர்வேஸ்வரனைப பறறுகை. த்3ருப்த ப்ரபததியாவது — 'ஆசாரபரப4வோ த4ாம· த4ர்மஸய பரபு4ரசயுத' [த4ர்மம ஆசாரத்திலிருந்து ஏறபடுவது; த4ர்மததின தலைவன அச்யுதன] இதயாரப4ய (என்று தொடங்கி) 'ஆசாரயுகத ஆசார்யஸ்சரூபீ ஸத3ா ஹரி । ஆசாரயமாஸ்ர யேத தீ4மாந் பரபததயா வ்ரதஸம்யுதம் ॥ பரபததயா விஷ்ணு ஸாயுஜயம லப4தே நாதர ஸமஸய । தஸ்மாத3ாசாரய சரண ஸரணக. பரபத3யதே ॥" [ஆசாரத்தோடு கூடிய ஆசார்யன நடமாடும ப4க3வானேயாவான. அறிவாளியாயிருப்பவன ஸரணாக3தஸமரக்ஷணவ்ரதத்தோடுகூடிய ஆசாரயனை ஸரணமடையவேண்டும. இநத ஸரணாக3தியாலே விஷ்ணுஸாயுஜயததை அடைவானெனபதில ஐயமிலலை. ஆகையால, ஆசார்யன திருவடிகளையே உபாயமாக (அறிவாளியாயிருப்பவன்) பற்றுகிறான்] இதயாதி3ப்படியே, ஸத்ஸமப்ரத3ாயஸித3த4 ப்ரபத்த்யநவிதனான ஸத3ாசார்யன திருவடிகளைத தஞ்சமாகபபறறி, இஙகிருக்கும நாளைககு ஆசார்யமுகோ2லலாஸகரமான ப4க3வத3ப4ாக3வதகைஙகர்யநிரதனாய், ஸவாசாரயனை சரூபிஹரிசரணாரவிந்த3பரவணனாய், 'இழைகொள் சோதி செந்தாமரைககட்பிரானிருநதமை காட்டினீர' எனகிற படியே தநநிஷ்டனாயிருககை" எனறும அருளிச்செய்துள்ளார. அந்த க3ரந்த2ததில நம ஸவாமி நிரூபிததபடி ஆரததத3ருபத பே4த3ம நிரூபிககப்படவிலலை. நோமாறாக, ஸவக3தஸ்வீகார பரக3தஸவீகாரங்கள் வேறாகவும, ஆரதத த்3ருபத ப்ரபததிகள் வேறாகவுமே நிரூபிக்கப்பட்டுள்ளன. தமிழபபதிபபு 119 முதல் 122 பககங்கள் ஈறாக ஸேவிபபவர்களுககு இது தெளிவாகும. ஆகையால் நம் ஸவாமி ஸ்ரீ வைஷ்ணவ ஸமயாசார நிஷகர்ஷததை உத3ாஹரிப்பது வீணானது. நேர்மாறாக ஸ்வபக்ஷப3ாத4கமுமாகும். மேலும, இபபடி ஆர்த்த த3ருப்த பே4த3நிரூபணம் செய்வதும், அதறகு லோகதே3ஶிக திவ்யஸூக்தியை ப்ரமாணமாகக

காட்டுவதும் தகாது தகாது தகாது ஸ்ரீவசநபூ₄ஷணததில பிள்ளைலோகதே₃ஶிகன் 142. 143. 144 145 ஸூத்ரங்களில ஸ்வக₃த ஸ்வீகாராநுபாயத்வததையும் பரக₃தஸ்வீகார உபாயத்வததையும் நிரூபித்துள்ளார். மாமுனிகள் வ்யாக்₂யாநத்தில "இவையிரண்டாலும ஸ்வக₃தஸவீகாராநுபாயதவமும, பரக₃தஸவீகாரோபாயத்வமும காட்டப்பட்டது" என்று அருளிச்செய்திருப்பது ஸ்பஷ்டம். ஸ்வக₃தஸ்வீகார பரக₃தஸவீகாரங்களே ஆர்த்த த்₃ருப்தபரபத்திகளானல், ஆர்ததபரபத்தி அநுபாயம் த₃ருப்தப்ரபததி உபாயம எனத் தேறுதா? இதுதான் லோகதே₃ஶிகன் ஸித்₃தா₄ந்தமா? இது மாமுனிகள் கண்ட அல்லது 'மாமணிகள்' கண்ட ஸாரதம நிஷ்கர்ஷமாகுமா? கணணுடையோர் நனறுகக் காணவேணும.

ஆக இவ்வளவால, 'வேத₃ாநத ஸாரமான ரஹஸய த்ரயமே ஸாரதமம் உபாதே₃யம' என்றும், 'தத₃ர்தத₂மான ப₄க₃வானே உபாய பூ₄தன். பரார்தத₂கைஙகாயமே பரம புருஷாாதத₂ம். இவன செயயும ப்ரபததி அதி₄காரீ விஶேஷணம. உபாயமலல — எனபதே ஸதஸமபரத₃ாய ஸாரார்தத₂ம்' எனறும, இதுவே "மாமுனிகள் கண்ட வேத₃ாந்தஸாரநிஷ்காஷம" எனறும் நிரூபிதமாயிற்று.

முடிவுரை

முடிவில அடியேன் செய்யும் ஓர் விண்ணப்பம. நம பெரியோாகள் தங்கள் க்₃ரந்த₂ஙகளில காட்டிய விஷயங களை அடியேன் வெளியிட்டேன் அத்தனை போகஙி ஸ்வதந்த்ரமாக ஒன்றும எழுதினேன் அலலேன இந்த நிஷகாஷ நிகஷத்தைக கண்டவர்கள் தததத்ஸமபரத₃ாய ஸரணியைத்தெளிந்து தத்தத்ஸம்ப்ரத₃ாய நிஷ்ட₂ராக இருக்க ப்ராப்தம, ஸம்ப்ரத₃ாய ஸாங்காயமும் வேண்டா. ஸம்ப்ரத₃ாய விவாத₃மும வேண்டா. வேற்றுமையில

ஒற்றுமைகாணபோம. ஒற்றுமை என்று சொல்லிககொண்டு வேற்றுமையை வளாககவேண்டா. ஸமப்ரதாயாந்தரததை யழிககவும வேண்டா—என்று ப்ரார்ததித்து நிறகிறேன.

ஸத்ஸம்ப்ரதாய பரமஸூக்ஷ்மாரத்தபரகாஶநத்தில் எழுதுகோலை நாட்டின அடியேனுடைய ஸாஹஸததைப பெரியோாகள் பொறுப்பாாகளாக.

ஓர் மஹாவித்வானான ஸ்ரீவைஷ்ணவாக்ரேஸரா எழுதியநூலுக்கு மறுபபாக ஓா நூலை எழுதும்படி அடியேனுககு நேர்நதமைககு மிகவும வருந்துகிறேன. இதனை நம் ஸவாமியும், நம ஸ்வாமியால் தமமுடைய ஸாரதம நிஷ்கர்ஷத்தில ஆதியிலே வணஙகப்பட்ட பெருமாளும பெரியபெருமாளும க்ஷமிபபாாகளாக

சதுர்த்தாதிகார பரீக்ஷா ஸமாப்தா.

वेङ्कटाचार्यशिष्येण वरदार्येण धीमता।
निष्कर्षनिकषः सोऽयं लिखितोऽत्र सतां मुदे॥

[ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமியின சிஷ்யராய் (அவரிடமிருந்துபெறற) பேரறிவை உடைய வரான வரதாசார்யரால இநத நிஷ்காஷ நிகஷம் இந்நில வுலகிலுள்ள நலலோாகளின உகப்பினபொருட்டு (ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்ஶனததில) எழுதபபட்டது.]

அத்யாதமதத்வபோதப்ரஸகரா், வாகமருதவாஷீ
ஸ்ரீ உ வே வேளுககுடி வரதாசாாய ஸவாமி இயறறிய
நிஷ்காஷ நிகஷம நிறைவு பெறறது

ஆழவாா எமபெருமானாா ஜீயா திருவடிகளே ஶரணம

இநத நிஷ்காஷ நிகஷத்தில் எடுககபபட்ட ப்ரமாணங் களுக்கு 'ஸுதர்ஶனம' ஆசிரியரால் பொருள் எழுதப்பட்டது.

‘ஸுத3ர்ஶனம்’ ஆசிரியரின் முடிவுரை

—✻—

ஸுத3ர்ஶனத்தில் (இதழ் 275) மாமுனிகள் மலரில் ஸ்ரீ.உ வே. வேளுக்குடி வரத3ாசார்ய ஸ்வாமி *‘மாமுனிகள் கண்ட வேத3ாந்த ஸார நிஷ்காஷம்’* என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை எழுதினார். அதை மறுத்து ஸ்ரீ உ. வே. மது4ராந்தகம் வீரராக4வாசார்ய ஸ்வாமி எழுதிய *‘ஸாரதம நிஷ்காஷம்’* என்னும் நூலையும், அதற்கு ஸமாத4ாநமாக ஸ்ரீ உ வே வரதாசார்ய ஸ்வாமி எழுதிய *‘நிஷ்காஷ நிகஷம்’* [இரு நிஷ்கர்ஷங்களின் உரைகல்] என்னும் நூலையும் அன்பர்கள் இதுவரை (ஸுதர்சனம் 279-284) அநுப4வித்து வந்தனர் பல அன்பர்கள் இந்நூல்கள் பற்றிய கருத்துக்களை நேரிலும் கடிதம் மூலமாகவும் நம்மிடம் தெரிவித்தார்கள் இந்நிலையில் சில விஷயங்களை அன்பர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது பத்திரிகாசிரியன் என்னும் முறையில் அடியேனது கடமையாகத் தோன்றியபடியால் இம்முடிவுரையை எழுதலானேன்

அன்பர்கள் பலர்,— “தென்னாசார்ய ஸம்ப்ரத3ாயமும், தே3ஶிக ஸம்ப்ரத3ாயமும் ரஹஸ்ய ப்ரஸ்த2ானத்தில் பல விஷயங்களில் கருத்து வேறுபாடு உள்ளவை என்பது உலகமறிந்த விஷயம். அறுநூறு வருஷங்களுக்கு மேலாக வேத3ாந்ததே3ஶிகர் காலத்திலிருந்தே இக்கருத்துவேறுபாடுகள் பல பல கிரந்தங்களிலும் ஏறிக்கிடக்கின்றன அவற்றிலே, *‘நம் ஸ்வீகாரத்தாலே பேறு’ என்று தே3ஶிக ஸம்ப்ரத3ாயஸ்த2ர்களின கருத்தாகவும், ‘அவன் ஸ்வீகாரத்தாலே பேறு’ என்று தென்னாசார்ய ஸம்ப்ரத3ாயஸ்த2ர்களின் கருத்தாகவும் இன்றளவும் முக்கியமானதொரு கருத்து வேற்றுமை நிலவிவருகிறது* இதை இன்று ஒரு வித்3வான் மறுக்க வருவதும், தென்னாசார்யர்களே ‘நம் ஸ்வீகாரத்தாலே பேறு’ என்று கூறியிருப்பதாகத் துணிவுடன் எழுதி அச்சிடுவதும் அதிஸாஹஸமாயிருக்கிறது இதைத்தக்க ப்ரமாண யுக்திகளைக்காட்டி இருஸம்ப்ரத3ாயத்திற்குமுள்ள வேறுபாட்டை அசைக்கமுடியாதபடி நிஷ்கர்ஷ நிகஷத்தில் நிலைநாட்டி உண்மையைக் குன்றிலிட்ட விளக்காக்கியிருப்பதன்மூலம் ஸ்ரீ உ. வே. வேளுக்குடி ஸ்வாமி ஸ்ரீ வைஷ்ணவவுலகிற்குப் பெருந்தொண்டாற்றியுள்ளார் ஸ்ரீ உ வே. வேளுக்குடி ஸ்வாமி பரமஸாத்விகமான முறையில் தம் நூலை எழுதியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாயுள்ளது இவ்வளவு தெளிவாக இவ்விஷயம் நிலைநாட்டப்பட்டபின் இதை

நிஷ்கர்ஷிக்க ஒரு வாத₃ஸத₃ஸ் தேவையேயில்லை நேர்முக வாத₃ங்களில் வீண் கூச்சலும் குழப்பமும் மற்றும் பல விரும்பத் தகாத விளைவுகளும் ஏற்படுமேயொழிய நன்மையொன்றும் விளை யாது" என்று கருத்து தெரிவித்து வருகிறார்கள்

ஒரு சில அன்பர்கள்,— "இப்போது காலம் இருக்கும் நிலை யில் இந்தச் சர்ச்சை அநாவசியமானது. ஆஸ்திகத்திற்கே பேராபதது விளைந்துகொண்டிருக்கும் இக்காலத்தில், ஆஸ்திகர்கள், அதிலும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஒருவருக்கொருவர் நூல்கள்மூலம் வாதம்புரிவதே தவறானது. நேர்முகமான சர்ச்சையில் இறங்குவது பெரும் தீங்குகளை விளைக்கவல்லது. ஆகையால் நடக்கப்போவ தாகஅறிவிக்கப்பட்டிருக்கும் வாத₃ஸத₃ஸ்ஸை எப்பாடுபட்டாவது நிறுத்திவிடுங்கள்" என்று கருத்து தெரிவிதது வருகிறார்கள்.

இந்நிலையில் வாத₃ஸத₃ஸ்ஸைப்பற்றிய அடியேனது கருத்தை அன்பர்களுக்குத தெரிவிக்கவேண்டியது அவசியமாகிறது. பரஸ் பரஹிதைஷிகளாய், நித்யாபி₄வாஞ்சி₂த — பரஸ்பரநீசபா₄வர்களா யிருக்கவேண்டிய ஸ்ரீவைஷ்ணவர்களிடையே வாத₃சர்ச்சை எல்லாப் படியாலும் பரிஹரிக்கத்தக்கதே என்பதே அடியேனது உறுதி யான கருத்து ஆயினும் மது₄ராந்தகம் ஸ்வாமி சில வருஷங்களாக 'ஸம்ப்ரதா₃ய விஷயங்களில் ஒரு வாத₃ஸத₃ஸ்ஸை நடத்திவிட வேண்டும்' என்று பிடிவாதங்கொண்டிருக்கிறார் இதற்குக் காரணத்தை 'சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ' என்னும் ரீதியிலே அடியேன் தெரிவித்தாகவேண்டி யிருக்கிறது சில வருஷங்களுக்கு முன்னால், 'ரங்கநாதபாதுகை' என்னும் ஸ்ரீ வைஷ்ணவ பததிரிகையில் திருவயிந்திரபுரம் ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யர் என்பவர் ஓர் கட்டுரை எழுதினார். அதில் 'பிராட்டி ஜீவகோடிபிய, எம்பெருமான் ஆஶ்ரிததோ₃ஷ போ₄க்₃யனே' முதலான தென்னாசார்ய ஸம்ப்ரதா₃யக்கொள்கைகளை ப்ரஸ்தாவித்து, 'இவையெல்லாம் கலிபுருஷனால் கிளப்பப்பட்ட வாத₃ங்கள்' என்று ஒரு கட்டுக்கதையை எழுதினார் இதை மறுத்து நாம் ஸுத₃ர்ஶனத்தில் ஓர் கட்டுரை எழுதினோம். அதில், முற்கூறிய கொள்கைகள் ஆழ்வார்களாலும், பல ஆசாரியர்களா லும் ஆதரிக்கப்பட்டிருப்பதால் அவர்களைக் கலிபுருஷனென்று எழுதுவது அஸஹ்யாபசாரமும், கலிசேஷ்டையுமாகும் என எழுதி

யிருந்தோம். ரங்கநாதபாதுகாபத்ரிகையோ, நம்மால் மறுக்கப் பட்ட கட்டுரையை எழுதியிருந்த ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யரோ இன்றளவும் அதற்கு யாதொரு ஆக்ஷேபமும் தெரிவிக்கவில்லை. அப்படியிருக்கும்போது நமது மதுராந்தகம் ஸ்வாமி (இப்போது அன்பர்கள் காணும் ஸாரதமநிஷ்கர்ஷம் அமைந்துள்ள ரீதியில்) ஏதோ சில பக்கங்களை எழுதி நம்மைக் கடுமையாகத்தாக்கி வாதத்திற்கும் அழைத்தார். அவர் எழுதியிருக்கும் விஷயங்களுக் கெல்லாம் நம்மாலும், நமது பூர்வர்களாலும் ஏற்கனவே தின வடங்க பதில் கூறப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டி, வாதம் செய்வதில் பேராவல் இருந்தால் பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட்டு, வ்யபதிஷ்ட வித்வான்கள் அனைவரையும் வாதத் திற்கு அழைத்து வாதப்போர் புரியவேண்டுமேதவிர ஒருவரிருவர் வாதம்செய்து முடிவுகட்ட முடியாது என்று நாம் எழுதியபின் தாற்காலிகமாக சாந்தியடைந்தார். அதற்குப்பின்னும், ஸம்ப்ர தாயசர்ச்சை ஒன்றை நடத்துவதில் தமக்குள்ள ருசியை அடிக்கடி அறிவித்து வந்தார் வேதாந்தஸார நிஷ்கர்ஷம் வெளி வந்தபின், தாம் அதற்கு மறுப்பாக ஸாரதம நிஷ்கர்ஷம் எழுதி யிருப்பதாகவும், அதையும், அதற்கு ஸமாதானம் ஏதாவது வரதாசார்யர் தெரிவித்தால் அதையும் ஸுதர்சனத்தில் அச்சிட்டு அதன்பின் வாதஸதஸ் ஒன்றை நடத்தவேண்டும் என்று மதுராந்தகம் ஸ்வாமி ஆசைப்பட்டதாலேயே நாம் முன்னுரையில் எழுதிய ரீதியில், நிஷ்கர்ஷ நிகஷம் அச்சாகி வெளிவந்தபின்பு வாதஸதஸ்ஸுக்கு ஏற்பாடு செய்வதாக அறிவித்தோம்.

இப்போது நிஷ்கர்ஷ நிகஷமும் வெளிவந்துவிட்டது அன்பர் கள் பலருடைய கருத்தையும் தெரிவித்தோம். நிஷ்கர்ஷ நிகஷ மானது இருஸம்ப்ரதாயங்களுக்கிடையே பரகதஸ்வீகார ஸ்வ கதஸ்வீகார விஷயத்தில் உள்ள கருத்துவேற்றுமையைத் தெள்ளத் தெளிவாகக் காட்டிவிட்டது. இதை நிலைநாட்ட ஒரு வாத ஸதஸ தேவையேயில்லை இரு ஸம்ப்ரதாயங்களில் எதுசிறந்தது என்பதில அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முடிவு காண்பது சிறிதும் ஸாத்யமல்ல. ஆகையால் வாதஸதஸ் நடததுவதால் எந்த நற்பயனும் விளையாதென்பதோடன்றியில பல தீய விளைவு களும் ஏற்படும் எனறு அன்பர்கள் பலர் அறிவுறுததுவதை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். மதுராந்தகம் ஸ்வாமியும் இவ்

வறிவுரையை ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறோம் ஏற்றுக் கொள்ளாமல், வாத₃ஸத₃ஸ்ஸை நடத்தியே தீரவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தால் கீழ்க்கண்ட நிப₃ந்த₃னைகளுடன் அதை நடத்தவும் தடையில்லை.

1. முன்னுரையில் காட்டிய ரீதியில் ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமந்நாராயண ராமாநுஜஜீயர் ஸ்வாமியின் முன்னிலையில் உப₄ய ஸம்ப்ரதா₃ய வித்வான்களும் கலந்துகொள்ளும் வாத₃ஸத₃ஸ்ஸை நடத்தவேண்டியது.

2 இதில் *வ்யபதி₃ஷ்ட* வித்₃வான்களுக்கே பேச இடம் அளிக்கப்படும். (யார் வ்யபதி₃ஷ்ட வித்₃வான் என்பதில் அக்₃ராஸநாதி₄பதியான ஜீயர் ஸ்வாமியின் தீர்ப்பே முடிவானது). மற்ற வர்கள் வாயைத் திறந்தால் வெளியேற்றப்படுவார்கள்

3. "விவாத₃ாஸ்பத₃மான விஷயத்தில் நம்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களின் திருவுள்ளம் இன்னது. ஸ்ரீ வேத₃ாந்த தே₃ஶிகரின் திருவுள்ளம் இன்னது" என்று நிஷ்கர்ஷிப்பதே வாத₃ஸத₃ஸ்ஸின க்ருத்யம்

4. 'இரு பக்ஷங்களில் எது சிறந்தது' என்னும் சர்ச்சையில் இந்த ஸத₃ஸ் ஈடுபடாது. 'இரண்டு பக்ஷங்கள் உண்டா. உண்டாயின அவற்றின் ஸ்வரூபம் என்ன? ஒரே பக்ஷமெனில் அதன் ஸ்வரூபம் யாது?' எனனும் விஷயமாகவே நிஷ்கர்ஷம் செய்யப்படும்

5 நிஷ்கர்ஷத்தில் எல்லா வித்₃வான்களும் கையெழுத்திட்டு ஸுத₃ர்சனத்தில் வெளியிடவேண்டியது

மது₄ராந்தகம் ஸ்வாமியின் அபி₄ப்ராயத்தைத் தெரிந்து கொண்டு, அவர் வாத₃ம் நடத்தவேண்டும் என விரும்பினால், ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமந் நாராயண ராமாநுஜஜீயர் ஸ்வாமி ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளியபின்பு அவரையும் கலந்துகொண்டு வாதம் நடக்கும் இடம், தேதி, கலந்துகொள்ளும் வித்₃வான்கள் முதலான விபரங்கள் பிறகு அறிவிக்கப்படும்.

இங்ஙனம்,

விரோதி₄க்ருத் **ஸ்ரீ வைஷ்ணவ தா₃ஸன்,**
ஆனி-மீ புனர்பூசம் **ஸ்ரீ. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,**
(24—6—71) 'ஸுத₃ர்ஶனம்' ஆசிரியர்.

ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு முதலானவற்றோடு கூடிய
பெரியவாச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களின் க்ரந்தங்கள்

	க்ரந்தங்கள்	விலை	தபால்
1	பரந்த ரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள்	1-50	-35
2	ஸ்தோத்ரரத்னசது:ஶ்லோகீ ஜிதந்தே வ்யாக்யானங்கள்	3-00	-55
3	திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-50	-35
4	முதல் திருவந்தாதி வ்யாக்யானம்	1-88	-40
5.	பெருமாள் திருமொழி வ்யாக்யானம்	1-88	-40
6.	திருமாலை வ்யாக்யானம்	2-75	-50
7.	திருவாசிரியம் பெரியதிருவந்தாதி வ்யாக்யானம்	1-63	-40
8.	சது:ச்லோகீ வ்யாக்யானம் (நாயனாராச்சான்பிள்ளை)	1-50	-35
9	கத்ய வ்யாக்யானங்கள்	2-00	-45
10	நாச்சியார் திருமொழி வ்யாக்யானம்	4-00	-75
11.	திருச்சந்தவிருத்த வ்யாக்யானம்	3-00	-55
12	நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம் (விவரணத்துடன்)	2-00	-50
13.	ஸ்ரீராமாயண தனிச்லோகம் (விவரணத்துடன்) I Part	3-50	-65
	ஷை இரண்டாம் பாகம் (விவரணத்துடன்)	7-00	1-25
14.	திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்	0-50	-25
15.	பாசுரப்படி ராமாயணம் (விலையில்லை தபால்கூலி 0-10)		
16.	அமலனாதிபிரான் வ்யாக்யானங்கள்	1-88	-40
17.	கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யானம்	2-75	-50
18.	சிறியதிருமடல் வ்யாக்யானம் (விவரணத்துடன்)	1-38	-35
19	முமுக்ஷுப்படி வ்யாக்யானம்	3-00	-55
20	பெரியதிருமடல் வ்யாக்யானம் (விவரணத்துடன்)	1-50	-35
21.	முதல்திருவந்தாதி, அப்பிள்ளையுரை ,,	3-00	-55
22	இரண்டாந்திருவந்தாதி வ்யாக்யானம் ,,	4-00	-75
23.	ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் (சரமோபாயநிர்ணயம், பெரியதிருமுடியடைவு முதலானவற்றுடன் கூடியது)	7-00	1-00
24.	ஸ்ரீவசநபூஷண வ்யாக்யானம் 4-அரும்பதவுரைகளுடன் முதல் பாகம்	6-00	1-00

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடுகள்

1.	திருப்பாவை வ்யாக்யானம்	3-00	-55
2.	(போதாயன) ஸந்த்யாவந்தனம் பதவுரையுடன்	0-35	-10
3.	(போதாயன) உபாகர்மவிதி	0-35	-10
4.	புருஷஸூக்த வ்யாக்யானம்	0-75	-25
5	நாராயண ஸூக்த வ்யாக்யானம்	0-75	-25
6	ஸ்ரீஸூக்த வ்யாக்யானம்	2-00	-45
7.	பூ நீளா விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்கள்	1-75	-50
8.	தேஹளீச ஸுப்ரபாதம்	0-25	-10
9	ராமானுஜதேசிக ஸ்தோத்ரங்கள்	1-00	-35
10.	விசிஷ்டாத்வைதவிஜயம் (முதல்பாகம்)	10-00	1-50
11.	சாதிமத்ஆராய்ச்சி	2-00	-35

12.	ஸ்ரீலக்ஷ்மீ நருஸிமஹஸ்தவம	0-37	-15
13	ஸநமதகாரிகாவளீ	1-75	-35
14.	விஷ்ணுசிததவிஜயம முதல பாகம	5-00	1-00
	௸ இரணடாம பாகம	7-00	1-50
15.	கமபனின சமயம முதல பாகம	1-00	-30
16.	சாரீரககாரிகாவளீ (முதல பாகம)	3-00	-60
17	பெரியாழவாா பரபாவம	4-00	-75
18	ஸாதவிகவிஜய ஸாவஸவம (தபால உட்பட 50பை)		
19	ஸநத்யாவநத்நபாஷயம	3-00	-70
20	திருபபலலாணடு வயாகயானம	1-50	-35
21	ஸ்ரீமகரநெடுங்குழைக்காதா பாமாலையநதாதி	1-50	-40
22	ஸ்ரீகேசவமணிமாலை	0-75	-25
23	மாமுனிகள அறுநூருவது ஆணடு மலா	1-50	-40
24.	சஙகரரும வைணவமும (தபால வகைககூலி) 50பை		
25	நிஷகாஷ நிகஷம	2-00	-35
26	திருபபாவை, திருபபளளியெழுச்சி (மூலம மடடும)	0-20	0-10

கிடைக்குமிடம் -

ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3, புத்தூா அகரஹாரம், திருச்சி-17

ஸ்ரீ

ஆழ்வாராசாாயாகளின அருளிச்செயலகளுக்கு எளிய தமிழ்
விரிவுரைகளுடன வெளிவரும சிறந்த ஸ்ரீவைஷ்ணவ மாதப்பத்திரிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

வேதம், ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள் முதலியவற்றிலிருந்து ஸ்ரீமந்நாராயணனின் பெருமையை விளக்கும் விஷ்ணுசித்தவிஜயம் என்னும் சிறந்த க்ரந்தமும், தமிழில் கீதா வ்யாக்யானமும், திவ்ய ப்ரபந்தங்களுக்கு எளிய விவரணங்களோடுகூடிய பூர்வாசார்ய வ்யாக்யானங்களும் விசிஷ்டாத்வைத ப்ரகரணக்ரந்தமான விவரண ஸஹித சாரீரககாரிகாவளியும் மற்றும் பல விஷயங்களும் வெளிவருகின்றன.

ஆசிரியா —

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அடவகேட.
3, புத்தூா அக்ரஹாரம், திருச்சி-17.

வருடச் சந்தா ரூ. 5-00.

ஸாவஜித மாாகழி 28உ (12—1—1948) முதல்
தொடாநது நடைபெறுகிறது.

சென்னையில நமது வெளியீடுகளைதும் கிடைககுமிடம:-
ஸ்ரீ S. K. ராமராஜ அயயஙகாா,
29, A. பஜாா ரோடு, மயிலை, மதருஸ-4.

நிஷ்கர்ஷ நிகஷ விவாதம்

விவாத ஸபை

நிஷ்கர்ஷிக்க வேண்டியது என்ன ?

மத்$_4$யஸ்த$_2$வித்$_3$வான்களுக்கு வேண்டுகோள்

[ஸுத$_3$ர்ஸநம்' ஆசிரியர்]

சென்ற (விரோதி$_4$கருத ஆனி, ஆடி) ஸுத$_3$ர்ஸநம் இதழில் நிஷ்கர்ஷ நிகஷம் நிறைவுபெற்றது. அதன் முடிவுரையில் அடியேன் மத்$_4$யஸ்த$_2$ர் பலருடைய கருத்துக்கு இணங்கி இவ்விஷயத்தில் விவாத$_3$ஸபை$_4$ தேவையில்லை. நடத்தினாலும் அதனால் நற்பயன் எதுவும் விளையாது என விவரித்திருந்தேன். இதைக் கண்டு ஒரு மாதத்திற்குப் பிறகு ஸ்ரீ உ. வே. மது$_4$ராந்தகம் ஸ்வாமி விவாத$_3$ஸபை$_4$ அவஸ்யமே என்று கூறும் (ஆறு பக்கங்கொண்டதொரு) சுவடியை 'நடைபெறப்போகும் விவாத ஸபை$_4$யைப் பற்றிய அறிவிப்பு' என்ற தலைப்பில் வெளியிட்டிருப்பது நமக்கு 4—8—71 இரவில் கிடைத்தது.

அதில் 'நிக$_3$மநம்' என்னும் பகுதியில் உப$_4$யஸம்ப்ரதா$_3$ய வித்$_3$வான்கள் சிலரை மத்$_4$யஸ்த$_2$ராக மது$_4$ராந்தகம் ஸ்வாமி குறிப்பிட்டிருக்கிறார். அவர்களை விவாத$_3$ஸபை$_4$யில் நேரில் கலந்து கொள்ளுமாறு பிரார்த்தித்துள்ளார். அப்படிக் கலந்துகொள்ள ஸௌகர்யமில்லாதவர்கள் தம் அபி$_4$ப்ராயத்தை விமர்ஸரீதியில் தமக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் பிரார்த்தித்துள்ளார். அப்பகுதி அடுத்தபடியாகச் சிறிய எழுத்துக்களில் கொடுக்கப்பட்டு. அதன்மேல் அந்த மத்$_4$யஸ்த$_2$ வித்வான்களுக்கும், மற்றும் வ்யபதி$_3$ஷ்ட வித்$_3$வான்களுக்கும் அடியேனுடைய பிரார்த்தனை அச்சிடப்பட்டு அவர்களுக்கு (6—8—71) அன்று அனுப்பப்படுகிறது. 15—8—71க்குள் வித்வான்கள் தம் கருத்தை எழுத்துமூலமாக அறிவித்தால் 25—8—71ல் வெளிவரவேண்டிய ஸுத$_3$ர்ஸநத்தில் அக்கருத்துக்கள் வெளியிடப்படும்.

மது$_4$ராந்தகம் ஸ்வாமியின் நிக$_3$மநம்

நிகமநம்

ஸ்ரீமந்நாராயண ஜீயர் மத்யஸ்த நிலையில் விவாதம் ப்ரஸ்துத மாகும், ஸ்ரீமத் அழகியசிங்கர், ஸ்ரீமத் ஆண்டவன், உ. வே. D T.

தாதாசாாயஸவாமி, உ வே உததமூா ஸவாமி, உ வே காரபபஙகாடு வெஙகடாசாாயஸவாமி ஆழவாாதிருநகரி ஸவாமி (சென்னை வாஸி), ஸு தாசஞசாாஸவாமி (திருபபதி), திருநாஙகூா அணணஙகராசாா ஸவாமிபோனற விதவான மதயஸததரைதுணையாகககொணடு ஜீயா ஸவாமி தீாபபு அளிககவேணடும. ஜீயா ஸமமதியாவிடில முன குறிபபிடடவாகளில மூனறு திருநாமஙகள மாதயஸதயம வகிககும படி செயது விவாத முடிவு பெறவேணும். அபமூவரும வாதி பரதிவாதிகள ஏகோபிததுத தோநதெடுககவேணடியவாகளே

ஸ்ரீஉ வே ஸ்ரீகாஞசி பிரதிவாதி பயஙகரம அணணஙகராசாாய ஸவாமியுடன ஸமீபததில பரகருத சாசசா விஷயமாக பரஸதாவம ஏறபடடபொழுது பூஷண பா ஷ ய ம ா ன து ஸமபிரதாயததை அனுஸரிததனறு எனபதைத தாம ஏறகனவே பிரசுரம செய் திருபபதாய் ஸாதிததாா. அடியேனுடைய ஸிததாநதமும அதுவே. பாஷயம அஸாமபரதாயிகமெனறு தாம வெளியிடடதை விளகக ஸமமதிததால அநத ஸவாமியும மதயஸதபதம வகிககலாகும

எழுதது மூலமாய அநுவாதததுடன வாதம நடைபெறும ததவநிாணயமே இதறகுபபலம ஜயாபஜயஙகளனறு நிகஷத் திறகு அடியேன பதிலளிககவேணடியிருபபதால வாதம அவசய் மெனறே அபிபராயபபடுகிறேன.

அசறகு முன பிரதிவாதிகளாகிய இவாகளிருவரும அடியேனு மாகக கலநது அதனால தருபதியடையும பலமேறபடடு அதை ஸுதாசநபதராதிபா தாமவாகசரிததபடி பிரசுரம செயயவேணும இலலையேல வாத சபையில நிஷபநநமாவதை வி த வ ா ன க ள கையொபபததுடன் பிரசுரம செயயவேணடும இது அடியேன் செயயும விணணபபம.

ஸபையில நேரில கலநதுகொளள ஸௌகாயமிலலாத மதயஸத விதவானகள பரதிவாதிகளின பரகருதபதயாாதத நிஷகாஷமானது மாமுனி முதலிய பூாவாகள ஸூகதிகளுககு முரணபடடிருபபதைபபறறிய தஙகள அபிபராயததை விமாசரீதி யில அடியேனுககுத தெரிவிககுமாறு ஸவிநயம பராாததிககிறேன

153, N C Street,
Srirangam
21—7—71

தி. ஈ. வீரராகவதாஸன்,
ஸ்ரீமதுராந்தகம்.

மத்₄யஸ்த₂ வித்வான்களுக்கு ஸுத₃ர்ஶனம் ஆசிரியரின் பிரார்த்தனை

மது₄ராநதகம் ஸ்வாமியால் குறிபபிடப்பட்ட ஜீயர் ஸ்வாமிகளும, வித்₃வானகளும வாத₃ ஸபை₄யில மாத்₄யஸ்த்₂யம (நடுநிலைமை) வகிகக ஸித்₃த₄ராயிருககி றாகளா எனபதை 15—8—71ககுள் அடியேனுககுத தெரிவிககவேண்டும். அப்படி நேரில வரஸௌகாயமிலலா

விட்டில் இருபக்ஷங்களையும் நடுநிலைநின்று ஆராய்ந்து, எழுத்து மூலமான அவர்களது விமர்சனங்களை அடியேனுக்கு அனுப்ப வேண்டும். அல்லது விரைவில் எழுதி அனுப்ப ஸித்3த4ரா யிருக்கிறார்கள் என்பதை 15—8—71க்குள் அவர்கள் தெரியப்படுத்தவேண்டும். மது4ராந்தகம் ஸ்வாமியால் குறிக்கப்படாத வ்யபதிஷ்ட வித்3வான்களும் திருவுள்ளத் தைத் தெரிவிக்கலாம்.

விவாத விஷயம் பற்றிய முக்கியமான குறிப்பு

'அஸாரம்' என்று தொடங்கும் ஶ்லோகத்தின் பொருளே விவாதத்திற்கு விஷயம் என்று பொருள்பட மது4ராந்தகம் ஸ்வாமி எழுதியிருக்கிறார். விவாதத்திற்கு அதுவும் விஷயமானாலும் அதற்கும் காரணமாய், அதைக் காட்டிலும் முக்கியமானதான விவாத3விஷயம் ஒன்று இருக்கின்றது என்பதை மத்4யஸ்த2 வித்3வான்கள் குறிக் கொள்ளவேணும். "அஸாரம்" என்று தொடங்கும் ஶ்லோகம் பொதுப்படையானது. அந்தந்த ப்ரகரணங் களுக்குத் தக்கவாறும் அவரவர் ப்ரமேயங்களை எப்படி நிஷ்கர்ஷிக்கிறார்களோ அதற்குத் தக்கவாறும் அதன் பொருள் வேறுபடும். ஆசார்ய ஹ்ருத3யத்தத்3வ்யாக்2யானங் களில் ப3த்3தங்களில் ப்ராத4ந்ய அப்ராத4ந்யங்கள் காரண மாக ஏற்படும் பல படிகளைத் திருவுள்ளம்பற்றி இந்த ஶ்லோகத்திற்கு ஒருவிதமாகப் பொருள் கொள்ளப்பட்டது. ரஹஸ்யத்ரயஸாரத்திலும் ஸ்ரீ வசநபூ4ஷணமீமாம்ஸாபூ4ஷ யத்திலும், அதையொட்டிய வேதா3ந்த ஸாரநிஷ்கர்ஷ நிஷ்கர்ஷ நிகஷங்களிலும் ப்ரமேயார்த்த2ங்களில் ப்ராத4ந்ய அப்ராத4ந்யங்கள் காரணமாக ஏற்படும் பல படிகளைத் திருவுள்ளம்பற்றி இந்த ஶ்லோகத்திற்கு இரண்டு வித4 மாகப் பொருள் விவரிக்கப்பட்டன. அதில், "முக்தியில்- ஸாத4ந ப4க்திநிஷ்ட2னுக்கு ப4க3வத் கைங்கர்யமற்ற பரமாத்மாநுப4வமாத்ரமே ப2லம், ஸ்வக3தஸ்வீகாரநிஷ்ட2ன் எனப்படும் ஸாத4நபரபக்திநிஷ்ட2னுக்கு ஸ்வார்த2 கைங்கர்யமே ப2லம், பரக3தஸ்வீகாரநிஷ்ட2ன் எனப்படும் ஸித்3தோ4பாய நிஷ்ட2னுக்குப் பரார்த2 கைங்கர்யமே ப2லம்" என்று முக்தியில் ப2லபே4த3த்தைத் திருவுள்ளம் பற்றிய பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீவசநபூ4ஷணத்திலும்,

ஆசார்யஹ்ருத3யகாரர் ஆசார்ய ஹ்ருத3யத்திலும், மாமுனிகள் அவ்விரு க்ரந்தங்களின் வியாக்கியானங்களிலும் மிகத் தெளிவாக நிரூபித்திருப்பதை அநுஸரித்து, ஸ்ரீவசநபூ4ஷண மீமாம்ஸாபா4ஷ்யகாரரும் நிஷ்காஷ நிகஷகர்த்தாவும் 'அஸாரம்' என்று தொடங்கும் ஸ்லோகத்திற்கு ஒருவிதமாகப் பொருளை விவரித்திருக்கிறார்கள். ஸ்ரீ வேதா3ந்த தே3ஶிகர் முற்கூறியபடியான ப2லபே4த3ம் முக்தியில் கிடையாது என்று திருவுள்ளம்பற்றியவராகையாலே அதற்குச்சேர 'அஸாரம்' என்று தொடங்கும் ஸ்லோகத்திற்கு வேறுவித4மாகப் பொருளை விவரித்திருக்கிறார் ஆகையால், மத்4யஸ்த2 வித்3வான்கள் மாத்4யஸ்த2யம் வகிக்கவேண்டுமாகில், முந்துற முன்னம் முக்தியில் ப2லபே4த3விஷயமாக லோகாசார்ய வரவரமுனிகளுக்கும், ஸ்ரீவேதா3ந்த தே3ஶிகருக்கும் கருத்து வேற்றுமை உண்டா இல்லையா என்பதை நிஷ்கர்ஷிக்கவேண்டும். இவ்விரு கருத்துக்களில் எது சிறந்தது என்பது ஸம்ப்ரதா3ய சாஸ்த்ரசர்சையாகையால், அதில் மாத்4யஸ்த2யம் வகிக்கவோ, முடிவு கூறவோ உப4யஸம்ப்ரதா3ய வித்3வான்களுக்கும் அதி4காரமில்லையாகையால் அக்காரியத்தில் அவர்கள் இழியலாகாது. முக்தியில் ப2லபே4த3 விஷயத்தில் இருவகை ஆசார்யர்களுக்கும் அபி4ப்ராயபே4த3ம் உண்டா இல்லையா என்பதைப்பற்றி நடுநிலைநின்று விமர்ஶித்தால் உண்டு என்றே உறுதியாகத் தேறும் (இல்லையென்று நிரூபிக்க முன்வரும் வ்யபதி3ஷ்ட மத்4யஸ்த2 வித்வான்கள் நமக்குக் கட்டுரை எழுதியனுப்பலாம்.) இப்படி ப்ரமேயவிஷயத்தில் கருத்துவேற்றுமை தேறியபின்பு, அதற்கு அநுகு3ணமாக 'அஸாரம்' என்று தொடங்கும் ஸ்லோகார்த்த2 விஷயத்திலும் வேற்றுமை ஏற்படுவது ந்யாயமே என்றே நடுநிலை நின்று விமர்ஶிக்கும்போது அடியேனுக்கு உறுதியாகப் படுகிறது ஆகையால் இவ்விஷயத்தில் விவாதஸத3ஸ்ஸை நடத்துவதால் எப்பயனுமில்லை என்றே அடியேன் கருதுகிறேன். இதுபற்றி வ்யபதி3ஷ்ட வித்3வான்களை 15-8-71க்குள் தங்கள் கருத்தை எழுதி அனுப்பும்படி அடியேன் அடிபணிந்து இறைஞ்சுகிறேன்.

ஸ்ரீ வைஷ்ணவ தா3ஸன்,

3, புத்தூர் அக்ரஹாரம், **ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,**
திருச்சி-17. 'ஸுதர்ஶனம்' ஆசிரியர்.

நிஷ்கர்ஷ நிகஷ விவாதம்

லேக2ந விவாத3 நிக3மநம்

['ஸுத3ர்ஸனம்' ஆசிரியர்]

6—8—71ல் அடியேன் அனுப்பிய வேண்டுகோளுக்கு உப4யவேதா3ந்த வித்3வத்3வரிஷ்டர்களான (1) ஸ்ரீகாஞ்சி ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி, (2) D T. தாதாசார்ய ஸ்வாமி. (3) (ப்3ருந்தா3வநவாஸி) திருநாங்கூர் ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி. (4) ஆழ்வார்திருநகரி திருமலைநல்லான் ராமக்ருஷ்ணய்யங்கார் ஸ்வாமி (5) (காஞ்சீவாஸி) வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி. (6) திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாசார்ய ஸ்வாமி. (7) திருப்புட்குழி யாமுனாசார்ய ஸ்வாமி. (8) (தேசி) ரங்கராமாநுஜய்யங்கார் ஸ்வாமி (9) சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி (கடைசியிருவரும் காரப்பங்காடு ஸ்வாமி சிஷ்யர்கள்) ஆகிய ஒன்பது வித்வான்களிடமிருந்து 17—8—71 ஆகிய இன்று வரை பதில் வந்துள்ளது. இதில் D. T தாதாசார்ய ஸ்வாமி மது4ராந்தகம் ஸ்வாமிக்கு ஸாத4கமாகவும், கடைசியில் குறிக்கப்பட்ட மூன்று வித்வான்களும் வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமிக்கு ஸாத4கமாகவும் அபி4ப்ராயம் தெரிவித்துள்ளார்கள். மற்ற வித்வான்கள் விவாத விஷயத்திற்குள் புகுராமலும், உட்புகுந்தாலும் ஒரு நிஷ்கர்ஷத்துக்கு வராமலும் விவாத3ஸத3ஸ் நடத்தலாமா கூடாதா முதலான விஷயங்களைப் பற்றித் தங்கள் அபிப்ராயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த எல்லா பதில்களையும் ஆராய்ந்தால், இதில் ஒரு விஷயத்தில் ஒருமனப்பட்ட கருத்து விளங்குகிறது. அதாவது — விவாத3ஸத3ஸ் நடத்துவதால் எப்பயனுமில்லை. வீண்கலஹமும் வைரஸ்யமுந்தான் ஏற்படும் என்பதே அது. விவாத3ஸத3ஸ் நடந்தால் அதில் கலந்துகொள்ளவோ, மாத்4யஸ்த்2யம் வகிக்கவோ எந்த ஸ்வாமியும் ஸித்3த4மாயில்லை. உத்தமூர் ஸ்வாமியை நேரில்

சென்று விசாரித்த வேளுக்குடி ஸ்வாமி, அவரும் விவாத3 ஸத3ஸ்ஸில் நேரில கலந்துகொள்ள இயலாது என்றே ஸாதித்ததாகத் தெரிவிக்கிறார். ஆண்டவன ஸ்ரீ காரயம் ஸ்வாமியும் அவ்வண்ணமே தெரிவித்ததாக ஸ்ரீ உ. வே. சதாபிஷேகம ஸ்வாமி தெரிவிககிறார. ஆக இப்படி மதுராந்தகம ஸ்வாமியால மத்4யஸ்த2ர்களாகக் குறிக்கப் பட்டவர்களில் எவருமே வாத3ஸத3ஸ்ஸில கலந்து கொள்ள விரும்பவிலலை என விளஙகுகிறது.

மது4ராநதகம் ஸ்வாமியால் மத்4யஸ்த2ராகக குறிககப் பட்ட ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி ஸ்ரீ வைஷ்ணவவுலகின தௌ3ர்ப4ாக3யததாலே பரமபதித்து விட்டபோதிலும. அவருடைய சிஷ்யரான ஸ்ரீ உ. வே. சதாபி4ஷேகம ஸவாமி ஸாதிககும் ஒரு விஷயம் நடுநிலை யாளர்களால குறிககொள்ளததக்கது. அதாவது:— மது4 ராந்தகம ஸ்வாமி—உள்ளதான ஸம்ப்ரத3ாய பே4த3த்தை இலலையாக்கி 'ஸம்பரத3ாய ஸுத4ா' எனனும் புத்தக மொனறைச் சில வருடங்களுககு முன அச்சிட்டபோது, அதறகு மறுப்பு வரவேண்டும் எனனும் எண்ணததாலே ஸ்ரீ உ. வே. வேளுக்குடி ஸவாமியும, சதாபிஷேகம ஸவாமி யும் தம் ஆசார்யரான ஸ்ரீ உ. வே. காரபபங்காடு வேங்கடா சார்ய ஸ்வாமியை அணுகிககேட்க, ஸ்ரீ வசநபூ4ஷண மீமாம்ஸாப4ாஷ்யததை அடியொற்றி அவர் அப்போது ஸாதித்த அர்த்த2விசேஷங்களையே ஸ்ரீ உ வே. வரதாசாரய ஸ்வாமி 'மாமுனிகள் கண்ட வேத3ாந்த ஸார நிஷகர்ஷம்' என்னும் தலைப்பில கட்டுரையாக எழுதினார். இககட்டுரை யும், இதைத் தொடர்ந்து எழுதப்பட்ட நிஷ்கர்ஷ நிகஷ மும, ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வேங்கடாசாரய ஸ்வாமி நோவுசாத்திககொண்டு எழுந்தருளியிருந்தபோது அவ ருடைய பரிபூர்ணமான அங்கீ3காரத்தைப் பெறறவை— என்பதே அது. ஆக, மது4ராநதகம ஸவாமி மத்4யஸ்த2ராக அந்த ஸ்வாமியைக் குறித்ததுவிபரீதப2லமாகவே முடிந்தது.

ஸ்ரீ உ. வே. காஞ்சி மஹாவித்₃வான ஸ்வாமியைப் பற்றி மது₄ராந்தகம் ஸ்வாமி குறிப்பிட்டதும் அவருக்கு விபரீதமாகவே முடிநதென்பது ஸ்ரீராமாநுஜன் பத்திரிகை யில 275-ம் இதழில பினவருமாறு ஸ்ரீ உ. வே. P. B. A. ஸ்வாமி அச்சிட்டிருப்பதிலிருந்து விளங்குகிறது.

அஸாரல்பஸார விவாதத்தில் அடியேனுடைய விண்ணப்பம்

அஸாரமலபஸாரஞச ஸாரம ஸாரதரம தயஜேத இதயாதி ப்ரஸிதத சலோகததின பொருள விவரணததைபபற்றி (சென்ற ஐபபசி மாதம முதலாக)ச சில விதவானகளுககுள அபிப்ராய பேதம விளைநது கரநத லேகன ப்ரதிலேகனஙகளும நடநதுவருவதை ஸ்ரீவைஷ்ணவ ஸுதாசன பத்ரிகையினுல அடியேன ஸதூலமாக அறிநதிருககிறேன ஏறககுறைய ஒருவருஷ காலமாகவே அடியேனுககு நேதரபாடவம குனறியிருப்பதை ஸ்ரீராமாநுஜனில் பலகால பரஸதா விததிருககிறேன. அதை இஙகு மறுபடியும சுருககமாகத் தெரிவிக கிறேன அடியேன எழுதுவதறகு எவ்விதமான இடையூறும விளைய விலலை நாடோறும 30, 35 பககஙகளும எழுதி வருகிறேன. வரும தபாலகளைப பெரும்பாலும காரியஸதாகள வாசிததுககாட்டியே தெரிநதுகொள்ளுகிறேன. அசசிட்ட ஏடுகளை ஆவசயகதைககு ஏறப சிரமப்பட்டு வாசிககிறேன. வாசிபபதில சிரமபபட நோநதால் வாசிப்பதை உடனே நிறுததிவிட வேணடியதெனறு டாகடாகளின கட்டளையுமுணடு. அதனுல, நிஷகாஷம—நிகஷம முதலியவறறில அடியேன இனறளவும கணசெலுத்தினவனலலேன. ஸுதாசந பதரிகை வருமபோது பிரிததுப பார்ககையில் ஏடுகள் வளாநதிருக கினறன வெனறு மட்டும கரஹித்தவனடியேன்.

10—8—71 தேதியாகிய இனறு ஸ்ரீஸுதாசந பதராதிப ஸவாமி யிடமிருந்து கிடைத்த ஸ்ரீமுகததில் நானகு பக்கமுள்ள சிறிய விளமபர மொனறு இருந்தது. அதில அடியேனுடைய ப்ரஸதாவமிருப்பதாகத் தெரியவநததனுல அந்த இடததை மட்டும் ஊனறி வாசிததேன். ஸ்ரீமதுபய வே. மதுராந்தகம ஸவாமி எழுதியிருபபது அதில் அநுவதிக கப்பட்டிருககிறது. (அதாவது) ' ஸ்ரீ உ. வே. ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயஙகரம அணணங்கராசார்ய ஸவாமியுடன ஸமீபததில ப்ரகருத சாசசாவிஷய பரஸதாவம ஏற்பட்டபொழுது பூஷண பாஷ்யமானது ஸமப்ரதாயததை யநுஸரிததததன்று எனபதைத் தாம் ஏறகனவே பிரசுரம செயதிருபபதாய ஸாதிததார. அடியேனுடைய ஸிததாநதமும

அதுவே. பாஷ்யம அஸாமபரதாயிகமெனறு தாம வெளியிட்டதை விளகக ஸமமதிததால அந்த ஸவாமியும மதயஸதபதம வஹிககலாகும்'' எனபதாக.

இது பசசைப் பசுமபொய எனபதை உலகமறிய விளககுகிறேன. ஸ்ரீமதுராநதகம ஸவாமி சென்ற சித்திரை மாதம முடிவில ஏதோ பநதுகருதயமாகக காஞசிககெழுநதருளி ஒருவாரமிருநதார. அடிககடி சநதிகக நேரிட்டது சித்திரை மீ முடிவு நாளன்று வெள்ளிககிழமை தாயாருடைய புறப்பாட்டில இயல சாததியான பிறகு, அனறு திருமூலமாதலால மணவாளமாமுனிகள ஸநநிதிககு விடை கொளவதறகாக ஒரு புறம தங்கியிருநதேன் அஙகு மதுராநதகம் ஸவாமி யெழுநதருளி நான தங்கியிருககிற காரணததைத தெரிநதுகொணடார தாமும மாமுனிகள திருநக்ஷத்ரோதஸவம ஸேவிகக வருவதாக ஸாதிதது கூடவே வநது இரணடு மணி காலம கோஷடியை யநுபவிததார. பல வார்த்தைகளில் அஸார அலபஸார வசாததையும வந்ததுண்டு, அபபோது அடியேன் விஜ்ஞாபிததஇவ்வளவே; ''ஆசார்ய ஹிருதயததில 'வேதஸாரோபநிஷத்ஸாரதராநுவாக ஸாரதமகாயதரியில'' என்று ஸபஷடமாக அருளிசசெயதிருபபதைததான அடியேனறிவேன, ஸ்ரீவசன பூஷண மீமாமஸாபாஷ்யததிலுள்ள விவரணம நினைவிலலை, இப்போது நிகழும கரந்தசாசசைகளையுமறியேன'' எனறு. ''மீமாமஸாபாஷ்யம அஸாமபரதாயிக மெனபதை ஏறகனவே நான பிரசுரம செயதிருககிறேன'' எனறு அடியேன சொலலியிருநதால ''எஙகே எபபோது எதறகாக பிரசுரிததிருககிறீர்'' எனறு இநதஸவாமி கேளாமலிருபபரா? ''அது எனககும தெரியுமாகையால கேட்கவிலலை'' எனபா தெரியுமாகில இனனவிடததிலெனபதை 15—8—71ககுள வெளியிடட்டும. அடியேனிடததில அபததபரலாபம விலை செலலாது.

முடிவாகச சொலலுகிறேன். ப்ரகருத சாசசையில அடியேன எந்தவிததிலும் ஸமபநதபபட விருமபவிலலை ஏறககுறைய நாறபது வருஷகாலமாக ஸ்ரீமதுராந்தகம ஸவாமியை நோககிப பலநூலகள எழுதியிருககிறேன. அவையெலலாவறறையும ஸ்ரீரஙகததில ஸ்ரீமத பரமஹமஸேதயாதி, ஸ்ரீமநநாராயண ராமாநுஜ ஜீயா ஸவாமி ஸதாபிததருளியிருககிற ஸ்ரீகோசநிலயததிலும ரஙகவிலாஸ புஸதகாபணஙகளிலும கு சி. பாடசாலை லைபரெரியிலும அபேக்ஷயுள்ளவாகள் காணலாம. அநத க்ரந்தஙகளுககு ஏதேனும விடைவருமோ? எனகிற ஒனறை மட்டுமே அடியேன பாாதது நிறபவன் விடை வெளிவநதால அன்று முதல இவர்ககு சிஷயனுயிருபபேனெனபதை மீணடும சபதம் செய்து நிறகிறேன. P. B A.

இனி, மது₄ராந்தகம் ஸ்வாமிக்கு ஸாத₄கமாக அபி₄ப்ராயம் தெரிவித்திருக்கும் ஓரே வித்₃வானான ஸ்ரீ உ. வே. D T தாதாசார்யஸ்வாமியின் ஸ்ரீமுகத்தையும், அதற்கு அடியேன் எழுதிய பதிலையும், அதற்கு அவர் எழுதியுள்ள பதிலையும் கீழே அச்சிட்டு அதிலிருந்தும் மது₄ராந்தகம் ஸ்வாமிக்கு விபரீதமே ஸித்₃தி₄க்கிறது என நிரூபிப்போம்.

ஸ்ரீ உ. வே. D. T. தாதாசார்ய ஸ்வாமியின் ஸ்ரீமுகம்

தே₃சிகவித்₃யாப₄வநம்
மைலாப்பூர், சென்னை-4.

விஜ்ஞாபநம் தே₃வருடைய கடிதமும் வேண்டுகோளும் கிடைத்தது. ஸ்ரீமாந் K வரதாசார்யர் எழுதினது 'மாமுனிகள் கண்ட ஸாரதமநிஷ்கர்ஷம்' என்பது அதிலிருந்து ப்ரதானமான விவாதவிஷயம் 'அஸாரமல்பஸாரம் ச' என்ற ச்லோகத்தின் அர்த்தமே என்பது ஸ்பஷ்டம். மாமுனிகளுடைய வாக்யம் ஒன்று கூட எடுக்காமல் வ பூ மீமாம்ஸாபாஷ்யகாரர் சொன்னதையே பின்பற்றி தேசிகன் ஸாதித்தது தவறு என்பதை அந்வாருஹ்யவாத₃ம் என்று மறைத்துக் கூறினார், அவரை ரக்ஷிப்பதற்காக தேவர் இப்போது சொல்லுகிறபடி மோக்ஷத்தில் ப₂ல பே₄த₃முண்டு என்பதை அனுஸரித்து இவர் ஆத்தத்தைச் சொல்லுவதாக அபிப்ராயப்பட்டிருந்தால் தேசிகன் அவர் ஸித்தாந்தப்படி அர்த்தம் சொன்னார் என்ன வேண்டுமேயன்றி அந்வாருஹ்யவாத₃ம் எனக்கூடாது.

மோக்ஷத்தில் ப₂லபே₄த₃மில்லை என்பது 'விகல்போSவிஶிஷ்ட ப₂லத்வாத' என்ற ஸூத்ரத்தில் விளக்கப்பட்டிருக்கிறது இதை அநாதரித்து ஆசார்யர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று அடியேனுக்குத்தோன்றவில்லை. 'ப்ரதிகூலராகிறார்—ஸ்வப்ரயோஜந பரரும்" (262) என்ற சூர்ணையில் * "அவித்₃யாதி₃தே₃ாஷத்தால் வந்த ஸ்வப்ரயோஜநத்தை என்கை" என்றவித்தால் இங்குள்ளவர்களான பகவத்பரர்களில் சிலருக்கு விசேஷத்தை இங்கு கருதினது தவிர, மோக்ஷத்தில ப₂லபே₄த₃ம் கருதப்

* இங்கு எடுக்கப்பட்ட சூர்ணை 263-வது, வ்யாக்₂யானம் சூர்ணை 270ல் உளளது—ஸூத₃ர்ஶனம் ஆசிரியா.

படவில்லை என்பது ஸ்பஷ்டம். மோக்ஷத்தில் அவித்₃யைக்கு ப்ரஸக்தி ஏது? ஆகவே பிள்ளைலோகாசார்யரோ, மாமுனிகளோ மோக்ஷத்தில பே₄த₃ம் விவக்ஷிததார்கள் என்பது ஏற்படவில்லை. இது நிற்க ப்ரக்ருத ஶ்லோகத்தில் "அஸாரம்" என்ற இததால் பா₂ஹ்யகுத்₃ருஷ்டி ஶாஸ்த்ரமே விவக்ஷிதம் என்பதையும், 'வேத₃ா₂ச்சஶா₂ஸ்த்ரம் பரம் நாஸ்தி" என்றவிதில் 'பரம்' என்பது உத்க்ருஷ்டமே என்பதையும் மாமுனிகளே ஸாதித்திருப்பதை ஸ்ரீமதுராந்தகம் ஸ்வாமி ஸந்தேஹத்திற்கு இடமில்லாமல் எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆகவே ஸ்ரீவரதாசாரியர் சொன்னது மாமுனிகளுக்குக் கண்டனமேயன்றி மண்டனமன்று. மீமாம்ஸா பாஷ்யகாரர் கண்ட ஸாரதம நிஷ்கர்ஷமென்று அவர் எழுதியதற்கு ஶீர்ஷகம் இட்டிருந்தால் விவாதமேயிராது ஸஹ்ருத₃யமாக இது எழுதினேன். தவறு இருந்தால் க்ஷமிக்கவேணும் நேரில் வருவதாகவோ இவ்வளவன்றி அதிகம் சொல்வதாகவோ எனக்கு உத்₃தே₃ஶமில்லை

வே. வி.
திருமலைதாதம் (D.T.T.)

இதற்கு 'ஸுத₃ர்ஶனம்' ஆசிரியரின் பதில்

..... . ஸ்ரீ முகம ஸேவிககப் பெறறேன். ஒரு விஷயத்தைப் பற்றி ஸவிநயம் விண்ணபபிகக விருமபுகிறேன. வரத₃ாசார்ய ஸ்வாமியை ரக்ஷிப்பதறகாக—முகதியில ப₂ல பே₄த₃முண்டு எனறு அடியேன லோகாசார்ய வரவரமுனி ஸித்₃த₄ாந்தமாக ஏறிட்டுக கூறுவதாக ஸாதித்திருககிறது. இந்த தே₃ாஷம் அடியேன் பேரில ஏறுமெனபதைச் சுருககமாக நிருபிககிறேன.

(1) ஸ்ரீவசனபூ₄ஷண வ்யாக்₃யானம்.— (ஸூ 265)

"உபாயாந்தர நிஷ்ட₂ர்ககு உத்₃தே₃ஶ்யன் தே₃வதாந்தர்யாமியான ஸர்வேஶ்வரன. உபாயம் கர்மஜ்ஞாந ப₄கதிகள். உபேயம் ப₄க₃வத₃னுப₄வம்" எனபது ஸூத்ரம். இவ்விடத்து வ்யாக₂யானததில் "உபாயம் தனிததனி **மோக்ஷஸாத₄நதயா** *ஶாஸ்தர ஸித₃த₄மான கர்மஜ்ஞாந ப₄க்தியோக₃ங்கள்" என்றும் "உபேயம் 'ஸோஶ்நுதே...'*

இத்யாதி₃ ஶ்ருதிகளாலும் 'நிரஸ்தாதிஶய ..' இத்யாதி₃ உபப்₃ரும்ஹணங்களாலும் சொல்லப்படுகிற நிரதிஶய ஆநந்த₃ரூப ப₄க₃வத₃நுப₄வம்" என்றும் உள்ளது. இதி லிருந்து மோக்ஷஸாத₄நமான உபாயாந்தரங்களைப் பற்றிய வர்களுக்கு மோக்ஷத்தில் ப₄க₃வத₃நுப₄வமே கிடைக்கிறதே யொழிய ப₄க₃வத் கைங்கர்யம் கிடைப்பதில்லை என்று மிகத் தெளிவாக விளங்குகிறதே. மேலே உள்ள ஸ்ரீஸூக்தி களையும் ஸேவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

(2) முமுக்ஷுப்படி வ்யாக்யானம் — (ஸூ 184)

"மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கு என்று நின்ற திறே" என்ற ஸூத்ர வ்யாக₂யானத்தில் "விஷய வைலக்ஷண்யத்தால் வரும் ஸ்வபோ₄க்த்ருத்வபு₃த்₃தி₄ அங்கும் (பரமபதத்திலும்) விளைகையாலே" என்று ஸாதித்திருப்பதிலிருந்து முக்தர்களுக்குள்ளேயே சிலருக்கு ஆவாசீநக₃தியான கைவல்யம் எனப்படும் ஆத்மாநுப₄வ மோக்ஷத்தைத் தென்னுசார்யர்கள் ஒப்புக்கொண்டிருப்பது போலே சிலர்க்கு ஸ்வார்த்த₂மோக்ஷத்தையும் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கத் தடையில்லை என விளங்குகிறது.

(3) ஆசார்ய ஹ்ருத₃ய வ்யாக்₂யானம் — (ஸூ 62)

"ப₂ல ஸாத₄ந தே₃வதாந்தரங்களில் இவர்கள் நினைவு பேச்சிலே தோன்றும்" இந்த ஸூத்ர வ்யாக்யானத்தில "'நிரஸ்தாதிஶய ..' இத்யாதி₃களாலே ப₄க₃வத் ப்ராப்தியே ப₂லமாகவும் கர்மஜ்ஞாநாதி₃களே உபாயமாகவும்" ரிஷிகள் சொல்லுவதாகவும் "'தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே' 'வழுவிலா அடிமைசெய்யவேண்டும் நாம'என்று கைங்கர்யம் புருஷார்த்த₂மாகவும் தத் ஸாத₄நம் 'நாகணைமிசை நம் பிரான் சரணே சரண்' 'அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' என்கிற ப்ரபத்தியாகவும்" ஆழ்வார்கள் அருளுவதாகவும். மாமுனிகள் மிகத்தெளிவாக அருளியுள்ளார். இவற்றி லிருந்தே முக்தியில ப₂லபே₄தம் இவ்வாசார்யர்களுக்குத்

திருவுள்ளம் என்று தெளிவாக விளங்குகிறதே இவ் விடங்களை ஸ்வாமி எனக்கு கடாக்ஷித்துத திருவுள்ளத்தை நியமிக்கப் பிரார்த்திக்கிறேன்.

தா3ஸன்,
ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
'ஸுத3ர்ஶனம்' ஆசிரியர்

இதற்கு ஸ்ரீஉ.வே. D.T. தாதாசார்ய ஸ்வாமியின்பதில்

விஜ்ஞாபநம். உபயகுஶலோபரி ஸ்ரீமுகம் ஸேவித்தேன் "ஏறிட்டு" என்று எழுதினதாக எனக்கு நினைவில்லை. "ஸம்ப3ந்த4ப்படுத்தி" என்று எழுதியிருப்பதாகவே நினைவு. இன்னொரு தரம் கடிதத்தை வாசித்துப்பார்க்கவும். ஏறிட்டு என்றிருந்தால் அது என் அநவதா4நத்தால் வந்தது. நான் கருதியது அதன்று. முமுக்ஷுப்படி 184ல் "நித்யஸூரிகள் பேசும் பாசுரமாக" என்றிருப்பதால், மோக்ஷத்தில் எல்லோருக்கும் ஸ்வபோ4க்த்ருத்வ பு3த்3தி4 விளையலாம் என்பது விவக்ஷிதமேயன்றி ப2லபே4த3ம் சொன்னபடியன்று என்று தோன்றுகிறது *மற்ற இடங்களிலும் ப2லபே4த3ம் தோன்றினாலும் 'விகல்போऽவிஶிஷ்டப2லத்வாத்'* என்ற ப்3ரஹ்மஸூத்ரத்திற்கும் அங்குள்ள ஸ்ரீபா4ஷ்யத்திற்கும் விரோத4ம் வராமல் அவைகளை நயனம் பண்ணுவது உசிதம் ஆனால் *இதைப்பற்றி அதிகம் சொல்ல அடியேன் விரும்பவில்லை* ப்ரக்ருத விவாத3ம் மாமுனிகள் கண்ட ஸாரநிஷ்காஷம் ஸ்ரீமான் வரதாசாரியர் சொன்னபடியா அன்று என்பது. அன்று என்பது மாமுனிகள் ஸ்ரீஸூக்திகளாலேயே ஸ்பஷ்டம். *மேல் விசாரிக்க வேண்டியது ஒன்றுமில்லை.*

வே. வி.
திருமலைதாதம்

ஸுத3ர்ஶனம் ஆசிரியரின் குறிப்பு

வரத3ாசார்யஸ்வாமியை ரக்ஷிப்பதற்காக அடியேன் ப2லபே4த3பக்ஷத்தைச் சொல்லுவதாக ஸ்பஷ்டமாக ஸ்வாமி எழுதியிருக்கிறார். இதிலிருந்தும், மேலே ப2ல பே4த3 பக்ஷத்தை மாமுனிகள் ஆதரிக்கவில்லை என்று எழுதி

யிருப்பதிலிருந்தும். இல்லாததை ஏறிட்டு அடியேன் எழுதினேன என்று ஸ்வாமி திருவுள்ளம பற்றியிருக்கிறார என்பது தெளிவாக விளங்குகிறது. 'ஏறிட்டு' என்றது ஆத்க₂ாநுவாத₃மேயொழிய ஶப₃க₃ாநுவாத₃மலல. நிறக.

மாமுனிகள் ஸ்ரீஸூக்திகளிலிருந்து [ஸ்ரீவசநபூ₄ஷண (265) ஆசாரயஹ்ருத₃ய (62) வ்யாக₂யானஙகளில] பூ₂ல பே₄த₃ம தோனறுகிறது என்று இரண்டாவது கடிததததில ஸ்வாமி இசைந்துவிட்டார். அதறகுமேல அதை ப₃ரஹ்ம ஸூத்ர தத₃பூ₄ாஷயாநுகு₃ணமாக நயநம செய்யவேணடும எனகிறார. எபபடி நயநம செய்வதெனபது பற்றி 'அதிகம சொலல விருமபவிலலை எனகிறார். மாமுனிகள் ஸ்ரீஸூக்திகள் மிகத்தெளிவாக உளளன. ப்₃ரஹ்மஸூதர தத்₃பூ₄ாஷ்யங்கள் முகதியில ஆநநத₃ தாரதம்யம கிடையாது என்பதில் நோககுடையவையாகையாலே அவறறுககும லோகாசாரய வரவரமுனிகள் திருவுளளமபறறிய பூ₂லபே₄த₃பக்ஷததிறகும விரோத₄லேஶமும் கிடையாது என்று மஹானகள் நிரூபிததிருககிறாகள. ஆக, இவ்வணணமாக லோகாசார்ய வரவரமுனிகள முகதியில பூ₂லபே₄த₃த்தைதத திருவுள்ளமபறறியிருககிறார்கள் என்று தேறியபினபு. அதறகனுகு₃ணமாக பராரதத₂ கைங்கர்யமும பரக₃தஸ்வீகாரநிஷ்டை₂யும ஸாரதமமெனறு மாமுனிகள் திருவுள்ளம பற்றினார் என்று விளங்குகிறது. ஆகையால ஸ்ரீவசநபூ₄ஷண மீமாமஸாபூ₄ாஷயகாரரும, நிஷ்காஷ நிகஷகாத்தாவும மாமுனிகள் கணட ஸாரதமாாதத₂ததை நிஷகர்ஷித்து. அதற்கு அநுகு₃ணமாக "அஸாரம' என்ற தொடங்கும் ஶலோகத்திற்குப பொருள் கூறியதில குறையொன்றுமிலலை என்றும ஸவதநதரமாக அவர்கள் எதையும் எழுதிவிடவிலலையெனறும் விளஙகுகிறது. வரத₃ாசார்யஸ்வாமியை ரக்ஷிப்பதற்காக இலலாத பூ₂லபே₄த₃பக்ஷத்தை அடியேன சொனனதாக தாதாசாரய

ஸ்வாமி கூறினார். ப$_2$லபே$_4$த$_3$பக்ஷம் மாமுனிகள் ஸ்ரீஸூக்தியிலிருந்து தாதாசார்ய ஸ்வாமியே மறுக்கவொண்ணாதபடி விளங்கிவிட்டது. ஆகையால், ஸ்வாமியின் வாக்குப்படியே வரதாசார்யஸ்வாமி ரக்ஷிக்கப்பட்டுவிட்டார் என்பதும் தை$_3$வவஶாத்தாலே தேறிநிற்கிறதென்பதை நடுநிலையாளர் குறிக்கொள்ளவேணும். நிற்க.

ப$_2$லபே$_4$த$_3$ விஷயத்திலும், பரபக்த்யுபாயத்வ விஷயத்திலும் ஸம்ப்ரதா$_3$யபே$_4$த$_3$ம் உள்ளதா இல்லையா என்பதே முக்கிய விவாத விஷயம். அதை மறைத்து, "அஸாரம்' என்று தொடங்கும் ஶ்லோகார்த்த$_2$மே முக்கிய விவாத$_3$ விஷயமென்றும், "வேதா$_3$ச்சா$_2$ஸத்ரம் பரம்" என்றவிடத்தில் பரஶப்$_3$த$_3$ம் அந்யவாசியா, உத்க்ருஷ்டவாசியா என்பதே முக்கிய விவாத$_3$விஷயமென்றும் வாத$_3$ம் செய்வது முறையன்று. "அஸாரம்" என்பது பொதுப்படையான ஶ்லோகம். அதை அவரவர் புத்திக்கு அநுகு$_3$ணமாகப் பற்பல விஷயங்களில் ஸமந்வயப்படுத்திப் பலபல பொருள்கள் உரைக்கலாம். உதா$_3$ஹரணமாக, பரத்வாதி பஞ்சகங்களில் அஸாரமும், அல்பஸாரமும், ஸாரமும், ஸாரதரமுமான பரவ்யூஹாதி$_3$களை விட்டு ஸாரதமமான அர்ச்சையையே பற்றவேண்டும் என்று கூட அதற்குப் பொருள் உரைக்கலாம். "வேத$_3$ ஸாரோபநிஷத ஸாரதரானுவாக ஸாரதம கா$_3$யத்ரி" என்ற ஆசார்ய ஹ்ருத$_3$ய சூர்ணையில் அத்தையொரு பொருள் அந்த ஶ்லோகத்திற்கு விவக்ஷிக்கப்பட்டது. இங்கு விஷ்ணுகா$_3$யத்ரிக்கு ஸாரதமத்வமும், நாராயணாநுவாகத்துக்கு ஸாரதரத்வமும், மற்ற உபநிஷத்$_3$ பா$_4$க$_3$த்திற்கு ஸாரத்வமும். பூர்வ பா$_4$க$_3$த்திற்கு அல்பஸாரத்வமும் சூர்ணையில் தெளிவாகக் காட்டப்பட்டுவிட்டதாகையால் பா$_3$ஹ்யகுத்$_3$ருஷ்டி ஶாஸ்த்ரங்களை அஸாரமாகச் சொல்லவேண்டிய நிர்ப$_3$ந்த$_4$ம் ஏற்பட்டுவிட்டது. இதுகொண்டு இந்த ஶ்லோகத்திற்கு வேறு பொருள்கள் உரைக்குமிடங்களிலெல்லாம் அஸார

ஶப்₃த₃த்திற்கு பா₃ஹ்யகுத்₃ருஷ்டி ஶாஸ்த்ரம் என்றே பொருள்கொள்ளவேணும் என்று நிர்ப்பந்தப்படுத்துவது நியாயமன்று. ஆசார்ய ஹ்ருத₃ய வ்யாக்₂யானத்தில் வேறு வழியில்லாமையாலே அஸார ஶப்₃த₃த்திற்கு பா₃ஹ்ய குத்₃ருஷ்டி ஶாஸ்த்ரங்கள் பொருளாகக் கொள்ளப்பட்டன. ப்ரமேயார்த்த₂விஷயத்தில் இந்த ஶ்லோகத்தை ஸமந்வயப் படுத்தும்போது ஶாஸ்த்ரஶப்₃த₃த்துக்கு அதிகெ₃ளணாத₂ம் கொள்ளவேண்டியிருக்கும் அப்பொருளைக் கொள்ளாமலே பொருள் கூறலாம் என்று ஸ்ரீவசநபூ₄ஷணமீமாம்ஸா பா₄ஷ்யகாரர் காட்டினர்.

இனி, “ முக்தியில் ப₂லபே₄த₃ம் கொள்ளும் வரவரமுனி பக்ஷத்தில் ஸ்ரீவசநபூ₄ஷணமீமாம்ஸா பா₄ஷ்யகாரர் காட்டிய பொருள் ஸ்வரஸமே; முக்தியில் ப₂லபே₄த₃மில்லை என்னும் கொள்கையுடைய ஸ்ரீ வேதா₃ந்த தே₃ஶிகர் தம் பக்ஷத்தில் ஸாரதம்ம முதலானவை வேறுபடுகையால பா₃ஹ்யகுத₃ருஷ்டி ஶாஸ்த்ரங்களை அஸாரமாகக் காட்டியதில் குறையில்லை. அப்படிக் கூறியதை அநவாருஹ்யவாத₃மாக ஸ்ரீவசநபூ₄ஷணமீமாம்ஸா பா₄ஷ்யகாரர் கூறியது முறையாகாது” என்று ஸ்ரீ தே₃ஶிக ப₄க்தர்கள் கூறக்கூடும். ஸ்ரீ உ. வே. D. T. தாதாசார்ய ஸ்வாமியும் இக்கருத்தைத் தம் முதல் ஸ்ரீமுகத்தில் உணர்த்தியுள்ளார். நடுநிலைநின்று விமர்ஶிக்கும்போது நாம் இதை ஏற்கவேண்டியவர்களா யிருக்கிறோம். “ முக்தியில் ப₂லபே₄த₃த்தை ஒப்புக்கொள்ளும் வரவரமுனி ஸம்ப்ரதா₃யத்தில் ‘ அஸாரம் ’ என்று தொடங் கும் ஶ்லோகத்திற்கு ஸ்ரீ வசநபூ₄ஷணமீமாம்ஸா பா₄ஷ்யத்தில் காட்டிய பொருளே நியாயமானது. முக்தியில் ப₂ல பே₄த₃த்தை ஒப்புக்கொள்ளாத தே₃ஶிக ஸம்ப்ரதா₃யத்தில் ஸ்ரீவேதா₃ந்த தே₃ஶிகர் காட்டிய பொருளே நியாயமானது ” என்று இந்த விவாத₃த்தில் ஓர் ஸமாதா₄னம் ஏற்படுவ தானால் பெரிதும் மகிழ்ச்சியடைவோம். வாதி₃ப்ரதி வாதி₃களான ஸ்ரீ உ. வே. மது₄ராந்தகம் ஸ்வாமிகளும்,

ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரத3ாசார்ய ஸ்வாமிக்கும் இதை 18—8—71 அன்று அனுப்புகிறோம். 20—8—71க்குள் அவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்தார்களானால் இம்மாத ஸுத3ர்ஶனத்திலேயே அதைப் பிரசுரம் செய்யலாம்.

"வேதா3ச்சா2ஸ்த்ரம் பரம் நாஸ்தி" என்றவிடத்தில் "வேதத்தைக் காட்டிலும் வேறு ஶாஸ்த்ரமே கிடையாது" என்று பொருள் கூறுபவர்களுக்குக் கருத்து என்ன என்பதை மற்றவர்கள் உணரவேணும். "வேத3ம் ஒன்றே நிருபாதி4க ஶாஸ்த்ரம்; மற்றவை எல்லாம் அந்த வேத3த்திற்கு உபப்3ருமஹணமாயிருப்பதன்மூலம் ஶாஸ்த்ரத்வத்தைப் பெற்ற ஸோபாதி4க ஶாஸ்த்ரங்களாகையால். வேறு நிருபாதி4க ஶாஸ்த்ரம் கிடையாது" என்பதே அவர்கள் கருத்தாகும். 'வேத3த்தைக் காட்டிலும் மேலான ஶாஸ்த்ரமில்லை" என்னும் பொருளும் இப்பொருளில் அடங்கியிருக்கிறதாகையால். அப்படிப் பொருள்கூறுவதிலும் தவறொன்றுமில்லை. ஆகையால் இதில் வீண் விவாத3ம் வேண்டாம் என்பதே அடியேனது அபி4ப்ராயம்.

நமது சமாதான முயற்சியும்
மதுராந்தகம் ஸ்வாமியின் போர்முரசுக் கடிதமும்

நமது ஸ்ரீவைஷ்ணவ ஸுத3ர்ஶனம் விஶிஷ்டாத்3வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்3தா4ந்தத்தை ஸம்ரக்ஷிப்பதற்காக சுமார் 24 வருடங்களுக்கு முன் எந்தையாரால் தொடங்கப் பெற்றது. "ப4க்தாநுக்3ராஹகம் புண்யம் ப்ரதிபக்ஷநிராஸகம், ஜீயாதா3சந்த்3ர நக்ஷத்ரம் ஸ்ரீவைஷ்ணவ ஸுத3ர்ஶநம்" என்னும் ஶ்லோகம் இப்பத்திரிகையின் கொள்கையை விளக்கும் மங்க3ளாஶாஸந ஶ்லோகமாக அன்று முதல் இன்று வரை விளங்கிவருகிறது. எம்பெருமானுடைய அழகிய திருக்கண்களும் திருவாழியாழ்வானும், விஷ்ணுவைப் பரம பொருளாகக்கொண்ட அழகிய மதமுமாகிற ஸுத3ர்ஶனங்களைப்போலே, இப்பத்திரிகையாகிற ஸுத3ர்ஶனமும்

பக்தர்களை அநுக்ரஹிப்பதாகவும், எதிரிகளை நிரஸிப்ப தாகவும் விளங்கி வருகிறது; அவனடியார்களுக்கு அருளார் திருச்சக்கரமாகவும், அவனுக்கும் அவனுடைய அடியார் களுக்கும், அவனுடைய தர்ஶனத்திற்கும் விரோதிகளுக் குக் கருதுமிடம் பொருது கைநின்ற சக்கரமாகவுமே பிரகாசித்து வருகின்றது ஸ்ரீவைஷ்ணவர்களோடு விவாதம் செய்வதில் நமது ஸுதர்ஶனத்திற்கு என்றுமே ருசி கிடை யாது. பகவானையோ, பூர்வாசார்யர்களையோ எவராவது குறைவுபடுத்தி எழுதினாலோ, பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி களுக்கு அவப்பொருள் உரைத்தாலோதான் நமது ஸுதர் ஶனம் ஸ்ரீவைஷ்ணவர்களோடு விவாதத்தில் இறங்கும். அந்த விவாதங்களும் நீண்டநாள் நீடிக்கமாட்டா. விவாதம் நடக்கும் சில நாட்களிலும் 'நாம் விவாதம் நடத்துவது ஸ்ரீவைஷ்ணவர்களோடு' என்று நினைவிற்கொண்டு, பண்பு தவறிய வார்த்தைகள் எதுவும் வராமல் பார்த்துக்கொள் ளும் இது ஸுதர்ஶனத்தின் பண்பு.

உள்ளதான ஸம்ப்ரதாயபேதத்தை அழித்துப் பல பல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு மதுராந்தகம் ஸ்வாமி யால் ஸம்ப்ரதாயஸுதையிலும், ஸாரதம நிஷ்கர்ஷத்தி லும் அவப்பொருள் உரைக்கப்பட்டதாலேயே ஸம்ப்ரதாய பேதவிஷயத்தில் உண்மையை நிலைநாட்டுவதற்காகப் ப்ரக்ருதமான நிஷ்கர்ஷநிகஷ விவாதத்திற்கு ஸுதர்ஶனம் இடம் அளித்தது. இந்த விவாதம் நடந்துகொண்டிருக்கும் போது சில முறை நாம் மதுராந்தகம் ஸ்வாமியை சந்திக்க நேரிட்டது. அப்போது அவர் "ஸம்ப்ரதாயபேதம் 18 விஷயங்களில் மாத்திரமல்ல, 81 விஷயங்களில் இருந்தாலும் இருக்கட்டும். அதுபற்றி எனக்குக் கவலையில்லை. தேஶிகன் அஸாரேதயாதிஶ்லோகத்திற்குக் கூறிய பொருள் அநுசிதம் என்று வரதாசார்ய ஸ்வாமி கூறியதும், அதை நீர் வெளி யிட்டதும்தான் என் நெஞ்சை மிகவும் புண்படுத்துகிறது' என்று கூறிவந்தார். அப்போதெல்லாம், "ஒரு பூர்வா

சார்யர் ஒரு ஶ்லோகத்திற்கு எழுதிய பொருள் அநுசிதம் என்று எழுதியதற்கும், வெளியிட்டதற்கும் இவ்வளவு புண்படும் தே₃வரீர், தே₃வரீருடைய ஸம்ப்ரதா₃யத்தைச் சேர்ந்தவர்கள் நடத்திவரும் ஒரு ஸ்ரீவைஷ்ணவ பத்திரிகை பல பூர்வாசார்யர்களைக் கலிபுருஷனின் அவதாரம் என்று ஒருவர் எழுதியதை வெளியிட்டதற்குச் சிறிதாவது மனம் புண்பட்டதாகவோ, அதைக் கண்டித்ததாகவோ தெரிய வில்லையே! அதைக் கண்டிக்காததோடன்றியில், அதைக் கண்டித்த அடியேனைக் கண்டபடி தூற்றியும் அப்படி எழுதியவருக்குப் பரிந்துகொண்டும் அடியேனுக்கே கடிதங் கள் எழுதினீரே! இது நியாயமா?'' என்று சொல்லத் தோன்றிற்று. ஆயினும் பண்புகருதி அப்படிச் சொல்லா மலே இருந்து வந்தேன். (உலகிற்கு உண்மையைத் தெளிவுபடுத்தவேண்டி இப்போது இதை வெளியிடு கிறேன்.) நிற்க.

பிறர் எப்படி நடந்தாலும், நாம் நேர்மையாக நடந்து கொள்ளவேண்டும் என்னும் கொள்கையுடையோமாகை யால், ஸ்ரீதே₃ஶிகருக்கு ஸ்வல்பம் குறை விளங்கும் கட்டுரையை வெளியிட்டதற்கு ஏதாவது பரிஹாரம் செய்ய முடியுமா என்றும் ஆலோசித்து வந்தேன். நன்கு ஆலோ சித்தபோது, முக்தியில் ப₂லபே₄த₃ம் இல்லை என்னும் உறுதியான அபி₄ப்ராயம் காரணமாகவே ஸ்ரீவேதா₃ந்த தே₃ஶிகர் ''அஸார'' ஶப்₃த₃த்திற்கு பா₃ஹ்யகுத்₃ருஷ்டி ஶாஸ்த்ரங்கள் என்னும் கௌ₃ணார்த₂த்தைக் கொண்டாரே யொழிய, ஸ்ரீவசநபூ₄ஷணமீமாம்ஸா பா₄ஷ்யகாரர் ஸாதித் ததுபோல அந்வாருஹ்யவாத₃மாக அதைக் கூறவில்லை என்று தெளிவாக அடியேனுக்குப் புலப்பட்டபடியால், அதைக் கீழே கண்டவாறு அச்சிட்டு அதில் ஒவ்வொரு காபியை வரதாசார்ய ஸ்வாமிக்கும், ''தென்னாசார்யர்கள் முக்தியில் ப₂லபே₄த₃த்தைத் திருவுள்ளம் பற்றினார்கள்'' என்று அடியேன் எழுதியிருந்ததை விளக்குமாறு கேட்டிருந்த

ஸ்ரீ உ. வே. திருமலைநல்லான ராமகிருஷ்ணய்யங்கார் ஸ்வாமிக்கும் தபால்மூலம் அனுப்பினேன்.

நிக்ஷேப நிகஷம வெளியாகத் தொடங்கியபிறகு ஸம்ப்ரதாயஸாரத்திலும், ஸாரதம நிக்ஷேபத்திலும் தாம்கொண்டிருந்த 'ஸம்ப்ரதாயபேதமே கிடையாது' என்னும் நிலையைக் கைவிட்டு "18 என்ன, 81 விஷயங்களில் ஸம்ப்ரதாயபேதம் இருந்தாலும் ஆக்ஷேபமில்லை' என்று மதுராந்தகம் ஸ்வாமி பேசத்தொடங்கியிருந்தபடியாலும், உள்ளதான ஸம்ப்ரதாயபேதத்தை முறகூறிய இருநூல்களிலும் அழித்துப் பேசியிதே நமக்கு முக்கியமான ஆக்ஷேபவிஷயமாயிருந்ததாகையாலும், நேரில் சென்று நம கருத்தை விளக்கினால் மதுராந்தகம் ஸ்வாமி நாம காட்டிய வழியில ஸமாதானத்திறகு இசைவார் என்று தோனறியபடியால ஸ்ரீ உ. வே. ஸதாபிஷேகம ஸ்வாமியையும அழைததுககொண்டு, ஸ்ரீ உ. வே. மதுராந்தகம் ஸ்வாமியின திருமாளிகைககு 18—8—71 இரவு 7-30 மணிககுச் சென்று, லேசநவிவாதநிகமனம என்னும் இவ் வெளியீட்டில் அதுவரை அச்சாகியிருந்த பகுதியின சில பிரதிகளை அவரிடம் அளிதது, அதில "ஸ்ரீ உ. வே. D. T. தாதாசார்ய ஸ்வாமியின ஸ்ரீமுகம" என்று தொடங்கியுள்ள பகுதியை நேரிலேயே வாசிததுகாட்டி அடியேன கருத்தை விளககினேன. அபபோது அங்கு இருநதவரும், மதுராந்தகம் ஸ்வாமியின் சிஷ்யரும, திருச்சி நாஷனல கலலூரி விரிவுரையாளராயிருப்பவருமான ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸராகவன் ஸ்வாமியும் அடியேன காட்டியுள்ள ஸமாதானவழி நியாயமானதென்றும, அதன்படி ஸமாதானமாவதே நலலது என்றும் கூறினார், அடியேனுக்கும், மதுராநதகம ஸ்வாமிககும ஒருபுறமும், ஸதாபிஷேகம ஸ்வாமிக்கும, மதுராந்தகம் ஸ்வாமியின ஜாமாதாவான வரதாசார்ய ஸ்வாமிக்கும் ஒருபுறமும் நீணடநேர சாச்சை நடந்தது. 'நீர் முன்னுரையில என்னுடைய

ஸாரதம நிஷ்கர்ஷத்தைப பித்தளேயென று குறிபபிட்டதை வாபஸபெறவேணடும.' என்ருர மது₄ராந்தகம ஸ்வாமி. "தேவரீர பர-த்த்யுபாயதவததையும, ஸ்வார்த்த₂ கைஙகாயததையும் தென்ஞசாாயாகள ஆதரிததாாகள் என று அதில எழுதியதாலேயே அடியேன அபபடி எழுதினேன' என று அடியேன விணணப்பிததேன. இதே ரீதியில, தம் கெள₃ரவததைக காபபாற்றிக கொள்வதறகாக விவாத₃த்தைத தொடரவேணடும என னும திருவுள்ளத தோடு வாாததை சொலலிககொணடிருந்தார். "இககாலததி லுள்ள நமககெலலாம எததனை கெள₃ரவம இருககிற தெனபது நமககே தெரியும, உலகிறகும் தெரியும, ஆசையால் நம கெள₃ரவததைபபறறிக கவலைபபடாமல பூாவாசார்யாகளில எவர்ககும கெள₃ரவக்குறைவு ஏற படாதபடி அடியேன காட்டிய வழியில ஸமாத₄ானமடை வதே நம அனைவர்க்கும் கெள₃ரவம; இதற்கிசையாமல சாச்சையை எழுத்துமூலமாகவோ, ஸத₃ஸ் நடத்தியோ தொடாநதால நம அனைவாககும இகழசசி ஏற்படுமே யொழிய கெள₃ரவம அதி₄சரிககாது' என்று அடியேன் எடுததுககாட்டியபின்பு ஸமாத₄ானததிறகு ஒருவாறு இசைநதாா. இசைவுக கடிததததை மறுநாள் தபாலில அனுப்பும்படி பிரார்ததிததுவிட்டு அடியேன திரும்பினேன.

சமாதானக கடிதத்தை 20—8—71 அன்று ஆவலுடன எதிாபார்ததிருந்த அடியேனுககு மது₄ராந்தகம ஸ்வாமி யிடமிருநது போர்முரசுககடிதம கிடைததது. அதில அவர் அடியேனைப் பொய்யன என்றும வஞ்சகன என்றும் பலவாறு தூறறியிருநதாா "குறறஞசெயதவாகள் பககல பொறையும, கருணையும சிரிபபும, உகப்பும், உபகாரஸம்ருதியும் நடககவேணும" என்னும் ஸ்ரீஸூகதிரததைதை அனுஸந்திதது, பொஙகிய நெஞசததை அமைதிப்படுததிக கொண்டேன்.

இனி, இக்கடிததததில ஸாரமாயுள்ள பகுதிகளை ஆராய்ந்து நம கருத்தைத் தெரிவித்துவிட்டு லேக₂ந விவாத₃த்தை நிறைவுபடுததிககொள்வோம.

எதையும் திரித்துக்கூறும் தர்க்கபாண்டித்ய பரகடந மாகவே மதுராந்தகம் ஸ்வாமியின கடிதம அமைந்திருக கிறது. முதல் பாராவில "அடியேன குறிப்பிட்ட மத்யஸதரை தேவரீரும மத்யஸ்தராககியது" எனறு எழுதுகிறா. இது சரியலல. "உபயஸமபரதாய விதவான கள் சிலரை மத்யஸ்தராக மதுராநதகம ஸ்வாமி குறிப பிட்டிருககிறார் . அநத மதயஸத விதவானகளுககும, மறறும வ்யபதிஷட விதவானகளுக்கும அடியேனுடைய பிராாத்தனை அசசிட்டபபட்டு அவாகளுககு (6—8—71) அனறு அனுபபபபடுகிறது" எனறு அடியேன வேண்டு கோளில் அச்சிட்டிருக்கிறேன். இதிலிருந்து மதுராநதகம ஸ்வாமி குறிபபிட்டவர்களோடு மற்றும பலரையும சேர்ததே அடியேன மத்யஸதராககியுள்ளேன எனறு தெளிவாக விளஙகுகிறது. இவர் மத்யஸதரைக குறிப பிடுமுன அடியேனையோ, வரதாசாாய ஸவாமியையோ கலந்துகொள்ளவிலலே. மனனாகுடி ஸதஸஸில தமமை ஒருவாாததை கேளாமல தமமெதிரிலேயே D.T தாதாசார்ய ஸ்வாமியிடம இவர் அபிப்ராயபதரிகை கேட்டார் எனறும், அவர் 'இதெலலாம எதற்கு' என்று கூறினர் எனறும வரதாசாாய ஸ்வாமி கூறினர். இதிலிருந்தும ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி எழுதியிருப்பதிலிருநதும இவர் போகுமிடமெல லாம் பலரிடம அபிபராயம் கொடுககவேண்டும் எனறு கேட்டுககொண்டிருந்திருககிறார் என்றும், அவர்களில் தமக்கு ஸாதகமாகக கொடுப்பதாக ஒப்புக்கொண்டவர்களோடு, அப்படிக் கொடுபபார்கள் என்று தாம் நமபியவாகள சிலரையும் சேர்த்து மத்யஸதராகக் குறிப்பிட்டிருககிறா எனறும் விளங்குகிறது. இவர்களை நாம ஒபபுக்கொணடு விட்டதாகவும், இவாகளுக்குமேல சிலரை நாம அபிபராயம கேட்டிருபபதையும, அவர்கள் கொடுததிருககும் அபிபரா யங்களையும தாம ஒப்புககொள்ளமுடியாது என்றும இவர் வாதம்செய்வது விநதையாயிருககிறது! நமமுடைய மத யஸதரை இவா ஒபபுககொள்ளவிடில, இவா குறிப

பிட்ட மத்$_4$யஸ்த$_2$ரை மட்டும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று நிர்ப்பந்தம் என்ன? இதைக்கூடப் புரிந்து கொள்ளாததுபோல வாதம் செய்யும் இவரோடு சர்ச்சை செய்வதால் நற்பயன் ஏதாவது ஏற்படுமா என்பதை நடு நிலையாளர் சிந்திக்கவேண்டும்.

இரண்டாவது பாராவில்.— ஆழ்வார்திருநகரி ஸ்வாமியும், D. T. ஸ்வாமியும் இவருக்கு ஸாத$_4$கமாகத் தெரிவித்திருப்பதாகவும், ஆழ்வார்திருநகரி ஸ்வாமி இவருக்கும் தம் கடிதத்தின் காபியை அனுப்பியிருப்பதாகவும், 'ஸுதர்ஶநம் பத்ராதிபர் தேவரீருடையதை ப்ரகாசம் செய்ய மாட்டார்' என்று மறுதினமே அவருக்குத் தாம் பதில் எழுதினதாகவும். அதை அடியேன் உண்மையாகக் உள்ளதாயும், மற்றவர்களும் இவர் பக்ஷத்தை ஆமோதிக்கை யாலேயே அவற்றை அடியேன் மறைத்துவிட்டதாகவும் கண்டபடி அடியேனைத் தூற்றுகிறார். கோபம் அறிவை மறைக்கையால் உண்மையைக் காணமாட்டாமல் இவர் இப்படித் தூற்றுகிறார் என்பதை நடுநிலையாளர் ஏற்கும் படி காட்டி, இவர் எந்த ஆழ்வார்திருநகரி ஸ்வாமியின் கடிதத்தைத் தமக்கு ஸாத$_4$கமென்று கே$_4$ாஷிக்கிறாரோ, அதையும், அவர் எழுதியுள்ள மற்ற கடிதங்களையும் பிரசுரித்து அவை இவருக்கு பா$_3$த$_4$கமேயொழிய ஸாத$_4$கமன்று என்பதையும் வெளிப்படுத்துகிறேன்.

அடியேன் வித$_3$வான்களுக்குப் பிரார்த்தனை அனுப்பியது 6—8—71ல். அவர்கள் பதில்கள் 16—8—71க்குள் வந்தன. 17—8—71ல் அடியேன் லேக$_2$நவிவாத$_3$ நிக$_3$மனத்தை எழுதி அச்சிடத்தொடங்கினேன் என்பதை அதன் முதல் பக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். அதில் ஒரு பகுதியை மாத்திரம் ஒரே நாளில் அச்சிட்டு ஸமாதானத்திற்கு ஒரு வழி காட்டி அதை எடுத்துக்கொண்டு 18—8—71 அன்று இவர் திருமாளிகைக்கே சென்றிருக்கிறேன். இப்பிரசுரம் ஸஷேஷம் என்பது 212ம் பக்கத்திலேயே தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. இப்படியிருக்கும்போது இவர் அடியேன் அபிப்ராய பத்திரிகைகளை மறைத்து

விட்டேன் என்று குற்றஞ்சாட்டுவதற்கு ஆத்திரம் தவிர வேறு காரணம் இருக்கமுடியுமா? நிற்க; இவர் தமக்கு ஸாத₄கமாக முழங்கும் ஆழ்வார்திருநகரி திருமலைநல்லான் ஸ்வாமியிடமிருந்து வந்திருக்கும் மூன்று கடிதங்களையும் ஒவ்வொன்றாக ஒருவரிவிடாமல் அச்சிட்டு இவர்க்கு அவை பா₃த₄கமாகவே இருக்கின்றன என்பதைக் காட்டுகிறேன்.

முதல் கடிதம்

ஸ்ரீமதித்யாதிப்படி எழுந்தருளியிருக்கும் ஸுதர்சனம் பத்ராதிப ஸ்வாமி ஸந்நிதியில் தண்டம் ஸமர்ப்பித்த விண்ணப்பம் ஸ்ரீமுகமும் அச்சிட்ட வேண்டுகோளும் கிடைத்தன

ஸ்வாமி ஸ்ரீமுகப்படி உடனே பதிலெழுதவியலவில்லை. காரைப்பைங்காட்டு ஸ்வாமி திருநாடலங்கரித்ததால் நேர்ந்த வேதனை ஒன்றுமே தோன்றாதவாறு செய்துவிட்டது "ஒரொருவருண்டாகில்" என்ற நிலையிலுள்ள நம் ஸம்ப்ரதாயம் "ஆளற்றப் பட்டு" ஏங்குகிறதே என்கிற ஏக்கம் தாமஸிப்பதற்குக் காரணமாயிற்று. மன்னித்தருளவேணும்.

நிஷ்கர்ஷநிகஷ விஷயங்கள் ஸ்வாமி நியமநத்தால் யத₂மதி பரிசீலிக்கப்பட்டன. *முன்னுரையில் தேவரீர் எழுதியவற்றை அடியேன் ஏற்கிறேன். "தனக்கேயாக எனைக்கொள்ளவேணும் என்று நிஷ்காஷிகும் ஆழ்வாரையும் அவரடிபணிந்தாரையும் ஸாத₄நஸமாபன்ன நிஷ்ட₂ராக ஸ்ரீவசநபூ₄ஷணத்திலேயே அருளிச்செய்திருப்பதாக* (மது₄ராந்தகம் ஸ்வாமி) *வருணிப்பதுவிநதையே' இது ஆக்₃ரஹக்₃ருஹீதம்.*

ஆயின் "நிகஷகாரர்" தத்த்வஶேக₂ர ஸ்ரீஸூக்திக்குப் பதில் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறார். ந்யாஸம் வேறு. ஶரணாக₃தி வேறு என்னும் ஸித்₃தா₄ந்தத்தைக் கடைப்பிடிக்கும் நிகஷகாரர் ஶரணாக₃திபர்யாயமாக "ந்யாஸம், நிக்ஷேபம்" என்னும் சொற்கள் வழங்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். இதுபோல் பூர்வாசார்யர்கள் பல இடங்களில் பாயாயமாக வழங்கியுள்ளனர் ஆக்₂யாபே₄த₃ம் (பெயரில் வேறுபாட்டை) இங்கே காணோம். மதுராந்தகம் ஸ்வாமி கூறும் ஸ்வகதஸ்வீகார ப்ரபத்தி என்னவுமொண்ணாது. சரணாகதி சப்தமுமுள்ளது கவனிக்கவும்.

இதுபோல் இன்னும் விஷயங்களும் கவனிக்கத்தக்கன. "மோக்ஷயிஷ்யாமி" என்னும் பரக₃தஸ்வீகாரம் ஶரணவரணததின் ப₂லமாக ஸ்ரீவசநபூஷண மீமாம்ஸையிற் கூறப்பட்டுள்ளது.

(ஸூத 135பக்கம்) ஆனால் மோக்ஷயிஷ்யாமி என்கிற ப₄க₃வத₃நு க்₃ரஹத்துக்கு விஷயமாக ஸ்வக₃தஸ்வீகார நிஷ்ட₂னை ஸ்ரீவசந பூ₄ஷண (266) வியாக்யாநத்தில் மணவாளமாமுனிகள் அருளி யுள்ளார் சரணாகதிவிதிபரமாக "ஶரணம் வ்ரஜ" என்பதை எடுத்துக்காட்டி "ओमित्यात्मानं युञ्जीत" என்பது ந்யாஸத்தை விதிப்பதால் இரண்டும் வேறுபட்டவை (ஸூதர் 140) என்று நிரூபிக்கும் மீமாம்ஸை மணவாளமாமுனிகள் ஸ்ரீஸூக்தியோடு முரண்படுவதைக் காண்க.

மாமுனிகள் கண்ட ஸாரதம நிஷ்கர்ஷம் வேறு அது ஆசார்யஹ்ருதயகாரர் காட்டக்கண்டது. அதனை மீமாம்ஸையிற் கண்டதோடு பொருந்தவிட அயோத்தி ஜீயா அரும்பாடுபடுகிறார் கட்டுரை "மீமாம்ஸாகாரர் கண்ட வேத₃ாந்தஸாரம்" என்னும் தலைப்பு புனைவது நலம்.

முடிவில் ஒரு வார்த்தை ப₄க்திநிஷ்ட₂னுக்கு அநுப₄வமே ப₂லன், ப₄க₃வத்கைங்கர்யமவனுக்கு இல்லை என்ற ப₂ல பே₄த₃த் தைப் பொறுத்து 'அஸாரம்" என்று தொடங்கும் ஶ்லோகத்துக்கு இங்ஙனம் வியாக்கியானம் செய்திருப்பதாக வேண்டுகோளில் எழுதப்பட்டுள்ளது. பக்தனுக்குக் கைங்கர்யமில்லையா? உபபாதித்து அருளல் வேண்டும். "உபாயாந்தர நிஷ்ட₂ருக்கு உபேயம் ப₄க₃வத₃நுப₄வம்" என்று ஸ்ரீவசநபூ₄ஷணத்தில் (265) கூறப்பட்டிருப்பினும் பல இடங்களில் இவ்வாசார்யராலேயே கைங்கர்யம் ப₂லமாகக் கூறப்பட்டிருப்பதைக காண்கிறோம். இவ்விஷயத்தில் அடியேனுக்கு நல்ல தெளிவைப் பிறப்பித்தருள்க.

க்ஷந்தவ்யோயம் த₃ாஸ

ராமகிருஷ்ணன.

இககடிதததில, முன னுரையில அடியேன் எழுதிய வற்றை ஏறபதாக ஸ்வாமி எழுதியிருப்பது மது₄ராநதகம ஸ்வாமிககு ஸாத₄கமா ப₃ாத₄கமா எனபதையும, ஆழ்வாரை யும, அவரடிபணிநத எமபெருமானார் முதலானோரையும ஸாத₄ந ஸமாபபண நிஷட₂ராக மது₄ராந்தகம ஸ்வாமி வருணிபபது விநதையே எனறும, அது ஆக்₃ரஹக₃ருஹீதம் (பிடிவாததகதினால பற்றிககொளளபபடடது) என்றும எழுதியிருபபது இவருககு ஸாத₄கமா ப₃ாத₄கமா எனபதை யும நிஷ்கர்ஷிக்க ஒரு வாத₃ஸத₃ஸ் தேவையிலலை !

இதற்குமேல் ஸ்ரீவசநபூ₄ஷணமீமாம்ஸா பா₄ஷ்யத்தின் மீதும், அயோத்தி ஜீயர் ஸ்வாமியின் மீதும் நிஷ்கர்ஷ நிகஷகாரரின் மீதும் சில குறைகளை ஸ்வாமி வருணித்துள்ளார். (விநதையே, ஆக்₃ரஹக்₃ருஹீதம் முதலான அழுத்தத்தைக்காட்டும் சொற்கள் இப்பகுதியில் இல்லை என்பதைக் காணவேணும்.) இவற்றுக்கு நிஷ்கர்ஷநிகஷ கர்த்தா பதில் சொல்லக் கடமைப்பட்டவர் என்பதை அடியேனும் இசைகிறேன்.

அடியேன் முக்தியில் ப₂லபே₄த₃ம் உண்டு என்று வேண்டுகோளில் எழுதியதை விளக்கவேண்டும் என்று இக் கடிதத்தின் கடைசியில் அடியேனை ஸ்வாமி நியமித்துள்ளார். இவ்விஷயத்தை லேக₂நவிவாத₃நிக₃மனத்தின் ஸஶேஷமான பகுதியில் அச்சிட்டிருக்கும் D. T. தாதாசார்ய ஸ்வாமியின் முதல் ஸ்ரீமுகத்தின் பதிலில் அடியேன் விளக்கியிருக்கிறேனாகையால் அதை இவருக்கும் 18—8—71 அன்றே அனுப்பினேன். அதைக் கண்டதும் 19—8—71 அன்று இவர் எழுதிய பதிலும் அதற்குப்பின், 20—8—71ல் மது₄ராந்தகம் ஸ்வாமி தம் போர்முரசுக் கடிதத்தில் இவருடைய கடிதத்தை ஆதா₄ரமாகக்கொண்டு அடியேனைப் பொய்யன் என்றும், வஞ்சகன் என்றும் தூற்றியிருப்பதை விளக்கி எழுதிய அடியேன் கடிதத்திற்கு 21—8—71ல் இவர் எழுதிய பதில் கடிதமும் அடுத்தடுத்துக் கொடுக்கப்படுகின்றன.

இரண்டாவது கடிதம்

ஸ்ரீமதித்யாதி ஸ்வாமி ஸந்நிதியில் தண்டம் ஸமர்ப்பித்த விண்ணப்பம். விவாத ப்ரசுரம் கிடைத்தது. விவாதத்தை வளர்க்காமல் இவ்வளவோடு நிறுத்திவிடுவது நல்லது. இந்தச் செய்தி ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது

ஸ்ரீமுகத்தில் ப₂ல பே₄த₃ம் பற்றி ப்ரஸ்தாவித்திருக்கிறது. ஸ்வாமி மஹான்களிடம் கேட்டிருப்பதால் அடியேன் தெளிவு பெறமுடியுமென்று நம்புகிறேன். ஒரு விஷயத்தை நடு நிலையில் இருந்து ஆராய்வது நல்லது, அடியேன் நிலையதுவே.

ஸ்ரீவசநபூஷண வியாக்யான ஸ்ரீஸூக்தியை அடியேனே காண்பித்திருக்கிறேன். ஆசார்யஹ்ருத₃யம் இடமின்மையால்

காண்பிக்கப்படவில்லை. ப₄ல பே₄த₃த்துக்கு வேறு ப்ரமாணங்களையும் காண்பித்துத தெளிவிக்கவேணும்.

இனி, பிள்ளைலோகாசார்யரே உபாயாந்தர நிஷ்ட்ட₂னுக்கும் கைங்கர்யம் உண்டு என்பதைத் தெளிவாகத் தத்தவ சேகரததில் ' இப்படி அவ்யவஹிதமாயும் வ்யவஹிதமாயும் பரமாதமப்ரபத₃நமும் (கைங்கர்ய) ப்ரதிப₃ந்த₄க நிவாத்தகம்'' என்று அருளியுள்ளதைக் கவனிக்கவேண்டும்

மணவாளமாமுனிகளும் தத்த்வத்ரய வியாக்யாநத்தில் (44) முக்தலக்ஷணம் கூறும்போது ''ப₄க்திமூலமாக வரும் பகவத் ப்ரஸாத₃த்தாலேயாதல், . . . ப்ரபத₃நமூலமான ப₄கவத் ப்ரஸாத₃த தாலேயாதல் ஸாமஸாரிக ஸகல து₃க்கங்களும் கழிந்து ஆவிர்பூ₄த ஸ்வரூபராய் ப₄க₃வத₄நுப₄வ கைங்கர்யயைக பே₄க₃ரானவாகள்'' என்று அருளியிருப்பதால் உபாயாந்தரநிஷ்ட்ட₂னுக்கும் கைங்காயமுண்டு என்பது தெளிவு.

இந்த ஸ்ரீஸூக்திகளை ஸ்ரீவசநபூ₄ஷண ஆசார்யஹ்ருத₃ய வியாக்₂யாந ஸ்ரீஸூக்திகளுக்கு அநுகு₃ணமாக நயநம் செயது விளக்கியருளவேணும். இந்த ஸ்ரீஸூக்திகளுக்கு அநுகு₃ணமாக அந்த ஸ்ரீஸூக்திகளை நயநம் செய்யக்கூடாதா?

பூர்வாசார்யர்கள், கைங்கர்யம் ஸாத₄நாந்தரநிஷ்ட்ட₂னுக்குமுண்டு எனறு ஒப்பமிட்டிருக்கின்றனர், உதாஹரணமாகப் பெரியவாச்சான்பிள்ளை 'அதுக்கு (கைங்கர்யத்துக்கு) உபாயம் ப₄க்திப்ரபததிகளென்று இரண்டாய்'' என்று ஸ்தோத்ரரதந வியாக்யாநத்தின் அவதாரிகையில் அருளியிருப்பது குறிக்கொள்ளத் தக்கது. விரிப்பிற் பெருகும். இவ்வளவோடே நிற்கிறேன்.

ஸ்வாமிக்கு ஶ்ரமம் கொடுப்பதற்கு க்ஷமித்தருளவேணும்

தாஸன்
ராமகிருஷ்ணன.

மூனருவது கடிதம

ஸ்ரீமதி₃த்யாதி₃ ஸ்வாமி ஸந்நிதியில் தண்டம் ஸமர்ப்பித்த விண்ணப்பம். ஸ்ரீமுகம் (20—8—71) கிடைத்தது. அடியேன் நெஞ்சிற்பட்டதைத் தேவரீருக்கு ஏற்கனவே எழுதிவிட்டேன். அன்றே மதுராந்தகம் ஸ்வாமிக்கும் '' ஆழ்வார்கள் பறறித தேவரீர் எழுதியது ஆக்₃ரஹக்₃ருஹீதம் '' என்று எழுதியதுக்கு க்ஷமிததருளவேணும் என்று க்ஷமாபணபத்ரமொன்று எழுதினேன. எந்த ஒரு ஸ்ரீ வைஷ்ணவருடைய நெஞ்சும் புண்படலாகாது

என்பது கருதி அது அவருக்கு எழுதப்பட்டது. பத்ரிகையில் ப்ரசுரித்திருக்கக் கண்டால் வருந்தலாகாது என்று எழுதியிருக்கிறேன் *இதில் தேவரீரைத தூற்றுவதற்கு என்ன இருக்கிறது? அதற்கு அடியேனுடைய கடிதம் ஆதாரமாககப்படுவது வருந்தத் தக்கதே. தேவரீருடைய நோமைபறறிச சிறிதளவு மடியேனுக்கு ஸந்தேஹமில்லை.*

மதுராந்தகம் ஸ்வாமி "ஆக்ரஹக்ருஹீதம் என்று ஸஹஸா எழுதலாமா?" என்று 'ஜிஜ்ஞாஸாதகம்" என்னும் தலைப்பில் நீண்டதொரு ஸ்ரீமுகம் பதில் ஸாதித்திருக்கிறார். 'க்ஷமித்தருளவேணும்' என்று பதில் மீண்டும் நேற்று எழுதினேன்

ஸ்வாமியினுடைய ஸ்ரீ முகத்தைப் பார்த்ததுமுடனே பதில் எழுதிவிட்டேன் பலபேதம்பற்றி அதில் அடியேனுக்குப் பட்டதை எழுதியனுப்பினேன். ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயங்களில் ப்ரதிபத்தி பேதம் கூறப்பட்டபடியே என்று கொள்ளவேண்டும், மற்றவிடங்களில் உபாஸகனுக்கும் கைங்கர்யம் பலமாகக் கூறப்பட்டிருப்பதற்கு முரண்பாடு தோன்ற வழியே யில்லை என்பது அடியேன் கிரஹித்த விஷயம். இவ்விஷயத்தில் தெளிவுகேட்டுத் தேவரீருக்கு எழுதியிருக்கிறேன். தெளிவு பிறப்பித்தருளவேணும்

விவாத விஷயங்களில் அடியேன் தலையிடுவதே இல்லை நியமநத்துக்காகத் தெரிந்ததை மனஸ்ஸாக்ஷிப்படி எழுதினேன். அடியேனுக்குத் தெரியாமல் ஏதேனுமபசாரம் நேர்ந்திருந்தால் க்ஷமித்தருளவேணும.

தாஸன்.

ராமகிருஷ்ணன.

இக்கடிதங்களில் பிள்ளைலோகாசார்யர், மாமுனிகள், பெரியவாச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யாகள பக்தி நிஷ்டனுக்குக கைங்கர்யம உண்டு என்று உணர்த்தி யிருப்பதைக காட்டி, இவற்றுககு அநுகுணமாக ஸ்ரீவசநபூஷண ஆசார்யஹ்ருதய வ்யாக்யானங்களில பக்திநிஷ்டருடைய ப்ரதிபத்தி மாத்ரம் கூறப்பட்டுள்ளது (முக்தியில பலபேதம கூறப்படவில்லை) என்று நிர வஹிக்கவேண்டும என்று ஸ்வாமி திருவுள்ளம பற்றுகிறார். ஸ்ரீவசநபூஷண வ்யாக்யானத்தில, 'ஸோऽஶ்நுதே' இத்யாதி

ஶ்ருதியையும், 'நிரஸ்தாதிஶய இத்யாதி$_3$ ருஷி வாக்யத்தை
யும் காட்டி, அவற்றால் சொல்லப்படும் ப$_4$க$_3$வத்ப்ராப்தியே
(பகவதநுபவமே) இவர்களுக்கு உபேயம் என்று ஸாதித்
திருப்பதிலிருந்து, பரமபத$_3$த்தில் கிடைக்கும் உபேயத்
தைப் பற்றியே தாம் குறிப்பிடுவதைத் தெளிவாகக் காட்டி
யிருக்கிறார் மாமுனிகள். ஆகையால், இதையும் மற்ற
வாக்யங்களையும் பின்வருமாறு பொருந்தவிடுவதே நியாயம்.
அதாவது:— ப$_4$க்திநிஷ்ட$_2$ர்க்குப் பரமபத$_3$த்தில் அநுப$_4$வத்
தில் ஊற்றம், கைங்கர்யமும் சிறிது உண்டு. ப்ரபந்நர்க்
குக் கைங்கர்யத்தில் ஊற்றம், அநுப$_4$வம் அதற்கு வாத$_4$க்
மாயிருப்பதனாலும் உறுப்பாயிருக்கும் என்று பொருந்த
விடுவதே ஸகல ஸ்ரீஸூக்திகளுக்கும் ஒட்டியதாயிருக்கும்.
இதிஹாஸ புராணங்களில் ஸாத$_4$நாந்தரபரர்களான ருஷி
களுடைய சரித்திரத்தைப் பார்த்தால், அவர்கள் பெரும்
பாலும் ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வபரர்களாகவேயிருப்பதையும், ப$_4$க$_3$
வத் கைங்கர்யம் மிக அபூர்வமாகவே அவர்களிடம் காணப்
படுவதையும் காண்கிறோம். ஆழ்வார்களிடம் "ஒழிவில்
காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமைசெய்ய
வேண்டும்" என்று கைங்கர்யத்தில் அதிமாத்ரப்ராவண்ய
மிருப்பதையும், அநுப$_4$வம் அதற்கு உறுப்பாகவே அமை
வதையும் காண்கிறோம். இப்படி யாவத$_3$ாயுஷம் இவ்விரு
வகையினார்க்கும் ப்ரதிபத்திபே$_4$த$_3$மிருக்கையால், அதற்
கனுகு$_3$ணமாக முக்தியில் ப$_2$லபே$_4$த$_3$த்தையும் (கைவல்ய
நிஷ்ட$_2$னுக்குப்போலே) எம்பெருமான் திருவுள்ளம் பற்று
கிறான், "வைகுந்தத்தமரரும் முனிவரும்" என்று நித்ய
ஸூரிகளில் கு$_3$ணநிஷ்ட$_2$ரும், கைங்கர்ய நிஷ்ட$_2$ருமிருப்பது
போலே, முக்தர்களிலும் இப்படி இருவகை இருக்கக்
குறையில்லை என்று மாமுனிகள் திருவுள்ளம் பற்றியிருக்
கிறார் என்பது ஸ்ரீவசநபூ$_4$ஷண வ்யாக$_2$யானத்தில்
'ஸோஶ்நுதே' இத்யாதி$_3$ ப்ரமாணங்களில் சொல்லப்பட்ட
ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வத்தை உபேயமாகக் காட்டியிருப்பதிலிருந்து
தெளிவாக விளங்குகிறது. ப$_4$க்திநிஷ்ட$_2$ர்க்கு ப$_4$க$_3$வத$_3$நு
ப$_4$வ வர்த$_4$கமான 'ஹா வு ஹா வு ஹா வு' என்னும்
ஸாமகா$_3$நம் முதலான சில வாசிக கைங்கர்யங்களை ஒப்புக்

கொண்டே தீரவேண்டுமாகையால. ப4க3வத3நுப4வமாத்ரம் பலம என்றது ஊற்றத்தைப்பற்ற என்று கொண்டுவிட லாமாகையால ஸ்ரீஸூக்திகளுக்கிடையே எவ்வித விரோதமு மில்லை என்று நிர்வஹித்துவிடலாம. நிற்க.

ஆழ்வார்திருநகரி ஸ்வாமியின மூன்றாவது கடிதத்தி லிருந்து 'ஜிஜ்ஞாஸாத3ஶகம்' என்னும தலைப்பில நீண்ட தொரு கடிதம எழுதி மது4ராந்தகம ஸ்வாமி அவரோடு வாதம்செய்ய முற்பட்டுவிட்டார் என விளங்குகிறது. இத்தகைய இவர் நமக்கெழுதிய கடிதத்தின முதல பாரா வில, "வாதிகள என்றமுறையில மத்யஸ்தா அபிப்ராயத் தின பேரில வாதப்ரதிவாதம கூடாது. இது லோகசாஸ்த்ர நியதி. ஜட்ஜியுடன் வாதி வாதிக்கமாட்டான. ஸ்ரீ D T ஸ்வாமியுடன நம் வாதப்ரதிவாதத்தைத் திருப்பியுள்ளது' என்று அடியேனுக்கு உபதே3ஶம செய்கிறார். இவர் ஜட்ஜாக நியமித்த ஆழ்வார் திருநகரி ஸ்வாமியுடன் இவர் வாத3ப்ரதிவாத3ம செய்யலாமாம! நம்மால் ஜட்ஜாக நியமிக்கப்படாத D. T. ஸ்வாமியுடன் நாம் ப்ரதிவாத3ம செய்யக்கூடாதாம. இவருடைய நியாயம் எப்படியிருக் கிறது பாருங்கள்! விவாதம தொடங்குமுன நம்மை ஜட்ஜாக நியமித்து. நாம இவருக்கு விரோத4மாகக் கருத்தைத் தெரிவித்தவுடன நம்மைத்தூற்றிக்கடிதம எழுதினார் இவர் என்பதும நினைவிற்கொள்ளத்தக்கது. இவர் இயல்வு இதுவே என விளங்குகிறது!

உண்மையில. ஸ்ரீ D. T. ஸ்வாமியைத் தென்னாசார்யர் களின ஸ்ரீஸூக்திகளுக்கு அர்த்த2நிர்ணயம் செய்வதற்கு நாம ஜட்ஜாக இசையவில்லை; அப்படி இசைய நமக்கு அதி4காரமுமில்லை. ஓர் குறிப்பிட்ட ஆசார்யரின ஸ்ரீஸூக் திக்கு அர்த்த2நிர்ணயம் செய்பவர்களுக்கு அந்த ஆசார்ய ரிடம விஶேஷமான ப4க்திவேண்டும், அவருடைய க்ரந்தங் களை அவர் கு3ருமுக2மாகக் கேட்டிருக்க வேண்டும்; ஸ்ரீ D. T. ஸ்வாமி தென்னாசார்யக்3ரந்தங்களை கு3ருமுக2மாகக் கேட்டவரல்லா; தே3ஶிகஸம்ப்ரதா3யஸ்த2ரான அவருக்கு

அவற்றை கு$_3$ருமுக$_2$மாகக் கேட்கவேண்டிய அவசியமும் கிடையாது. தென்னாசார்யர்களிடம் அவருக்கு ப$_4$க்தி கிடையாது என்பது அனைவரும் அறிந்தது. சென்ற வ்ருஷங்கூட ரங்க$_3$நாத$_2$பாது$_3$காப்த்திரிகையில் மாமுனிகளின் ஸ்ரீஸூக்தியைக் கண்டித்து வ்யாஸமெழுதியுள்ளார் அவர். இத்தனைக்கும்வரை மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளுக்கு அர்த்த$_2$நிர்ணயம் செய்ய நாம் ஜட்ஜாக நியமித்தோம் என்று இவர் எதுகொண்டு நிர்ணயித்தாரோ தெரியவில்லை. ஸ்ரீதே$_3$சிகஸூக்திகளுக்கு அர்த்த$_2$நிர்ணயம் செய்ய ஸ்ரீகாஞ்சீ மஹாவித்$_3$வான் ஸ்வாமியை இவர் ஜட்ஜாக நியமிப்பாரா?

பின் எதற்காக ஸ்ரீ D T. ஸ்வாமியை மத்$_4$யஸ்த$_2$ராக அடியேன் நியமித்ததற்கு இசைந்து அவருக்குக் கடிதம் எழுதினீர்?' என்று மது$_4$ராந்தகம் ஸ்வாமி கேட்பா கூறுகிறோம் குறிக்கொண்டு கேண்மின். இந்த விவாத$_3$த்தில் ஸ்ரீதே$_3$சிக ஸூக்திகளுக்கும், தென்னாசார்ய ஸூக்திகளுக்கும் அர்த்த$_2$நிர்ணயம் செய்யவேண்டியுள்ளது. அந்தந்த ஆசார்யரின் ஸ்ரீஸூக்திகளுக்கு அர்த்த$_2$நிர்ணயம் செய்ய அந்தந்த ஸம்ப்ரதா$_3$யஸ்த$_2$ரான வ்யபதி$_3$ஷ்ட வித்$_3$வான்களுக்கே அதி$_4$காரமுண்டு. அந்த முறையில் தே$_3$சிக ஸூக்திகளுக்கு அர்த்த$_2$நிர்ணயம் செய்ய உதவுவர் என்னும் எண்ணத்தாலே ஸ்ரீ D. T ஸ்வாமியை மத்$_4$யஸ்த$_2$ராக இசைந்தேனேயொழிய தென்னாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு அவரை அர்த்த$_2$நிர்ணயம் செய்ய ஜட்ஜாகக் கருத்ப்ரஸக்தியேயில்லை. இப்படி இரு ஸம்ப்ரதா$_3$ய ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் அர்த்த$_2$நிர்ணயம் செய்யவேண்டியிருக்கையாலேயே, அடியேன் இவர் நியமித்த மத்$_4$யஸ்த$_2$ர்களோடு உப$_4$யஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த மற்றும் பல வித்$_3$வான்களையும் மத்$_4$யஸ்த$_2$ர்களாக நியமித்துக் கடிதம் எழுதினேன், அவர்களில் தே$_3$சிகஸம்ப்ரதா$_3$யஸ்த$_3$ர்களான ஸ்ரீ உ. வே. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ உ. வே. திருக்கள்ளம் நரஸிம்ஹராக$_4$வாசார்ய ஸ்வாமியும் தாம் கு$_3$ருமுக$_2$மாகக் கேளாத தென்னாசார்ய ஸ்ரீஸூக்தி

களுக்கு அர்த்த2நிர்ணயம் செய்ய இழிவதில் தமக்கு அதி4காரமில்லை என உணர்ந்து. விவாத3ஸ்த3ல நடத்துவதால் எப்பயனும் ஏற்படாது முதலானவற்றைத் தெரிவிப்பதோடு நிறுத்திக்கொண்டார்கள். தென்னாசார்ய ஸம்ப்ரதா3யத்தைச்சேர்ந்த குருகுலசிஷ்டவ்யபதி3ஷ்ட வித்3வான்களில் மூவர் தென்னாசார்ய ஸ்ரீஸூக்திகளை நன்கு ஆராய்ந்து நிஷ்கர்ஷநிக்ஷகர்த்தாவுக்குப் பரிபூர்ண ஸாத4கமாக அபி4ப்ராயம் தெரிவித்துள்ளனர். தென்னாசார்ய ஸம்ப்ரதா3யத்தைச் சேர்ந்த குருகுலசிஷ்ட வ்யபதி3ஷ்ட வித்3வானான ஆழ்வார்திருநகரி ஸ்வாமி சில அம்சங்களில் நிஷ்கர்ஷநிக்ஷகர்த்தாவுக்கு ஸாத4கமாகவும், சில அம்சங்களில் ஸந்தே3ஹத்தைத் தெரிவித்தும் அபி4ப்ராயம் தெரிவித்துள்ளார். அப்படியிருக்கும்போது அடியேன் குறிப்பிட்ட மூவருடைய அபி4ப்ராயத்தை ஏற்கமாட்டேன் என்று மது4ராந்தகம் ஸ்வாமி எழுதுவதும், தாம் குறிப்பிட்டவர் தமக்கு பா3த4கமாகக் குறிப்பிட்ட அம்சத்துக்கு அவரோடு எதிரம்புகோப்பதும் அவர் ஸந்தே3ஹப்படும் அம்சங்களைத் தமக்கு ஸாத4கம்போலே திரித்து எழுதுவதும் இவர் எந்த ந்யாயத்திற்கும் கட்டுப்படாதவர் என்று விளக்குகிறது. இவரால் ஜட்ஜாக நியமிக்கப்பட்ட ஆழ்வார்திருநகரி திருமலைநல்லான் ஸ்வாமி கீழே அச்சிட்டிருக்கும் தம் இரண்டாவது ஸ்ரீமுகத்தில். 'விவாத3த்தை வளர்க்காமல் இவ்வளவோடு நிறுத்திவிடுவது நல்லது. இந்தச் செய்தி ஸந்தோஷத்தை உண்டு பண்ணுகிறது' என்று எழுதியிருப்பதற்கு இவர் கட்டுப்படுகிறாரா? அல்லது அதையும் உதறிவிடப்போகிறாரா? இவர் கடிதத்தின் ஆறாவது பாராவில் "அடியேனுக்கு ஸாத4கமாக அபிப்ராயம் தெரிவிக்குமவர் D. T. ஒருவரே என்பது பரலோகத்துக்கு தேவர் அஞ்சாது எழுதியபடி திருநகரி ஸ்வாமியும் அடியேனுக்கு ஸாதகமாக ஸ்பஷ்டமாய் தெரிவித்துள்ளாரே. அவர் மாத்ருகை அனுப்பியுள்ளார் வஞ்சனை பொய் அசூயை இவை எல்லாம் சேர்ந்து தேவரீரை இவ்வாறு பேசுவிக்கின்றது என்று திருநகரி ஸ்வாமியின் கடிதத்தைத் ஆதா4ரமாகக்கொண்டு அடியேன் பேரில் நிந்தாவிஷத்தைக்

க்கருகிறார். அடியேனைத் தூற்றுவதற்குத் தம் கடிதத்தில் ஒன்றுமேயில்லையென்றும், அடியேனுடைய நேர்மையில் சிறிதும் தமக்கு ஸந்தேஹமில்லை என்றும் ஆழ்வார்திருநகரி ஸ்வாமியே தம் ஸ்ரீமுகத்தில் எழுதியிருப்பதைக் கண்ட பின்பாவது இந்த நிந்தைகளை வாபஸ் வாங்கிக்கொள்ளு கிறாரா? இவற்றையெல்லாம் உலகறிய அறிவிப்பதற்கு இவர் கடமைப்பட்டவர் என்பதை உணர்த்திநிற்கிறோம்.

ஒரே நாளில் அச்சிடப்பெற்ற ஸம்க்ஷேபமான ஒரு பிரசுரத்தில், அப்பிரசுரம் முழுவதும் வெளிவரும் வரையில் பொறுக்காமல் 'நீர் உமக்கு ப$_3$ாத$_4$கமானவற்றை அச்சிடா மல் விட்டுவிட்டீர்' என்று நம்மீது குற்றஞ்சாட்டுமிவர், "ராமகிருஷ்ணையங்கார் ஸ்வாமி 14—8—71 ஸ்ரீமுகத்தின் சரியான மொழிபெயர்ப்பு என்று மகுடமிட்டு நமக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் நகலை " . ....." என்று குறி யிட்டுத் தொடங்கி அக்கடிதத்தில் தமக்கு ஸாத$_4$கமாயுள்ள ஒரு பகுதியையே கொடுக்கிறார். தமக்கு ப$_3$ாத$_4$கமான பகுதியை " .. . . " என்று குறியிட்டு மறைத்திருக்கிறார் என்பது தெளிவு. ஆக, நம்மேல் ஏற்பட்ட தோ$_3$ஷங்கள் இவரையேசார்ந்து நிற்கிறது என்று விளங்குகிறது.

தம் கடிதத்தின் 3-வது பாராவில் 'மத$_4$யஸ்தா குறிப் பிட்டவரிடத்தில் நாம் சென்று வாதம் நடத்தவேணும். அவர்களை இங்கு வரவழைப்பதில் சில அசௌகாயங் களேற்படும். ஸ்ரீஉத்தமூர் ஸ்வாமி, D. T. ஸ்வாமி, ஸ்ரீஅழகிய சிங்கர், ஆண்டவன், திருநகரி ஸ்வாமி முதலானவரை மத்$_4$யஸ்த$_2$ம் வஹிக்கும்படி அடியேன் செய்யமுடியும்" என்று எழுதுகிறார். இவரால் மத$_4$யஸ்த$_2$ராகக் குறிப்பிடப் பட்டவர்களில் திருநாங்கூர் பர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி ப்$_3$ருந்த$_3$ாவனத்தில் வாழ்கிறார். அங்கு சென்று வாதம் நடத்த முடியுமா? எல்லா மத$_4$யஸ்த$_2$ர்களையும் ஓரிடத்தில் கூட்டி வாதம் நடத்துவது முறையேயொழிய, ஊரூராகத்திரிந்து ஒவ்வொரு மத்யஸ்தரிடமும் வாக்கு மூலம் வாங்குவது முறையல்ல, ஸாத$_4$யமுமல்ல. நிற்க. வாதி$_3$யான இவரும், மற்றும் பல வித$_3$்வான்களும், அடி

யேனுமிருக்கும் ஸ்ரீரங்கத்திலோ. பிரதிவாதி3யான வரதா3சார்ய ஸ்வாமியும் மற்றும் பல வித்3வான்களுமிருக்கும் சென்னையிலோ ஓர் பொது இடத்தில் வாத3ஸத3ஸ நடக்க வேண்டும். இவர் எத்தனை வ்யபதி3ஷ்ட வித்3வான்களை மத்4யஸ்த2ராயிருக்கப் பிரார்த்தித்து இசைய வைக்கிறாரோ மேலும் அத்தனை வ்யபதி3ஷ்ட வித்3வான்களை நாமும் மத்4யஸ்த2ராயிருக்கப் பிரார்த்தித்து இசைய வைப்போம். நாம் குறிப்பிட்டவர்களும் இவர் குறிப்பிட்டவர்களுமான மத்4யஸ்த2ர்கள் அனைவரும் வாத3ஸத3ஸ நடக்குமிடத்திற்கு தினந்தோறும் வந்து மாத்4யஸ்த்2யம் வகிக்கவேண்டும். எவராவது சில பல நாட்கள் வரவில்லையெனில் அதற்காக வாத3ஸத3ஸ தடைபடக்கூடாது. இருப்பவர்களைக்கொண்டு ஸத3ஸ நடக்கவேண்டும். நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி— 'தென்னாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கு அர்த்த2நிர்ணயம் செய்ய அந்த கிரந்தங்களை கு3ருமுக2மாகக்கேட்ட அந்த ஸம்பரதா3ய நிஷ்ட2ர்களுக்கே அதி4காரமுண்டு; தே3ஶிக ஸ்ரீஸூக்திகளுக்கு அர்த்த2நிர்ணயம் செய்ய அவருடைய கிரந்தங்களை கு3ருமுக2மாகக் கேட்ட தே3ஶிகஸம்பரதா3ய நிஷ்ட2ர்களுக்கே அதி4காரமுண்டு. மற்ற விஷயங்களில் அனைவர்க்கும் அதி4காரமுண்டு" என்னும் நியமம் முக்கியமானது. இந்த நியமம் இல்லாவிடில் வாத3ஸத3ஸ யுத்3த4 களமாகமுடியும். அடியேனும், வரதா3சார்ய ஸ்வாமியும் அத்தகைய வாத3ஸத3ஸ்ஸுக்கு வரமாட்டோம். இவர் தம் இஷ்டப்படி ஸத3ஸ்ஸை நடத்தி எதைவேண்டுமானாலும் முடிவுகட்டிக்கொள்ளட்டும். இந்த நியமங்களுக்குக் கட்டுப்பட்டு இவர் வாத3ஸத3ஸ நடத்துவதானால் அதில் கலந்துகொள்ளத் தடையில்லை. நிற்க.

வாத3ஸத3ஸ நடக்காவிடில் நிகஷ ஶததூ3ஷணீ எழுதப் போவதாக பயமுறுத்துகிறார். ஶததூ3ஷணீயோ ஸஹஸ்ர தூ3ஷணீயோ எதுவேண்டுமானாலும் எழுதிக்கொள்ளட்டும். ஸாரதம் நிஷ்கர்ஷமும், இவருடைய பிரகிருதமான சடிதமும் அமைந்திருக்கும் முறையிலேயே அதுவும் அமைந்திருக்கும் என்பதை நடுநிலையாளர்கள் புரிந்து கொள்வார்

கள். அதற்கும் இடம்கொடுத்து ஸுதர்சனத்தை மேலும் கறைப்படுத்த அடியேன் ஸித்தமாயில்லை. விவாதத்தை வெறுக்கும் வரதாசார்ய ஸ்வாமியிடம் தம் கைவரிசையைக் காட்டுவதைவிட அதை வரவேற்கும் ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வானிடம் காட்டினால் நன்றாயிருக்கும்.

பதின்மூன்றாவது பாராவில், "ஸத்யத்துக்குக் கட்டுப்பட்டு மத்யஸ்தர்கள் அபிப்ராயம் அனுப்பியதை இம் மாஸத்து ஸுதர்சனத்தில் ப்ரசுரிக்கவும். விஷயங்களை மறைப்பது சேர்ப்பதாகிய கபடமாக்கம் வேண்டா. இருவரும் சேர்ந்து ஸம்மதியாத மத்யஸ்தர் அபிப்ராயமும் நமக்கு வேண்டா தேவரீர் ப்ரசுரியாது என்று அடியேன் திருநகரிஸ்வாமிக்கு எழுதியுள்ளேன். ப்ரசுரிப்பர் என்று அவர் எழுதியுள்ளார். பார்ப்போம்" என்றும், இரண்டாவது பாராவில், "சாஸ்த்ரீய விவாதங்களில் சூதும் வாதும் கூடாது. ஒவ்வொன்றையும் ஸுதர்சனத்தில் ஏககாலத்தில் ப்ரசுரம் செய்யவேணும். இல்லையேல் அடியேனுக்கு அனுப்பினால் ப்ரசுரிக்கிறேன். நிகஷச்சதுராஷ்ணியில் காணலாம்' என்றும் எழுதுகிறார் இவர் குறிப்பிட்ட சிலரை மாத்திரம் அடியேன் மத்யஸ்தராக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை முன்னமே காட்டினேன். இவரும் நாமும் குறிப்பிட்டு பதில் எழுதிய ஒன்பது மத்யஸ்தர்களில் ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி, D T. ஸ்வாமி, ஆழ்வார்திருநகரி ஸ்வாமி ஆகிய மூவரின் அபிப்ராயங்களை ஒரு வரிவிடாமல் ப்ரசுரித்து விட்டேன். இவர் குறிப்பிட்டவர்களில் திருநாங்கூர் ஸ்வாமி ஸுதர்சனம் காபிகளில் ஒன்று தமக்குத் தவறி விட்டதென்றும், அதுவும் கிடைத்தபின் அபிப்ராயம் எழுதுவதாகவும் எழுதியுள்ளார். அடியேன் குறிப்பிட்டவர்களின் அபிப்ராயத்தை இவர் ஏற்க மறுக்கிறார். அவர்களில் சிலரை நடக்கப்போகும் வாதஸதஸ்ஸில் அடியேன் மத்யஸ்தராகக் குறிப்பிடக்கூடும். ஆகையால் அவர்களுடைய அபிப்ராயங்களை முன்கூட்டி வெளியிட அடியேனும் விரும்பவில்லை. ஆகையால் அவற்றை இப்போது வெளியிடவில்லை. பின்னால் அவச்யமானால் மற்றும் பல அபிப்ரா

யங்களோடு சேர்த்து வெளியிடுவேன். வாதஸ்தஸ நடத்துவது சிறிதும் பயனற்றதாகவேயிருக்கும் என்பதை — தற்சமயம் காசியில் வசிப்பவரும், அஹோபில மடாஸ்தான வித்வானுமான வேதாந்தவாவதூக ஸ்ரீ உ வே. வில்லிவலம் நாராயணாசார்யஸ்வாமி தம் கடிதத்தில் மிக அழகாக விளக்கியுள்ளார், அப்பகுதியை மாத்திரம் கீழே அச்சிட்டுவிட்டு லேகநவிவாதத்தை ஸ்தாபனத்தில் இத்துடன் நிறைவுபடுத்திக்கொள்கிறேன். தாம் மத்யஸ்தராகக் குறிப்பிட்ட வித்வான்களிடமிருந்து அடியேனுக்கு வந்திருக்கும் கடிதங்களில் எதைவேண்டுமானாலும் நேரிலோ, ஆளனுப்பியோ அடியேனிடமிருந்து மத்யஸ்தராகக ஸ்வாமி நகல் எடுத்துச்செல்லலாம். விவாதஸ்தஸ நடந்தால் அதன் விபரங்கள் ஸ்தாபனத்தில் வெளியிடப்படும்.

(வில்லிவலம்) நாராயணாசார்ய ஸ்வாமியின் நல்லுரை

வாதஸபை-உதவாத ஸபையாகவே முடியும் "அஸாரம்" என்று உபக்ரமிக்கும் வாதம்-அஸாரம் என்றே உபஸம்ஹாரத்திலும் தேறும்

வாதம் எக்காலத்திலுமே செய்ய அநுமதிக்கப்படாத ஒன்று ஏதோ வீதராகர் கூடினால் கொஞ்சம் நடைபெற இயையுண்டு. அல்லது—ஸம்பந்தமற்ற ஒருவர்—ஒரு விஷயத்தில் உண்மையறிய ஆவலும் அதிகாரமும் உடையவராக இருந்தால்—அவர், நடுவர் ஒருவரையோ, மூவரையோ முன்னிறுத்தி—ஸம்புந்தப்பட்டவரை வாதிக்கச் செய்யலாகும். அதிலும் ஒரு ப்ரமம் உண்டு. நடுவில் நிற்பவர் நாலும் தெரிந்தவராக இருக்கவேணும் வித்யாரண்யாக்ஷோப்யமுனிவிஷய வேங்கடநாதஸூரியைப்போல இவ (வித்யாரண்யர், அக்ஷோப்யமுனிகளுக்கிடையே மத்யஸ்தம் செய்த ஸ்ரீதேசிகர் போலே) இல்லாவிடில் சொல்பவர் கண்டம் கோஷிக்கவே செய்யும். அதிலும் பலமில்லை யாரும் எதையும் பற்றினது விடுவாரில்லை.

ஆகையால் இங்கு கோபநீயமான தத்வார்த்தங்களை அம்பலத்தில் அவலபொதிபோலாக்கவேண்டாம் தத்வநிர்ணயம் இதனால் ஏற்படாது ஜயாபஜய உணர்ச்சி ஏற்பட்டே தீரும் அந்தோ! ஸ்ரீவைஷ்ணவரில் ஒருவர் வருந்த மற்றொரு ஸ்ரீவைஷ்ணவரே காரணமாக அமையவோ? ஐயோ! இதனினும் கொடியதுண்டோ? பிறர் அநாதரவு காண்கிலே ஸ்ரீவைஷ்ணவன் பொறுமை. இது என்ன எண்ணம்? நம்மைத் தோற்றித்தான் தத்வங்கள் தோன்றினவோ?

எனறே ஸமப்ரதாய விஶேஷஙகள் ஏறபட்டு, தமது வழிவழியே ஒழுகிவர-ஒருவரின ஸமபரதாயததை மறறவா ஏன தூறறவேணடும? அவறறுள தாரதமயம இருககட்டும நமமை அணடிககேட்டவருககு அதைச சொலலுவோம சொலலுமபோதும உணமையைமட்டும எடுததோதுவோம. அஸமபரதாயஸதா முனபே அதன அஸார ததையை அறிவிபபது எககாலததிறகும ஏறறதனறு குறிபபாக இக காலததிறகு, ஸமபரதாயச சுடாகள மெலிநது காணபபடும இந நாளில-எநத ஸமபரதாயததினமேலும எநத வாதவாதமும வீச லாகாது. "பகதயா தததத பஜமாநாந பரதி நாஸதிகயமிவாஸ மாபிருபதிஷடம ஸயாத ததகணடநே! மஹத தத தேஷாம அஸ மாகம ச பாதகம பவதி' (பகதியுடன் ஒவவொரு கொளகையை ஏறறு ஒழுகுகிறவாகளிடம சென்று கணடிககப் புகுந்தால நாம் அவா களுககு நாஸதிகயததை உபதேஶிபபதோடொககும். அது அவா களுககும நமககும பெரும பாவமாய்த தலைககட்டும) என்ற யாருடைய வரிகளோ நினைவிறகு வருகினறன இஙகே. ஆகையால் வேணடாம வாதம். பேதம பொறுபபோம கேதம (வருததம) தொலையடடும.

இதீததம நாராயணசாரியர் (விலலிவலம)
11—8—71 வாராணஸி.

'ஸுதர்ஶனம்' ஆசிரியரின் நிறைவுரை

வில்லிவலம் ஸ்வாமியின் கடிததத்தில் உள்ள கருத்துக்களே நம் நெஞ்சில் எப்போதும் நிறைந்திருப்பவையாகையால்தான், நாம் வாதஸதஸ் வேண்டாம் என்றெழுதி சமாதான முயற்சியை மேற்கொண்டோம் மதுராந்தகம் ஸ்வாமியின் பிடிவாதத்தினால் வாதஸதஸ் நடந்தால், வில்லிவலம் ஸ்வாமி காட்டிய சிரமங்களைத் தவிர்ப்பதறகாகவே அந்தந்த ஆசார்யாகளின் ஸ்ரீஸூக்திகளுக்கு அர்தத நிர்ணயம் செய்ய அந்தந்த ஸம்ப்ரதாயஸ்தரான மத்ய ஸ்தர்களுக்கே அதிகாரமுண்டு என்னும் முக்கியமான நியமத்தை வெளியிட்டுள்ளோம் மதுராந்தகம் ஸ்வாமி நியாயமான இந்த நியமததிற்குக் கட்டுப்பட்டு வாதஸதஸ் நடத்தவாவது இசைகிறரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

லேகநவிவாதநிகமநம் நிறைவுபெறறது.

—●—

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-24] [ஒளி-11

வரவரமுநி ஸித்தாந்தம்

வரவரமுநி எனப்படும் மணவாள மாமுனிகள் அவதரித்து 601 வருடங்கள் நிறைவடையும் இம்மாதத்தில்,- ஸகல ஶாஸ்த்ரங்களிலும், மற்ற ஸகல பூர்வாசார்ய க்3ரந்த2ங்களிலும் தேடிக்கண்டுபிடிக்கவேண்டும்படி அதி ரஹஸ்யமாக மறைத்து வைக்கப்பட்டிருப்பதாய், விஶத3 வாக்ஶிகா2மணியான இவருடைய க்ரந்தங்களிலேயே தெளிவாகக் காணலாயிருக்கையாலே வரவரமுநி ஸித்3தா4ந்தம் என்றே வழங்கத்தக்கதாயிருக்கிற பரமவைதி3க ஸித்3தா4ந்தத்தைச் சுருக்கமாக அநுப4விக்க இழிகின்றோம்

ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே அநாதி3காலமாக ஸகல சேதனர்க்கும் ஸர்வவித4ப3ந்து4வாயிருப்பவன். தனக்கு வைஷம்ய நைர்க்4ருண்யங்கள் (பக்ஷபாதமும் கருணையின்மையும்) ஏற்படாமைக்காக அநாதி3காலமாக அவர்களுக்கு ஓரளவுக்கு ஸ்வாதந்த்ர்யபு3த்3தி4யை அளித்து, அநாதி3காலமாக அவர்கள் செய்யும் புண்ய பாபங்களுக்கு அநுகு3ணமாகப் பலனளிப்பவனாயினும், சேதநலாப4த்தைத் தன் பேறாக நினைத்திருப்பவனாகையாலே, ஒவ்வொரு சேதனனும் தன்னையடையவேண்டுமென்று அநாதி3காலமாக ஒன்றி ஒன்றி உலகம் படைப்பது, இசை கொள் வேதநூல் அருளுவது, எந்நின்ற யோனியுமாய்ப் பிறப்பது முதலான எண்ணிறந்த முயற்சிகளைச் சேதனர்களுடைய கர்மத்தைக் கணிசியாமல் தன் நிர்ஹேதுக

கிருபையினாலே ஓயாமல் செய்துகொண்டேயிருக்கிறான். இம்முயற்சிகளின் பயனாகவே ஒவ்வொரு சேதனர்க்குச் சில நன்மைகள் விளைந்து அவர்கள் தன்னை அடையப் பெறுகிறார்கள். இவற்றையெல்லாம் நடுநிலைநின்று ஆராயும் போது — ஸ்வரூபாநுகு₃ணமான பரமபுருஷார்த்த₂லக்ஷண மோக்ஷத்தின் பொருட்டு ப₄க₃வான் செய்யும் ஸங்கல்பம் நிர்ஹேதுக க்ருபாகார்யம் என்றே அறுதியிடத்தக்கதாயுள்ளது; ஸ்வரூபத்துக்குத் தகாத இதரபுருஷார்த்த₂ங்களின் பொருட்டு ப₄க₃வான் செய்யும் ஸங்கல்பம் ப்ரபந்நர்க்கு நிர்ஹேதுகமாகவும், மற்றையோர்க்கு ஸஹேதுகமாகவும் அமைகிறது—என்று தெளிவுறக் காட்டியவர் நமது விஶத₃ வாக்ஶிக₂ாமணிகளேயாவர்.

இனி இப்படி ஸகல சேதனர்களும் தன்னையடைய நிர்ஹேதுககிருபையாலே எம்பெருமான் விடாமுயற்சியைச் செய்துகொண்டிருக்கும்போது, பெரும்பாலான சேதனர்கள் அவனை அடையாமலேயிருக்கக் காரணமென்ன என்று ஆராய்ந்தால், தனக்கு வைஷயிக கைங்க₄ர்யம் வாராமைக்காக அநாதி₃காலமாக எம்பெருமான் அளித்திருக்கும் ஸ்வாதந்த்ர்யபு₃த்₃தி₄யைக்கொண்டு, தமக்கு நன்மையைத் தாம் தேடநினைத்து ஸ்வப்ரவ்ருத்தியில் சேதனர் ஈடுபட்டு வருவதே அவர்கள் அவனை அடையாமலிருப்பதற்குக் காரணம்; இந்த ஸ்வார்த்த₂பரதையையும், அதனால் ஏற்படும் ஸ்வப்ரவ்ருத்தியையும் எம்பெருமானைக் காலகட்டித் தவிர்த்துக்கொண்டாலாகில் எம்பெருமானுடைய நிர்ஹேதுககிருபை ஸப₂லமாகி, பரமபுருஷார்த்த₂ம் ஸித்₃தி₄க்கிறது என்றும் தெளிவுறக் காட்டியவர் மாமுனிகள். இதைச் சிறிது விவரிப்போம்.

"அநாத்மந்யாத்மபு₃த்₃தி₄ர் யா அஸ்வே ஸ்வமிதி யா மதி |
அவித்₃யாதருஸம்பூ₄திபீ₃ஜமேதத் த்₃விதா₄ ஸ்தி₂தம் ||"

[ஆத்மாவல்லாத தே₃ஹத்தைத் தானாக எண்ணும் அஹங்காரமும், தன்னதல்லாத பொருள்களைத் தன்னுடையதாக எண்ணும் மமகாரமும் அஜ்ஞானமாகிற (விஷ)வ்ருக்ஷத்தின் வளர்ச்சிக்குக் காரணமான இருபகுதியாக உள்ள விதை

யாகும்] என்கிறபடியே ஈச்வரன் கொடுத்த ஸ்வாதந்த்ர்ய பு3த்3தி4யின் பயனாகவும், விசித்ரமான கர்மப்ரவாஹத்தின் பயனாகவும் விளைந்த அஹங்கார மமகாரங்களாலே ஒவ்வொரு சேதனனுக்கும் அதி4கமாகவோ குறைவாகவோ ஸ்வார்த்த2பரதையும் (தனக்குத்தான் நன்மையை விரும்புகையும்) அதை நிறைவேற்றிக்கொள்வதற்காகத் தான் முயலுகையாகிற ஸ்வப்ரவ்ருத்தியும் ஏற்பட்டுள்ளது. அஹங்காரமும் மமகாரமும் ஒன்றிருந்தால் மற்றொன்றும் இருந்தே தீரும் என்பதைக் காட்டுவதற்காகவே கீழே எடுத்த ச்லோகத்தில் அவற்றை ஒரு விதையின் இருபருப்புகளாக உருவகப்படுத்தினார் ரிஷி. இதுபோலவே, அஹங்கார காரியமான ஸ்வப்ரவ்ருத்தியும், மமகார காரியமான ஸ்வார்த்த2பரதையும் ஒன்றிருந்தால் மற்றொன்றும் இருந்தே தீரும். இவையிரண்டும் சிலர்க்கு மிக அதி4கமாகவும் சிலர்க்குப் படிப்படியாகக் குறைந்தும் இருப்பதாலேயே சேதனர் அடையும் புருஷார்த்த2ங்களிலும், அதை அடைய அவர்கள் கைக்கொள்ளும் ஸாத4னங்களிலும் ஏராளமான ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன. இந்த ஸ்வார்த்த2பரதையிலும், ஸ்வப்ரவ்ருத்தியிலும் அநாதி3காலமாக ஊறிக்கிடக்கும் சேதனர்க்கு அவற்றைப் படிப்படியாகக் குறைப்பதற்கே ஸர்வேச்வரன் பல பல புருஷார்த்த2ங்களையும், அவற்றுக்குப் பல பல ஸாத4னங்களையும் சாஸ்திரங்களிலே காட்டியிருக்கிறான்.

மஹாபாபிகளாய், அத்யந்ததாமஸப்ரக்ருதிகளாயிருக்கும் பலர் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம் உண்டதே போகம்' எனும் ஸ்வார்த்த2பரதையின் எல்லைநிலத்திலே நின்று, அதற்காகக் கொலை, கொள்ளை முதலான எத்தகைய ஸ்வப்ரவ்ருத்தியையும் செய்யத் துணிந்த பரமநாஸ்திகர்களாயிருக்கின்றனர். ஒரேயடியாகத் திருத்த முடியாத இவர்களைப் படிப்படியாகத் திருத்தவே எம்பெருமான் பல புருஷார்த்த2ங்களையும், அவற்றையடையப் பல ஸாத4னங்களையும் காட்டுகிறான். முதலில் விரோதி4நிரஸனத்தை ஸாதி4த்துக் கொடுக்கும் க்ரூரமான ஸ்வப்ரவ்ருத்தியாயிருக்

கும் ஆபி4சாரிகயாக3ம் முதலானவற்றைக் காட்டி ஶாஸ்த்ர விஶ்வாஸத்தைப் பிறப்பிக்கிறான். பிறகு க்ரௌர்யமற்ற ஸ்வப்ரவ்ருத்தியாயிருக்கும் ஐஹிகபுருஷார்த்த2 ஸாத4னங்களைக் காட்டுகிறான். பிறகு ஐஹிகத்தைக்காட்டிலும் உத்க்ருஷ்டமான ஸ்வர்க்க3தி3 புருஷார்த்த2ங்களையும், அவற்றின் ஸாத4னங்களையும் காட்டி ஆத்மா தே3ஹத்தைக்காட்டிலும் வேறுபட்டது என்னும் அறிவை விளக்கிறான். இவ்வண்ணமாக தே3ஹாத்மாபி4மானம் படிப்படியாக நீங்கப்பெற்றபோதிலும் கர்மவாஸநாருசிப3லத்தாலே ஸ்வப்ரவ்ருத்திஸஹித ஸ்வார்த்த2பரதை அடியோடு நீங்கப்பெறாத சிலர்க்கு ஆத்மப்ராப்தியாகிற கைவல்ய மோக்ஷத்தையும் அதற்கு ஸாத4னங்களையும் காட்டுகிறான். இவர்களிலும் மேம்பட்டு ஆத்மப்ராப்தியின் தாழ்வையும் அறிந்து ஸ்வார்த்த2பரதை பெரும்பாலும் நீங்கியபோதிலும் அஹங்கார க3ர்ப்ப4மான ஸ்வப்ரவ்ருத்தி நீங்காத சிலர்க்கு ஸ்வார்த்த2தை கலந்த பரமாத்மாநுப4வத்தையும், அதற்கு ஸாத4னமான ஸாத4நாந்தரங்களையும் காட்டுகிறான். இவர்களைக் காட்டிலும் மேற்படியில் ஏறி ஸ்வப்ரவ்ருத்தியும் பெரும்பாலும் நீங்கப்பெற்ற சிலர்க்கு, ப4க3வத3நுப4வபரீவாஹமான ஸ்வார்த்த2 கைங்கர்யத்தையும், அதற்கு ஸாத4னமாக உபாயபு3த்3தி4யோடு செய்யப்படும் ப்ரபத்தியாகிற ஸ்வக3தஸ்வீகாரத்தையும் காட்டுகிறான். முற்கூறிய அனைவரிலும் மேம்பட்டவர்களாய், ஸ்வார்த்த2பரதையும், ஸ்வப்ரவ்ருத்தியும் அடியோடு நீங்கப்பெற்றவர்களாய், 'நான் பற்றும் பற்று உபாயமன்று; அவன் பற்றும் பற்றே உபாயம்' என்னும் நினைவோடு ஶரணவரணம் செய்கையாலே பரக3தஸ்வீகார நிஷ்ட2ர்கள் எனப்படும் உத்தமோத்தமர்களான பரம்நாதி4காரிகளுக்குப் பரார்த்த2 கைங்கர்யத்தையும், அதற்கு ஸாத4நமான ஸித்4தே4பாயமான தன்னையும் காட்டிக் கொடுக்கிறான். இத்தகைய மிகவுயர்ந்த அதி4காரியாகத் தன்னை ஆக்கிக்கொள்வதற்காக எம்பெருமானைக் காலகட்டி ஸ்வார்த்த2பரதையையும், ஸ்வப்ரவ்ருத்தியையும் அடியோடு கழித்துக்கொள்ளவேணும் — என்னுமிதுவே மாமுனிகள் காட்டிய பரமஸாரமான ஸித்3த4ாந்தமாகும்.

முற்கூறிய அதி$_4$காரிகளில் கைவல்யநிஷ்ட$_2$ன், ஸ்வார்த்த$_2$ பரமாத்மாநுப$_4$வநிஷ்ட$_2$ன் ஸ்வார்த்த$_2$ பரமாத்ம கைங்கர்ய நிஷ்ட$_2$ன் ஆகிய மூவர்க்கும் மோக்ஷத்திலேயே குறை வுடைய புருஷார்த்த$_2$ங்கள் நித்யமாக ஏற்பட்டுவிடுமளவுக்கு ஸ்வார்த்த$_2$பரதையும் ஸ்வப்ரவ்ருத்தியும் காரணமானவை என்பதையும் குறிக்கொள்ளவேண்டும். இதனாலேயே மதி$_3$ராபி$_3$ந்து$_3$ மிஶ்ரமான—(கள் துளி கலந்த)—ஶாதகும்ப$_4$ மயகும்ப$_4$க$_3$த தீர்த்த$_2$ஸலிலம் போலே — (பொற்குடத் தீர்த்தம்போலே)—அஹங்கார மிஶ்ரமான உபாயாந்தரம் என்று பிள்ளான் அருளினார்.

ஸர்வகர்மங்களும் கழிந்த பின்பு இப்படிக் குறை வுடைய புருஷார்த்த$_2$ங்கள் ஏற்படக் காரணம் என்ன? என்னும் கேள்வி எழுகிறது. கைவல்யநிஷ்ட$_2$ன் விஷயத் தில் "பிறவித்துயரற" [திருவாய் 1-7-1] ஈட்டில் காட்டிய பின்வரும் பரிஹாரம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது:— "ஆத்ம ப்ராப்திகாமனுக்கும், ப$_4$க$_3$வத் ப்ராப்திகாமனுக்கும் ஒக்குமாயிற்று ஸர்வேஶ்வரனை உபாஸிக்கையும், அந்திம ஸ்ம்ருதியும், இனிப் பேற்றில் தாரதம்யம் வருகிறபடியென்? என்னில்: உபாஸநஸமயத்தில் சிறுக்கக்கோலுகையாலே. அதாவது—அவனளவும் செல்லாதே நடுவே வரம்பிட்டுக் கொள்ளுகை. அத்தையிறே 'வரம்பொழிவந்து' என்கிறது. அதுதனக்கு அடி அவர்கள் ஸுக்ருததாரதம்யம். 'சதுர்விதா$_4$ ப$_4$ஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோऽர்ஜுந' என்று அருளிச்செய்தானிறே. ஸுக்ருதத்துக்கு அநுரூபமாக வாயிற்று புருஷார்த்த$_2$ங்களில் ருசி பிறப்பது; ருச்யநுகு$_3$ணமாகவாயிற்று உபாஸிப்பது, உபாஸநாநுகு$_3$ண மாக இருக்கக்கடவது ப$_2$லம்' என்கிற ஈட்டு ஸ்ரீஸூக்தி களின்படி ஸர்வகர்மங்களும் கழிந்தபின்பும் ஸுக்ருததார தம்யத்தால் ஏற்படும் ருச்யநுகு$_3$ணமாக முக்தியில் பே$_4$த$_3$த் தைத் தென்னாசார்யர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்குகிறது. ஸ்ரீவசநபூ$_4$ஷணம் 265-வது ஸூத்ரத்தில் பிள்ளைலோகாசார்யரும் "உபாயாந்தரநிஷ்ட$_2$ர்க்கு உபேயம் ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வம், ஸ்வபரயோஜநபரர்க்கு உபேயம்

ஸ்வார்த்த₂ கைங்கர்யம்" என்று உபாயாந்தரநிஷ்டர்களுக்கும் ஸ்வகீய ஸ்வீகாரநிஷ்டர்களுக்கும் முக்தியில பலபேதமுண்டு என்று மிகத்தெளிவாகக் காட்டியிருக்கிறார். மாமுனிகள் இவ்விடத்தில் மிகத் தெளிவாக வியாக்கியானமும் அருளியிருக்கிறார். அண்ணங்கராசார்ய ஸ்வாமியும் தமது அரும்பதவுரையில் ஆக்ஷேபஸமாதாந பூர்வகமாக இவ்விஷயத்தை நிலைநாட்டியிருக்கிறார் ஆசார்யஹ்ருதயத்திலும், அதன் வியாக்கியானத்திலும் இவ்விஷயம் வலியுறுத்தப் பட்டுள்ளது. பரமௌதார்யகுணமுடைய எம்பெருமான் முக்தியிற்கூட சில விஷயங்களை நிர்பந்தப் படுத்துவதில்லை, தம்மை அநுபவிக்க விரும்புவார்க்கு அவ்வாத்மாநுபவத்தையே அளிக்கிறான். தன்னை ஸ்வார்த்த₂மாக அனுபவிக்க விரும்புவார்க்கும், தனக்கு ஸ்வார்த்த₂ கைங்கர்யம் செய்ய விரும்புவார்க்கும், அவர்கள் விருப்பத்தை அநுஸரித்து முக்தியிலும் விஷய வைலக்ஷண்யத்தினால் ஏற்படும் ஸ்வார்த்த₂தையை அவர்களுக்கு அனுமதித்து அவர்கள் விரும்பும் பலனை அளிக்கிறான், ஸ்வார்த்த₂தையின் நாற்றத்தையும் ஸஹியாத பரக₃தஸ்வீகாரநிஷ்டர்களுக்கே அவர்களுடைய விருப்பத்தையொட்டிய பரார்த்த₂ கைங்கர்யத்தை அளிக்கிறான்—என்பதே தென்னாசார்யர்களின் திருவுள்ளம் என்று இவற்றிலிருந்து தெளிவாக விளங்குகிறது.

இப்படியிருக்கும்போது—தென்னாசார்யர்களின் சிற்சில வாக்யங்களைக் காட்டி அவர்களை ஸ்வக₃தஸ்வீகாரநிஷ்டை₂யையும் ஸ்வார்த்த₂ கைங்கர்யத்தையும் ஆதரிப்பவர்கள் என்று அப்ராமாணிகமாக எழுதி, பரக₃தஸ்வீகாரநிஷ்டை₂யையும், பரார்த்த₂ கைங்கர்யத்தையுமே அவர்கள் ஆதரித்துள்ளார்கள் என்பதைக் காட்டும் ஏராளமான தென்னாசார்ய ஸ்ரீஸூக்திகளை ஸூத₃ர்ஶனம் எடுத்துக் காட்டிய பின்பும் அந்த ஸ்ரீஸூக்திகளில் ஒன்றுக்குக்கூடப் பொருள் கூறாமல் நிற்கும் ஸாரதமநிஷ்கர்ஷகர்த்தா—இன்று (22—10—71) வந்த ந்ருஸிம்ஹப்ரியாவில் ஓர் வ்யாஸம் எழுதி, அதில் இவ்விவாதத்தைக் கிளப்பி, அதிலும் அந்த

ஸ்ரீஸூக்திகளில் ஒன்றுக்குக்கூடப் பொருள் உரைக்காமல், பிள்ளைலோகாசார்யருடைய சில ஸ்ரீஸூக்திகளை மாத்திரம் காட்டி, முக்தியில் புருஷார்த்தம் இல்லையென்பதே அவ ருக்கும் அபிமதம் என்று எழுதி முடித்திருக்கிறார்.

இப்படி எழுதுவதையே இயல்வாகக்கொண்ட இவர் இப்படி எழுதியதைப் பற்றி நாம் ஆச்சரியப்படவில்லை. ஓர் தனிச்சுவடியெழுதி இவர் இதை வெளியிட்டிருந்தால்— நாம் இதைப் பொருட்படுத்தியிருக்கமாட்டோம். பலவாயிரக்கணக்கான வாசகர்கள் படிக்கும் நருஸிம்ஹ ப்ரியாவில் இவ்விவாதவிஷயம் வெளிவந்ததாலேயே நாம் இவ்விஷயத்தை மறுபடி எழுதநேரிட்டது. இப்பத்திரிகை நிர்வாகிகளுக்கு (குறிப்பாகத் திருக்கள்ளம் ஸ்வாமிக்கு) இவ்விஷயம் நமது ஸம்ப்ரதாயத்தில் சில மாதங்களாகச் சர்ச்சையிலிருந்து இப்போதே விவாதம் ஓய்ந்திருக்கிறது என்று தெரியும். இது தெரிந்தும் அவர்கள் இவ்விஷ யத்தைக் கிளப்பியிருப்பதனால் நாம் அவர்களைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறோம். (1) ஸாரதம நிஷ்கர்ஷ கர்த்தா "பக்தியும் முக்தியும்" என்னும் வியாஸத்தில் நமது பக்ஷத்தின் மேல் எழுப்பியிருக்கும் ஆக்ஷேபங்களுக்கு நாம் ஸமாதானம் எழுதி அனுப்பினால் அப்பத்திரிகையில் அந்த வியாஸம் வெளியிடப்படுமா? (2) "இயம் கேவல லக்ஷ்மீசோபாயத்வ பரத்யயாத்மிகா। ஸ்வஹேதுத்வதியம் ருந்தே கிமுத ஸஹகாரிணம்॥" ['லக்ஷ்மீநாதனே உபாயம்' என்னும் அறிவாயிருக்கும் இப்ரபத்தி தான் உபாயம் என்னும் அறிவைத் தடுக்கிறது. தன் அங்கங்கள் உபாயம்— என்னும் அறிவைத் தடுக்கிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?] என்னும் ஸ்ரீதேசிககாரிகை ப்ரபத்த்யுபாயத்வவாதத்தையும், லக்ஷ்ம்யுபாயத்வவாதத் தையும் நிரஸிக்கிறது என்று ஒருவர் வ்யாஸம் எழுதினால் அதைப் பிரசுரிக்குமா? 'முனியே! நான்முகனே! முக் கண்ணப்பா' முதலானவிடங்களில் ஆழ்வார் த்ரிமூர்த்தி ஸாம்யவாதம் செய்கிறார் என்று ஒருவர் எழுதினால் அதை ப்ரசுரிக்குமா? இத்தகைய வியாஸங்களுக்கும் பிரகிருதமான

'பக்தியும் முக்தியும்' என்ற வியாஸத்திற்கும் வாசி அதிகமில்லையே! இக்கேள்விகளுக்கு நாம் ந்ருஸிம்ஹப்ரியா நிர்வாகிகளிடமிருந்து—(குறிப்பாகத் திருக்கள்ளம் ஸ்வாமியிடமிருந்து)—பதில் எதிர்பார்த்து நிற்கிறோம். நிற்க.

"விகல்போऽவிஶிஷ்டப2லத்வாத்" என்னும் ஸூத்ரத்திலும், அங்கு பா4ஷ்யம் முதலானவற்றிலும் முக்தியில் ப2லதாரதம்யம் இல்லையென்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்று முற்கூறிய வியாஸத்தில் எழுதப்பட்டுள்ளது. அந்த ஸூத்ரத்தில் ஸத2ாபிக்கப்பட்டது ஆநந்த3தாரதம்யமில்லை என்னுமளவேயொழிய, ப2லத்தின் ஆகாரத்தில் பே4தமில்லை என்பதன்று என்று நிஷ்காஷநிகஷத்திலேயே நிலைநிறுத்தப்பட்டது. அதற்கு யாதொரு பதிலையும் கூறாமல் திருப்பித் திருப்பி இதையே எழுதுகிறார். இங்கு ஒரு த்ருஷ்டாந்தத்தைக் காட்டி விளக்குகிறோம். ஒரு மனிதனுக்கு மூன்று மனைவிகள். ஒருத்தி புருஷனுடைய உகப்புக்காக அவனுக்குப் பணி புரிந்து ஸம்ஶ்லேஷிக்கிறாள். இரண்டாமவள் தன் உகப்புக்காக அவனுக்குப் பணி புரிந்து ஸம்ஶ்லேஷிக்கிறாள், மூன்றாமவள் அவனுக்குப் பணிபுரிவதில் ஈடுபாடில்லாமல் அழகு குணங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு அநுப4வித்துத் தன் உகப்புக்காக ஸம்ஶ்லேஷிக்கிறாள். இவர்கள் அனைவர்க்கும் ஸம்ஶ்லேஷாநந்த3ம் ஒன்றாயிருப்பதில் தட்டில்லையன்றோ, அதுபோலே ஸித்3தோ4பாயநிஷ்ட2ர், ஸ்வக3தஸ்வீகாரநிஷ்ட2ர், உபாயாந்தரநிஷ்ட2ர் ஆகிய மூவர்க்கும் ப2லத்தின் ஆகாரத்தில் பே4த3மிருந்தாலும் ஆநந்த3த்தின் அளவில் பே4த3மில்லை என்பது லோகாசார்ய வரவரமுனிகளின் திருவுள்ளம்.

இது இவ்வாசார்யர்களின் திருவுள்ளமல்ல என்று ந்ருஸிம்ஹப்ரியா ஸாதி4க்க முன் வருமானால் அவ்விஷயமான சர்ச்சையைப் பரமஸாத்விகமான முறையில் ஸதஸ்3ஸில் நடத்த நாமும் ஸித்3த4மாயிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

விரோதி4க்ருத் ஐப்பசித் திருமூலத்தன்று (24-10-71) கோயில் மணவாள மாமுனிகள் சாத்துமுறை கோஷ்டியில் இக்கட்டுரையின் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. நிஷ்காஷ நிகஷத்திலும் இது அநுபந்தமாக இணைக்கப்படுகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-24] [ஒளி-12

நிகஷ விஜய பூர்த்தி

['ஸுத3ர்ஶனம்' ஆசிரியர்]

ஸ்ரீ நருஸிம்ஹப்ரியாவில் மது4ராந்தகம ஸ்வாமியெழுதியிருநத கட்டுரைக்கு பதிலாக "வரவரமுனி ஸித்தாந்தம" என்னும தலைப்பில ஸுத3ர்ஶனத்தில வெளிவந்த கட்டுரையைக் கணடபின், ஸ்ரீ நருஸிம்ஹப்ரியாவின காரியங்களை கவனிதது வரும ஸ்ரீ உ வே. திருக்கள்ளம் நரஸிம்ஹராக4வாசாரியஸ்வாமி நம கட்டுரையில ப்ரார்த்தனைக கிணங்க பமபாயிலிருந்து ஸ்ரீமுகம ஸாதிததுளளார். ஸ்ரீ நருஸிம்ஹப்ரியாவில விவாத3ககட்டுரைகளை வெளியிடும உத்3தே3ஶமிலலை யென்று அதில அந்த ஸ்வாமி தெளிவுபடுததியுள்ளபடியால் அக கடிததத்தை வெளியிட்டு, அவருடைய நியமனத்தின்படி ஸுத3ர்ஶனத்தில இவவிதழுடன நாமும இவவிவாதம்பற்றிய கட்டுரைகளை நிறுததிக கொள்கிறோம மது4ராந்தகம ஸ்வாமியால மத்4யஸ்த2ராக நியமிககப பெறறவரும், உப4யவேதா3ந்தங்களிலும் ஒபபறற ஜ்ஞானமுள்ளவரும, பரமஸாத்விகரும, பா4ரததே3ஶத்தில் விஶிஷ்டாத்3வைதகலாஶாலைகள் பலவற்றில் சிறநத பதவிகள் வகிததவருமான திருநாங்கூர் ஸ்ரீ உ வே. ப்ர. ப அண்ணங்கராசாரியஸ்வாமியின அபி4ப்ராய ஸ்ரீமுகம சென்ற மாதமே நமககுக கிடைத்தது. அது இவ்விவாததில நடுநிலைநிற்கும தீரப்பாக அமைந்திருப்பதால் அதை அடுததபடி கொடுககிறோம. இவ் விவாதத்தில நிலைநாட்டப்பெற்ற நிர்ஹேதுககருபா ப்ரப4ாவததை விளக கும நமது கட்டுரையொன்றுடன் இநநூலை நிறைவடைவிககிறோம. இனி பததிரிகை எதிலாவது இவவிவாதம கிளப்பப்பட்டாலொழிய அல்லது நாம காட்டிய நியாயமான நியமங்களுடன வாத3ஸபை4 நடநதாலொழிய இவவிவாத3மபற்றி ஸுதர்ஶனத்தில எதுவும வெளியிடபபடமாட்டாது. நிஷ்காஷநிகஷத்தின் விஜயம் இவ்வாறு நிறைவுபெறுகின்றது

ஸ்ரீ உ. வே. திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாசார்ய ஸ்வாமியின் ஸ்ரீமுகம்

28—10—71. செம்பூர், பம்பாய்-71

க்ஷேமம் ஸ்ரீ உ. வே. ஸ்வாமி ஸன்னிதியில தாஸன தண்டம் ஸமர்ப்பிதது விஜ்ஞாபநம். உபயகுசலோபரி ஸ்வாமி 24—10—71 அநுக்ரஹித்த ஸ்ரீமுகத்தை இன்று ஸேவிக்கப்பெற்றேன் அடியேன 1½மாத காலமாக சென்னையில் இல்லை. டெல்லியில் உபன்யாஸத்திற்காகச் சென்றிருந்தேன் தற்சமயம் பம்பாயில் இருக்கிறேன். மறுபடியும் டெல்லி செல்லப்போகிறேன். டிஸம்பர் 4-ஆம் தேதிதான் சென்னைக்குத் திரும்புவேன். ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் ஐப்பசி மாதம் ப்ரசுரங்களான விஷயங்களை தேவரீர்களைப் போலவே அடியேனும் இப்பொழுதுதான ஸேவித்தேன் ஸம்ப்ரதாய விரோததை ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஒருநாளும் கிளப்பிவிடாது யார் மனதும் புண்படாதவாறு எழுத வேண்டும் என்பதே அடியேனுடைய ப்ரார்த்தனை. அப்படி யாராவது எழுதினாலும் அந்த பாகங்களை யதாசகதி விலக்கி வருகிறோம். சில ஸமயங்களில் மாற்றியும் அமைக்கிறோம். அவரவர் ஸம்ப்ரதாயத்தில் அவரவருக்கு ஊற்றம் இருக்கவேண்டும். ஆனால் பிற ஸம்ப்ரதாயத்தை தூஷிக்கக்கூடாது இவ்விதமே ஆசார்யாகள் விஷயத்திலும், தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தாகள், ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் சொல்லும் சில விஷயங்களை ஒருநாளும் ஏற்கப்போவதில்லை. இவ்விதமே அவர்கள் சொல்லும் சில விஷயங்களை இவர்கள் அங்கீகரிக்கப்போவதில்லை. ஆகையால் திரும்பத் திரும்ப நாம் எழுதிக்கொண்டிருப்பது மிகவும் வ்யர்த்தமான கார்யம் இனி ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில இந்தமாதிரியான விஷயங்கள் ப்ரசுரமாகாதவாறு தடுக்க முயலுகின்றேன் ஸ்ரீ புரிசை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியும் இம்மாதிரியான விஷயங்களை அனுமதிக்கமாட்டார். தேவரீர்களும், விவாதத்தை வீணாக வளர்க்காமல் விட்டுவிடுவது நல்லது ஸ்ரீ மதுராந்தகம் ஸ்வாமி எழுதுவதற்கு ஒருமுறை பதில் கூறாமல் விட்டுவிட்டால் அந்த ஸ்வாமி தானாகவே நிறுத்திக்கொள்கிறார் பாகவத தாஸ்யத்தில் நிலைநின்ற தேவரீகள் இதைக் கடைப்பிடிப்பது உசிதமென்று தோன்றுகிறது. க்ஷமிக்கவும் ஸ்ரீ மதுராந்தகம் ஸ்வாமிக்கும் அடியேனுடைய ப்ரார்த்தனையைத் தெரிவித்திருக்கிறேன்.

தி. ச. நரஸிம்ஹராகவதாஸன.

திருநாங்கூர் ஸ்ரீ உ. வே.
ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் தீர்ப்பு

ஶாஸ்த்ர ஸம்ப்ரதா3ய க்3ரந்த2ங்களில் பூர்ணப்ரஜ்ஞராக ளான இரு மஹநீயர்களின் நூல்களை ஆராய்ந்து ஒரு முடிவு கூற அடியேன் அஶக்தன். ஆகிலும் பெரியோரின் நியமனத்தால் ஸாரதம நிஷ்கர்ஷ, நிஷ்காஷ நிகஷங்களைப் பராமர்ஶித்ததில் அடியேன் மனதில் பட்டதை விண்ணப்பித்துக்கொள்ளு கிறேன். குற்றங்குறைகளைப் பொறுத்தருளவும்.

1. நிஷ்காஷத்தில் கண்ட விஷயங்களுக்கு யதா2ஸம்ப்ரதா3யம் நிகஷத்தில் விடையளிக்கப்பட்டிருக்கிறது. சில விஷயங்களுக்கு எல்லோரும் எளிதில் தெளிந்துகொள்ளும்படி விரிவான விளக்கம் தேவையாகவிருக்கிறது.

2. நிஷ்காஷத்தில் ஸ்வபக்ஷஸாத4கமாக உதா3ஹரிக்கப் பட்ட ஸ்ரீலோகதே3சிக ஸ்ரீஸூக்திகளுக்குத் ததீ3ய ஸ்ரீஸூக்த்யந்தரங்களுக்கு அவிருத்3த4மாக ஸமந்வயம் காட்டவேணும்

3. முமுக்ஷுப்படியிலும் ஸ்ரீவசனபூ4ஷணத்திலும் அதி4காரி விஶேஷணமாய். ப2லபூ4தமான ப்ரபத்தியைத்தான் நிருபித்தருளினர்—சரமஶ்லோகார்த்த2மாக. சரமஶ்லோகத்திற்கு ஸாத4நப்ரபத்திபரமாக மற்றொரு யோஜனை ஸ்ரீஸ்வாமி தே3சிகனால் காட்டப்பட்டிருக்கிறது. யோஜநாபே4த3ம் ப்ரஸித்3த4மானது. आर्तेषु आशुफला என்கிற ந்யாஸதிலக ஶ்லோகத்தில் ப்ரார்த்தி2தமான ப்ரபத்தி ப2லப்ரபத்தியே என்பது ஸ்வரஸமாகும். யதா2ஸம்ப்ரதா3யம் அவரவர்கள் தெளிந்திருக்கப் ப்ராப்தம்.

4. நிஷ்கர்ஷத்தில் ஆழ்வார்களை ஸாத4நப்ரபத்தி நிஷ்ட2ராகச் சொல்லுவது ஸ்ரீமல்லோகதே3சிகனின் திருவுள்ளத்துக்குச் சேராதது. ப4க்திபூ4மாவினால் கண்ணுஞ்சுழலையிட்டுப் பண்ணும் ப்ரவ்ருத்திகள் ஸித்3தோ4பாயகருஷிப2லமாய் உபேயாங்கர்பூ4தங்களே தவிர ஸாத4னகோடியில் அந்வயிக்க மாட்டா என்பதே ஸ்ரீவசநபூ4ஷண ஶாஸ்த்ர ஸித்3தா4ந்தம்.

5. ஸாத₄ந பரபத்திநிஷ்ட₂ராக நிஷ்கர்ஷத்தில் குறிப்பிடப்பட்ட பரமாசாரியரும் "पितामहं नाथमुनिं विलोक्य प्रसीद मद्वृत्तमचिन्तयित्वा" என்றருளிச்செய்தார். ஆகையால் ஆசார்ய ஸம்பந்தத்தையே இவர் தமது உஜ்ஜீவநஹேதுவாகக் கொண்டார் என்று தேறுகிறது. எம்பெருமானாரும் மாறனடி பணிந்துய்ந்தவர். இவர்கள் ஸாத₄நபரபத்தியை அனுஷ்டி₂த்தார்கள் என்பது ஸந்தி₃க₃த₄ஸித்₃த₄ம்.

6. உபாயாந்தரத்தைக் காட்டிலும் பரபத்தியே சிறந்ததாகையால் தத்ப்ரதிபாத₃கமான ரஹஸ்யத்ரயமே ஸாரதம ஶாஸ்த்ரம். தத்ப்ரதிபாத்₃யமான ஸித₃த்₄தோபாய நிஷ்டை₂யே சிறந்தது. அந்த ஸித்தோபாயத்திலும் ப்ரத₂மபாவத்தைவிட சரமபாவமே சாலச்சிறந்தது—என்பது ஸ்ரீமல்லோக தே₃சிக ஸித்தாந்தம்.

7 மாமுனிகள் கண்ட வேதா₃ந்த ஸார நிஷ்கர்ஷத்தில் ஸித்தோபாயத்தின் ப்ரத₂மசரமபர்வங்களை விளக்கியிருக்க வேண்டும்.

8. வேற்றுமையில் ஒற்றுமையைக் காணபோம் என்கிற நிகஷகாரரின் நன்மொழி பொன்மொழியாகும்.

திருநாங்கூர் ப்ர. அ. தாஸன்.
ப்ருந்தாவன் 1—10—71

ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு

ஸாரதமநிஷ்காஷகாத்தாவாலேயே நீதிபதியாக நியமிக்கப்பட்ட ஸ்வாமி மத₄யஸ்த₂த்₃ருஷ்டியோடு, பரமஸாத்விகமான முறையில் இவ்வண்ணம் வழங்கியிருக்கும் தீர்ப்பு நிஷ்காஷநிகஷத்தின் விஜயமாய்த் திகழ்கின்றது "*அபந்த₂ாநம் து க₃ச்ச₂ந்தம் ஸோத₃ரோऽபி விமுஞ்சதி*" [அல்வழியில் செல்பவனை ஸஹோத₃ரனும் கைவிட்டுவிடுவான்] என்னும் ரீதியில் அனைவராலும் கைவிடப்பட்ட தம் தோல்வியை மறைப்பதற்காக, பதில் என்ற பெயரில் ஏதோ ஓர் சுவடியை அச்சிட்டு ஸாரதமநிஷ்காஷகாத்தா ஸ்வகோ₃ஷ்டி₂களில் ப்ரசாரம்செய்துவருவதாகத் தெரிகிறது, நாம் காட்டிய நியாயமான நியமங்களுக்குக் கட்டுப்பட்டு வாத₃ஸத₃ஸ்ஸை நடத்த இசையாமல், இத்தகைய காரியங்களைச் செய்து பதில் வெளிவந்துவிட்டதாகப் பெயர்பண்ணுவதே நி[illegible]கஷவிஜயத்தின் பூர்த்தியாகும், அடுத்தபடியாக இவ்வாத₃த்தில் நிலைநாட்டப்பெற்ற ப₄க₃வந் நிர்ஹேதுககிருபையின் பரபாவத்தை விளக்கும் கட்டுரையோடு நிஷ்காஷநிகஷத்தின் அநுபந்தங்கள் நிறைவடைகின்றன.

நிர்ஹேதுக கிருபையும் ஸஹேதுகப் படிக்கட்டுகளும்

“நாட்டினான் தெய்வமெங்கும் நல்லதோர் அருள் தன்னாலே காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம்” [திருமாலை 10] என்ற திருமாலைப் பாசுரத்தில் தொண்டரடிப்பொடிகள் திருவரங்கம் காட்டுகையை நல்லதோர் அருளின் காரியமாகப் பேசுகிறார். இதுவே நிர்ஹேதுக கிருபையாகும். ஒன்றியொன்றி உலகம் படைக்கை, மறையருளுகை, எங்ஙின்ற யோனியுமாய்ப் பிறக்கை, திருவரங்கம் (முதலிய அர்ச்சாவதாரங்களைக்) காட்டுகை, ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் அவதரிப்பிக்கை முதலான சேதநோஜ்ஜீவநார்த்தமான எண்ணிறந்த செயல்கள் இந்த நிர்ஹேதுக கிருபையினால் செய்யப்படுமவையேயாகும். இதை “நல்லதோர் அருள்” என்கையாலே, இதற்குக் கீழ்ப்பட்ட அருளும், ஓரருளும் எம்பெருமானுக்கு உண்டு என்று உணர்த்தப்படுகிறது. இவை ஸஹேதுக கிருபைகளாகும். அதில், ‘அருள்’ என்பது மற்ற தெய்வங்களுக்கு அந்தர்யாமியாயிருந்து எம்பெருமான் செய்வது, ‘ஓரருள்’ என்பது தானே சேதனர் அனுஷ்டிக்கும் உபாயாந்தரங்களுக்குப் பலனளிப்பது. சேதனரின் பக்குவத்திற்குத் தக்கபடி தேவதாந்தர ஸமாஶ்ரயணமும் உபாயாந்தராநுஷ்டானமும் திருவரங்கம் தொழுகைக்குப் படிப்படியாகக் காரணங்களாக ஆகின்றபடியால் தெய்வங்களை நாட்டுகைக்குக் காரணமான அருளும், உபாயாந்தரங்களைக் காட்டுகைக்குக் காரணமான ஓரருளும் திருவரங்கம் காட்டுகைக்குக் காரணமான நல்லதோரருளை அடையும் படிக்கட்டுகளாய் அமைகின்றன. இதை ஓர் த்ருஷ்டாந்தத்தின் மூலம் எளிதில் உணரலாம்.

உத்தமனான தந்தை தன் பிள்ளை நல்லவனாவதற்காகப் படும்பாடுகள் எல்லாமே நிர்ஹேதுககிருபையினால் விளைந்தவையாகும். ஆயினும், பிள்ளையின் பக்குவத்திற்குத் தக்கவாறு சில ஸஹேதுககிருபைகளையும் அவன் பிற

மூலமும் நேரேயும் காட்டவேண்டியுள்ளது. பிள்ளை கோபித்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினால், இராமடம் ஊட்டுவதுபோன்ற செயல்களாலே பிறரைக்கொண்டு அவனை ரக்ஷிப்பது. தக்க பள்ளிக்கு அனுப்பி அவனுக்குக் கல்வி கற்பிப்பது முதலான செயல்களில் பிறர்மூலம் அவன் சில அருள்களைச் செய்கிறானன்றோ. அந்த ஸ்தானத்திலேயே எம்பெருமான் மற்ற தெய்வங்கள் மூலம் செய்யும் அருள் அமைகின்றது. அத்தகப்பன் பிள்ளையைப் படிப்படியாக முன்னேறுவதற்காக, 'நீ இவ்வருடம் முதல் வகுப்பில் தேறினால் உனக்குப் பட்டுச்சட்டை வாங்கித் தருவேன், கைக்கடிகாரம் வாங்கித் தருவேன்' என்பது போன்ற பரிசளித்தலைச்செய்து முன்னேறுவதுபோலே எம்பெருமானும் சில ஸாதநாந்தரங்களைக் காட்டி அவற்றை அநுஷ்டித்தால் ஒவ்வொரு பலனை அளித்து இவனைப் படிப்படியாக நிர்ஹேதுக கிருபைக்குப் பாத்திரனாக்குகிறான். இது பிறர்மூலம் காட்டும் அருளைவிடச் சிறந்ததாகையாலே 'ஓரருள்' எனத்தக்கது. பிள்ளை கற்கவேண்டியதனைத்தையும் கற்றுப் பக்குவமடைந்துவிட்டால் இராமடமூட்டுதல், பள்ளியனுப்புதல், பரிசளித்தல் முதலானவை அவனுக்குத் தேவையில்லாமற் போகின்றன. இந்நிலையில் தனயன் தந்தையின் நிர்ஹேதுக கிருபையை முழுவதும் உணர்ந்து 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்னும் முதுமொழியின்படி வாழ்கிறான். இதுபோலவே ஸஹேதுககிருபைகளாலே படிப்படியாக அறிவுவிளக்கம்பெற்ற சேதனனும் எம்பெருமானுடைய நிர்ஹேதுக கிருபையை உணர்ந்து அதையே தஞ்சமாகக்கொண்டு வாழ்கிறான் என்று கண்டுகொள்ளலாம்.

ஆக, சேதனர்களை உய்விக்கும் விஷயத்தில் எம்பெருமான் நிர்ஹேதுக கிருபையை உடையவன் என்றும், அவனுடைய ஸஹேதுக கிருபைகள் அவர்களைத் தன் நிர்ஹேதுக கிருபைக்குப் பாத்திரராக்கும் படிக்கட்டுகளாய் அமைகின்றன என்றும் நிலைநாட்டப்பட்டதாயிற்று.

நிஷ்கர்ஷ நிகஷம்

வாத3ஸத3ஸ் நியமங்கள்

(ஸுதர்சனம் இதழ் 289)

நமது ஸுத3ர்ஶனத்திற்கும் இவ்விதழிலிருந்து வெள்ளி விழா வருடம் தொடங்குகிறது. மோக்ஷார்த்த2மான ப4க3வத் க்ருபை நிர்ஹேதுகமானது என்பது நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்3தா4ந்தத்தின் (குறிப்பாகத் தென்னாசார்ய ஸம்ப்ரதா3யத்தின்) தலைசிறந்த கொள்கைகளில் ஒன்று. இதை உணராமல் 'மோக்ஷத்தில் கிடைக்கும் ப2லன் நம்முடையதாகையால் அதற்கு நாமும் முயற்சி செய்யவேண்டும்' என்று கலங்கி தாம் செய்யும் சில காரியங்களில் உபாயபு3த்3தி4 வைப்பவர்களுக்கு, மோக்ஷத்திலும் கோதற்ற புருஷார்த்த2மான பரார்த்த2 கைங்கர்யம் கிடைப்பதில்லை, அவர்கள் விருப்பப்படி ஸ்வார்த்த2 ப2லனே கிடைக்கிறது — என்று ஆசார்யாக்3ரேஸரர்களான பிள்ளையுலகாசிரியரும், மணவாள மாமுனிகளும் வெளிப்படுத்தியருளினார்கள். இதைப் பொறுக்கமாட்டாமல், 'தர்க்கரத்னம்' என்னும் விருது பெற்றிருப்பதாலே தர்க்கத்தாலே எதையும் சாதித்துவிடலாம் என்று இறுமாந்திருக்கும் மது4ராந்தகம் ஸ்வாமி—பிள்ளையுலகாசிரியரும், மாமுனிகளும் ஸஹேதுககிருபா வாதிகளே என்று சென்ற வருடத்திலிருந்து துணிந்து எழுதத் தொடங்கினார். நிஷ்கர்ஷ நிகஷத்தின் மூலம் ஸுத3ர்ஶனம் இவ்வாதத்தின் பொய்ம்மையை வெளிப்படுத்திய பின்பும் 'ஶாந்தியடையாமல், ந்யாயமான நியமங்களுக்குக் கட்டுப்பட்டு வாத3ஸத3ஸ் நடத்தி நிஷ்கர்ஷம் பெறவும் இசையாமல் 'நிகஷஶ்ருத தூ3ஷணீ'' என்னும் பெயரில் நிரர்த்த2கவாக்3 ஜாலங்கள் நிரம்பியதொரு சுவடியை எழுதி ரஹஸ்யமாகச் சில நாட்கள் உலவவிட்டு ஸ்ரீ காஞ்சீ மஹாவித்3வான் ஸ்வாமியிடமிருந்து ஸ்ரீராமாநுஜனில் தக்க பதிலைப்பெற்ற பின்பு நமக்கு அச்சுவடியை அனுப்பினார். தொடக்கத்தில் பூ4மிகையென்று ஒன்று எழுதி, அதில் மத்4யஸ்த2வித்3வத்3பி4ப்ராயங்களைக் கொடுப்பதாகத் தொடங்கி, கடிதங்களின் இடையிடையே '' ....' என்று குறியிடுகிறார். தமக்கு வேண்டாத பகுதிகளை மறைக்கிறார் என்று தெளிவாக

விளங்குகிறது. திருநாராங்கூர பர. ப. ஸ்ரீ உ. வே. அணணங்கராசாரயஸ்வாமியின அபி4ப்ராயததைக கொடுப்ப தாகத தொடஙகி. அவர் சென்ற வருஷத்தில வெளியிட்ட வாதஸலய விமர்ஶம எனனும வியாஸததில தமககு மிகவும் பா3த4கமான வாக்யஙகளைத் தமககு ஸாத4கமாக மயங்கி அசசிட்டிருககிறார். அந்த ஸ்வாமி சென்ற ஸுத3ர்ஶனததில் இவ்விவாததில் தீாப்பு எழுதி இவருடைய பக்ஷத்தின நோமைமினமையை நிலைநாட்டியிருபபதை உலகமே அறிந் துள்ளது. திருமலை நலலான் ராமகிருஷ்ணய்யஙகார் ஸ்வாமி இவா எழுதியிருககும பல விஷயங்களுககு விரோதமாகத் தீாபபு வழஙகியிருபபதும ஸுத3ர்ஶனததின மூலம உலகம பரவியுள்ளது. அப்படியிருகக, இவாகளெலலாம தமககு ஸாத4கம்போலே எழுதி உலகை மயககபபாாககிறார். நிறக.

‘நிகஷ ஶததூ3ஷணி’ எனனும சுவடி எவ்வளவு அஸம்ப3த்3த4மானது எனபதை அதில நமககு பதில எழுதி யிருககும் பகுதியைக கொண்டே ஸத2ாலீபுலாக (ஒரு பானை சோற்றுககு ஒரு சோறு பதம் எனனும்) நியாயத் தாலே காணலாம. ‘வரவரமுனி ஸித்3த4ாநதம்’ எனனும் நமது கட்டுரையில— (பிள்ளையுலகாசிரியரின திருவுளளத் துககு முரணாக—முகதியில ப2லபே4த3மினமையை அவா திரு வுள்ளம பற்றியதாக இவர் கட்டுரைஎழுதியிருப்பதுபோலே) ஆழவாா் தரிமூர்த்தி ஸாம்யவாத3ம செய்கிறாா என்று ஒருவர் எழுதினால அககட்டுரையை (வைஷ்ணவ பத்ரிகையான) நருஸிமஹப்ரியா பதரிகை ப்ரசுரிககுமா எனறும, தே2ஶிகன லக்ஷ்ம்யுபாய வாத3ததையும. பரபதயுபாய வாததைதையும நிரஸிக்கிறாா எனறு ஒருவா வியாஸம எழுதி னால (தேசிக ஸமப்ரத3ாய பதரிகையான) நருஸிம்ஹபரியா பதரிகை அதைப் பிரசுரிககுமா எனறும் நாம நருஸிமஹ பரியா பத்திரிகை நிாவாகிகளை (குறிபபாகத் திருககள்ளம ஸவாமியை) கேள்வி கேட்டிருநதோம. திருககள்ளம ஸ்வாமி நாஙகள அததகைய கட்டுரைகளை பரசுரிகக மாட்டோம, இவருடைய கடடுரையும தாம சென்னையி விலலாமலிருநதகாலேயே பரசுரிககபபடடுவிடடது எனறு எழுதிவிட்டார். சென்ற ஸுத3ர்ஶனததில அநத ஸ்வாமி யின் கடிதமும் பிரசுரிக்கப்படடுள்ளது. இநத நமது கேள்வியைக கூடப புரிநதுகொள்ளமாட்டாமல, இவர்

தமது ஶததூ₃ஷணி 103 104, 105-வது தூஷணங்களில, "தேசிகன லக்ஷ்மிககு உபாயதவததை சொலலியிருக்கிறூர் ஆழவாா தரிமூர்த்திஸாமயததைக கூறவிலலை; சரீரசரீர பாவேந அபேதம்" இத்யாதி₃களை நமககு உபதேசம செய் கிறூா! "ஸ்வயமபி லிகி₂தம ஸ்வயம ந வாசயதி என்னும் ரீதி யில இவர் எழுதும இததகைய பதிலகளை நாம் ஸுத₃ர்ஶனத தில வெளியிடவேணடும் எனறு தூ₃ஷணி102ல் பேராசைப் படுகிறூர். எவர்ககும எதுவும புரியாத ரீதியில் மனமபோன படியெலலாம எழுதும் இவருடைய எழுததுககளைச் சீாதிருத தம செய்து வெளியிட ஏதாவது ஒரு பததிரிகை முன வந்தால அதறகு பதில உரைப்போமேயொழிய, இவா தலைகால தெரியாமல எழுதி வெளியிடும தனிசசுவடிகளை வெளியிட்டு ஸுத₃ர்ஶனததைக கறைபபடுத்தமாட்டோம எனறு முனனமே நாம் தெரிவித்துவிட்டோம் நிற்க.

ஐடபசியிதழில இவர் கட்டுரையை வெளியிடட ந்ருஸிமஹப்ரியா பத்ரிகையும, இவரால மத்₄யஸத₂ராக நியமிககபபெறற திருநாஙகூர் ஸ்வாமியும இவரைக கைவிட்டு விட்டதை நிகஷவிஜய பூர்த்தியில எடுததுக காட்டி "அலவழியில செலபவனை ஸஹோத₃ரனும கைவிடடுவிடுவான" எனனும ரீதியில அனைவராலும் இவர் கைவிடப்பட்டுவிட்டார் எனறு எழுதினேும நாம. இதறகு மேல், இவர் நமககு எழுதியுள்ள கடிததததில், தமககு ஸஹோத₃ரர் கிடையாது எனறு விதண்டாவாதம் செய் கிறூர். நமக்கு ஸஹாயமாயிருப்பவர்கள் திர்யககுகளே (விலங்குகளே) எனறு நம்மோடன்றியில் நமக்கு ஸஹாய மாயிருப்பவர்கள் மீதும் வசவுமாரி பொழிகினறூா. தம் தோலவியை மறைபபதற்காக மனமபோனபடியெலலாம் எழுதுகிறூா. இதறகு ஓர் முறறுப்புள்ளி வைப்பதறகாக, நாம 4—12—71ல ஸ்ரீ உ. வே ஶதாபி₄ஷேகம் ஸ்வாமியின மூலம கீழககண்ட வாத₃ஸ்த₃ஸ் நியமங்களைக குறிததனுபபி, இதற்குட்படடு வாத₃ஸ்த₃ஸ நடதத இசைகிறீரா எனறு கேட்டு அனுபபினேும். அந்த ஸ்வாமியும் உப₄யவேதா₃ந்த பரசார சபையின உபந்யாஸத்தின்போது இநநியமஙகளைப் பலரறிய வாசிததுககாட்டி இவரிடம கொடுததார். அது பினவருமாறு.—

வாத ஸதஸ் நியமங்கள் 1.

1. மதுராந்தகம் ஸ்வாமி சில ஸ்வாமிகளை மத்$_4$யஸத$_2$ ராகக குறிககவேண்டியது.

2. அடியேன அதே எண்ணிககையுள்ள ஸவாமிகளை மத்யஸதராகக குறிப்பேன்.

3. ஒருவரால குறிககப்படடவரை மற்றவர் ஏற்க மறுககககூடாது, மத$_4$யஸத$_2$ராககக்குறிககபபட்டவா தம் ஸம ப்ரத$_3$ாய க்$_3$ரந்த$_2$ங்களை குருமுகமாகக கேட்ட வ்யபதி$_3$ஷ்ட வித்வானு எனபதொனறையே குறிககொள்ளவேண்டியது

4. தென்னுசாாய கரந்தங்களை குருமுகமாகக்கேட்ட தெனனுசார்ய ஸம்ப்ரதாய விதவான்களே அந்த க்ரந்தங் களுககு அர்த்த நிஷ்காஷம செய்யலாம. தேசிக க்ரநதங களை குருமுகமாககேட்ட தேசிக ஸமபரதாய விதவான களே தேசிக கரந்தங்களுககு அர்தத நிஷகர்ஷம செய்யலாம்.

5 மதயஸத விதவானகள், வாதி பரதிவாதிகளான மதுராந்தகம வேளுககுடி ஸ்வாமிகள், ஸுதர்ஶனம ஆசிரிய னுகிற அடியேன ஆகிய இவர்கள் தவிர வேறு எவரும வாதம நடககுமிடததுக்கு வரககூடாது.

இந்த நியமங்களுககுட்பட்டு வாதஸதஸ் நடததுவதில அடியேனுககு ஆக்ஷேபமிலலை.

இப்படி வாதஸதஸ நடநது அதில ஏறபடும் தீரமானத் தில எலலா விதவான்களும கையெழுத்திடவேண்டும. அதை ஸுதர்சனததில வெளியிட விததமாயிருககிறேன.

4—12—71. S. கிருஷ்ணஸவாமி அயயஙகார்.

இதைப் பெற்றபின், இநநியமங்களை ஏறறுக்கொணடு, மது$_4$ராந்தகம் ஸ்வாமி ஒரு கடிததத்தை 6—12—71ல எழுதி அடியேனுககு அனுபபினர். அது பினவருமாறு —

மதுராந்தகம் ஸ்வாமியின் கடிதம்

(1) 4—12—1971ல் எழுதியனுப்பிய வாதஸதஸ்ஸு நிய மங்கள் ஐந்தும் அடியேனுக்கு ஸம்மதமே. வாதத்திற்கு இடம் காலம் இவற்றை உடனடியாக தேவரீர் திருவுள்ளம்போல் நிர்ண யிக்கலாம். சென்னையில் ஸபை நடத்துவதில் மத்யஸ்தர், வாதி எல்லோருக்கும் சௌகர்யமென்று தோன்றுகிறது.

(2) "விவாத விஷயம் பற்றிய முக்கியமான குறிப்பின் கீழ் முக்தியில் பல பேதத்தில் இருவகை ஆசார்யர்களுக்கும் அபிப்ராய பேதமுண்டா இல்லையா? என்கிற விஷயம் முக்யமாகவும், அஸார பத்யார்த்த விஷயம் அமுக்யமாகவும் (199–200 பக்கம்) தேவரீர் குறிப்பிட்ட விஷயங்களிலே விவாதம் நடத்தவும் சம்மதமே

(3) பரஸ்பரம் வாதி ப்ரதிவாதிகள் ஸாதக பாதகங்களை மத்யஸ்தர் முன்பு வாதிக்கும் உரிமையை தேவரீருமிசையும்.

(4) நிகஷ முன்னுரை முடிவுரைகளில் விவாதாஸ்பதமான விஷயத்தில் நம்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களுடையவும் தேசிகனுடையவும் திருவுள்ளங்களை நிஷ்கர்ஷிக்க வேண்டியது என்று முன்னுரை 7ம் பக்கம் முடிவுரை 192லும் உள்ளது. இரண்டாவது பாராவில் காட்டிய முக்யாமுக்ய விஷயங்களும் விவாத விஷயங்களென்று தேவரீரே நிஷ்கர்ஷித்துள்ளது அவ்வாறே ஸம்மதிக்கின்றேன்

(5) ஸபை இடம் காலம் எப்படி அமைக்கலாமென்பதை நேரில் நாம் கலந்து, கிளர்ச்சியிராமலும் ஜயாபஜயங்களில் நோக்கில்லாமலும் கோர்ட்டு வ்யவஹாரமுறையில் லேகப்ரதிலேகமுகமாக வாதவிஷயத்தை ஊர்ஜிதம்செய்து தெளிவு பெறுவோம். மத்யஸ்தர் தீர்ப்பின்படி அத்தெளிவு.

153, N C. Street, Srirangam. } **தி. ஈ. வீரராகவதாஸன்.**
6—12—71. } **ஸ்ரீ மதுராந்தகம்.**

இக்கடிதத்தைப் பெற்றவுடன், வாதவிஷயங்கள், இடம் முதலியவைபற்றி மது₄ராந்தகம் ஸ்வாமியின் விருப்பப் படியே இசைவுகாட்டிப் பின்வரும் கடிதத்தை 6—12—71ல எழுதினேன.

வாத ஸதஸ் நியமங்கள் 2.

1. வாத விஷயங்கள்

1. முக்தியில் பலபேதம் உண்டா இல்லையா?

2. மோக்ஷார்த்த₂மான பகவத்க்ருபை, நிர்ஹேதுகமா ஸஹேதுகமா?

3. பரபக்திக்கு வ்யாஜோபாயத்வம் உண்டா இல்லையா?

4. "அஸார" ஶ்லோகார்த்தவிசாரம்.

2. வாதம நடக்கவேண்டிய இடம முதலியன

சென்னையிலேயே தை மாதத்தில் நடத்தலாம. குறிப பாக எநத தேதிகளில எநத கருஹூத்தில என்பதை வரதா சார்ய ஸவாமியையும கலந்துகொண்டு தெரிவிக்கிறேன.

3. மத்யஸ்தாகள

மதுராநதகம ஸவாமி முதலில தமது மத்யஸ்தர்களைக குறிததனுபபவேண்டியது. உடனே அடியேன குறித தனுபபுகிறேன. ஸ்வாமி காட்டிய மறற அமசங்களையும ஒப்புகக்கொள்ளுகிறேன.

6—12—71 S. கிருஷ்ணஸவாமி அயயஙகார்.

இதைப் பெறறவுடன மது₄ராந்தகம் ஸ்வாமி தாம 6—12—71 கடிததத்தில இசைநததறகு மாறாக. இருவரும கலநது மத₄யஸ்த₂ர்களை நியமிககவேண்டுமென்றும், மத்₄யஸ்த₂ாகளுககுத் தலைவா வேண்டும எனறும எழுதி. அடியேனைககுறித்து வசவுமாரியையும் தொடஙகிவிட்டாா. அதைப பெறறவுடன 9—12—71ல அடியேன் எழுதிய கடிதம பின்வருமாறு —

மூ னறுவது கடிதம்

த₃ாஸஸ்ய விஜ்ஞாபனம. முநதிய கடிததத்தில் நியமங களை ஒபபுகக்கொண்டுவிட்டு இபபோது ஏறகமறுபபது சரியலல. "அஸார" ஶ்லோகார்த்தத்தையே முதலில வைபபதுபற்றி அடியேனுககு ஆக்ஷேபமிலலை. மார்கழி மாதத்தில வரதாசாாய ஸவாமியும, அடியேன் நியமிககக கூடிய மதயஸதர்களும வெளியூா போகிறுர்கள். அதனு லேயே தை மாதத்தில ஸதஸ நடத்தலாம எனறேன. இருவரும கலநது நியமிபபது இயலாது. அடியேன சொலலுகிறவர்களை தேவரீா ஒப்புகக்கொள்ளாவிட்டால தேவரீர் சொல்லுகிறவர்களை அடியேன ஒப்புகக்கொள்ள மாட்டேன. ஆகையால முதல் கடிதத்தில அடியேன் எழுதி தேவரீா ஒபபுகக்கொண்டபடி தேவரீா ஸமமாகவோ விஷமமாகவோ மத்யஸதர்களை நியமித்தபின் அடியேனும அப்படியே (அதே எணணிக்கையில) நியமிபபேன். இது தவிர வேறுவழி நடககாத வழியேயாகும.

9—12—71. S. கிருஷ்ணஸ்வாமி அய்யஙகாா.

இதைக் கணடவுடன் மேலும் வசவுகளையே பொழிந்து மனமபோனபடி ஓர் கடிதம எழுதினார் மது₄ராநதகம ஸவாமி. இதற்கு பதிலாக 13—12—71ல கீழககண்ட கடிததததை நாம் எழுதினோம்.

நானகாவது கடிதம

ஸ்ரீ உ வே. மதுராநதகம ஸ்வாமிககு விஜ்ஞாபனம். நேறறு தேவரீா அனுப்பிய கடிதம தேவரீருடைய முதல கடிததததிறகு முறறிலும மாறுபட்டிருககிறது.

4—12—71ல அடியேன எழுதிய முதல கடிதத்தில் முதல் நியமம 'மதுராநதகம ஸவாமி சில ஸவாமிகளை மதயஸதராகக குறிககவேணடியது' எனபது. இரணடாவது நியமம "அடியேன அதே எணணிககையுள்ள ஸவாமிகளை மதயஸதராகக குறிபபேன" எனபது. மேலே மூன்று நியமங்களையும குறிததுள்ளேன. இதற்கு பதிலாக தேவரீர் எழுதிய கடிததததில.— "4—12—71 எழுதியனுபபிய வாதஸதஸஸு நியமங்கள் ஐந்தும் அடியேனுககு ஸமமதமே" என்று தொடங்கியிருககிறீா. இப்போது அதற்கு முரணாக நாம இருவரும் கலநது நியமிககவேண்டும் எனறும, உமககு வேண்டிய சிலரைக குறிப்பிட்டு, அவர்களையே நியமிகக வேண்டும எனறும். தலைவர் வேண்டும எனறும் ஏதேதோ எழுதுகிறீர். முதலில ஒப்புககொண்ட நியாயமான நியமஙகளுக்கு உட்படடு வாதஸதஸ் நடததினால உமககுத் தோலவி நிச்சயம் எனறு உணர்ந்து இப்படி வாககு மாறுகிறீா. இதை அடியேன் எப்படி ஏறபது?

நமது முதல கடிதங்களில நாம இருவரும் ஏற்றுக் கொண்ட நியமங்களின ஸாரமாவது:— (1) மத்₄யஸ்த₂ாகளை நியமிபபதில் தேவரீருக்கும் அடியேனுககும் ஸமப்ராத₄ாந்யம அவஶ்யம். (2) எலலா மத₄யஸத₂ாகளுக்குள்ளும் பரஸபரம ஸமப்ராத₄ாந்யம் அவஶ்யம. தலைவா நியமிபபது வித்₃வான்களிடையே ஏற்றததாழவைக காட்டுமாகையால் இதை ஏறக இயலாது (3) மத்யஸ்தாகளுககுள் அவரவர் ஸமப்ரத₃ாய கரந்த₂ார்தத₂ நிஷ்காஷததில் அவரவர்ககே அதி₄காரமுணடு. முதலில ஒபபுக்கொண்ட இந்நியமங்களை மறுததால வாத₃ஸத₂ஸ நடககாது.

ஆகையால், அடியேனால் காட்டப்பட்டு, தேவரீரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐந்து நியமங்களுக்குக் கட்டுப்பட்டு சென்னையில் தை மாதத்தில் விவாதஸதஸ் நடத்துவதா யிருந்தால் நடத்தலாம். விவாதவிஷயங்களை ஸபையில் நியமிக்கப்படும் மத்யஸ்தர்களே தீர்மானித்துக் கொள்ள லாம். ஆகையால், 4—12—71ல் அடியேன் கடிதத்தில் முதல் நியமப்படி தேவரீர் உம் இஷ்டப்படி சில ஸ்வாமிகளை (குருகுலகலிஷ்ட வ்யபதிஷ்ட வித்வான்களை) மத்யஸ்த ராகக் குறிக்கவேண்டியதே இப்போது நீர் செய்யவேண்டி யது. இதைச் செய்யாமல், மனம்போன போக்கில் எதையா வது எழுதினீரானால், உமது தோல்வியை மறைப்பதற்காக இப்படிச் செய்கிறீர் என்று முடிவுகட்டப்படும். அத்தகைய உமது கடிதங்களுக்கு இனி பதில் எழுதப்படமாட்டாது.

ஸ்ரீவைஷ்ணவ தாஸ:

13—12—71. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்.

இதைக் கண்டபின் மதுராந்தகம் ஸ்வாமி எழுதிய கடிதத்தில் மறுபடியும் முதலில் இசைந்த நியமங்களுக்கு இசைவு கூறியிருந்தார். ஆயினும் தமது மத்யஸ்த வித்வான்களைக் குறிப்பிடவில்லை. நிந்தாபரிஹாரஸோக்தி களையிட்டே கடிதத்தை நிரப்பியிருந்தார். அதற்கு நாம், "முதலில் இசைந்தபடி தேவரீருடைய மத்யஸ்தர்களை இக்கடிதத்திலும் குறிக்காமல் நிந்தாபரிஹாரஸோக்திகளை யிட்டே நிரப்பியிருக்கிறீர். மறுதபாலில் தேவரீருடைய மத்யஸ்தர்களைக் குறித்தனுப்பப் பிரார்த்திக்கிறேன். அக் கடிதம் வந்தபின் அடியேன் மத்யஸ்தர்களைக் குறிக்கி றேன்." என்று 18—12—71ல் எழுதினோம். நேரிலும் திருநாங்கூர் ப்ர. ப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி மூலம் மத்யஸ்தர்களைக் குறித்தனுப்பும்படி கேட்டனுப்பினோம். குறித்தனுப்ப மாட்டேன் என்று கூறிவிட்டார் இதி லிருந்து, தாம் இசைந்த நியாயமான நியமங்களுக்குக் கட்டுப் பட்டு வாதஸதஸ் நடத்தினாலும் தமக்குப் படுதோல்வியே ஸித்திக்குமென்று இவரே உணர்ந்துவிட்டார் என்று விளங்கு கிறது. இத்தகையவரோடு வாதம் நடத்தினாலும் விதண்டா வாதம் செய்வாரேயொழிய நேர்மையாக வாதம் செய்யமாட் டார் என்பது இவரது கடிதங்களிலிருந்தே விளங்குகிறது.

நிஷ்கர்ஷ நிகஷ விஜயம்

['ஸுத3ர்ஶனம்' ஆசிரியர்]

வரவரமுநிவரமநக4ம் லோகாசார்யம் கு3ருத்தமம் நத்வா ।
நிஷ்கர்ஷநிகஷ விஜயம் கரோமி ஸுமனோ மனோ விநோதா3ய ॥

[(ஜ்ஞாநப4க்திவைராக்3யாநுஷ்டா2னங்களில்) குற்றமற்றவரான மணவாளமாமுனிகளையும், ஆசார்யஶ்ரேஷ்ட2ரான பிள்ளைலோகாசார்யரையும் வணங்கி, நன்னெஞ்சினரின் திருவுள்ளத்தை உகப்பிப்பதற்காக நிஷ்கர்ஷ நிகஷ விஜயம் என்னும் நூலை இயற்றுகிறேன்.]

அவதாரிகை

1. நமது ஸுத3ர்ஶனத்தில் ஸாதா4ரண ஐப்பசி மலரில் வெளிவந்த மாமுனிகள் கண்ட வேதா3ந்த ஸார நிஷ்கர்ஷத்தையும், அதன்மேல் மது4ராந்தகம் ஸ்வாமி எழுதிய ஸாரதம நிஷ்கர்ஷத்திற்கு பதிலாக வரதா3சார்யஸ்வாமி எழுதிய நிஷ்கர்ஷ நிகஷத்தையும், அதன் முன்னுரையாகவும், பின்னுரையாகவும் நாம் எழுதியவற்றையும் மீமாம்ஸார்ணவ வேத யாதி3பி3ருதா3லங்க்ருதரான ஸ்ரீ. உ. வே D. T. தாதாசார்ய ஸ்வாமி மறுக்க முற்பட்டு "யதா2ர்த்த2 ராமானுஜன்-2" என்னும் புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

2. ஸ்வாமிக்கு ஸுத3ர்ஶனத்தோடு இருபது வருடங்களுக்கு முன்பே தொடர்புண்டு. அப்போது பெரியவாச்சான்பிள்ளையின்மேல் பல தோ3ஷங்களை ஏற்றிட்டு இவர் எழுதிய 'ஸஜ்ஜநாராத4நம்' என்னும் நூலை மறுத்து, 'தூ3ஷண நிராஸம்' என்னும் நூலையும், பல கட்டுரைகளையும் ஸுத3ர்ஶனம் வெளியிட்டது. 'அப4யப்ரத3ராஜவிஜயம்' என்னும் தலைப்புடன் அவை தனி கிரந்தமாகவும் வெளியிடப்பட்டது. அதிலுள்ள நிரூபணங்கள் அசைக்க முடியாதவையாயிருந்தமையாலே, ப்ராமாணிகரான ஸ்வாமி இன்றளவும் அதற்கு மறுப்பு எழுதவில்லை. ஒரு முக்கியமான அம்ஶத்தை இசையவும் செய்தார். இப்போது

நிஷகாஷநிகஷம் முதலானவற்றில தமக்குத் தோனறிய பல அநுபபத்திகளை 'யதா₂ர்த்த₂ராமாநுஜன-2'ல் ஸாத்விக ரீதியில, கோபதாபங்களோ வசைமொழிகளோ இலலாமல வெளியிட்டுள்ளார். அதே ரீதியில் நாமும பூர்வாசாரயா களின அடிச்சுவட்டைப் பின்பறறி இவருககுத் தோன றும அநுபபததிகளுககு பதில உரைப்போம்.

3. தாதாசாரய ஸ்வாமி நம்மைக் காட்டிலும சிறந்த ஶாஸத்ரஜ்ஞர். வரத₃ாசாரய ஸ்வாமியைப் போன்ற பலருககு ஸாமாந்ய ஶாஸதரங்களைக கறபிததவர். அத தகையவரை எதிர்தது நாம நூல எழுதினுல அது சிறக்குமா என்று பலர் ஸநதே₃ஹபபடககூடும். நாம் ஸ்வதநதரமாக நூல் எழுதினுல அது சிறககாதுதான். நாமோ, பூாவா சார்யர்களின அடிச்சுவட்டைப பினபற்றி, அவர்களுடைய ஸ்ரீ ஸூகதிகளினமேல ஸ்வாமி ஏறிடும் தூ₃ஷணங்களைக களைகிறேமேயொழிய ஸ்வதந்தரமாக யாதொன்றும் எழுதவிலலை. இங்கு, உண்மையில் தாதாசார்ய ஸ்வாமிக்கு பரதிபக்ஷிகளாக நிறபவாகள், நமபிள்ளை, பெரியவாச்சான பிள்ளை, பிள்ளையுலகாசிரியர், அழகியமணவாளபபெருமாள் நாயனுர், மாமுனிகள் முதலான பூர்வாசாரயர்களேயொழிய அல்பஜ்ஞனான அடியேனனறு. முற்கூறிய பூாவாசாரயாக ளுடைய மேத₄ாவிலாஸததிற்கு ஒபபிடுமபோது, "மஹாாண வாந்த: கோ மஜ்ஜதோரணுகுலாசலயோா விஶேஷ.' [கடலிலே முழுகும் விஷயததில அணுவுககும குலபாவ தத்திறகும வாசி என்ன இருககிறது?] எனறு ஆளவநதாா ஸ்தோதரரதனத்தில அருளிச்செய்த ரீதியிலே, இககாலததி லுள்ள தலைசிறந்த வித₃வானகளும பூாவாசார்யர்களுடைய மேதை₄யிலே பலலாயிரத்தில ஒரு பங்குகூட அறிவு பெறறவர்களாகக காணப்படவிலலை. ப₃லமறறவனும முறைப்படி கடலிலே குளித்து முத்துககளையும் ரத்தினங களையும் எடுபபதையும, ப₃லிஷ்ட₂னும் முறைதவறிக கட லோடு எதிரிட்டு முழுகிபபோவதையும காண்கிறேம

அந்த ரீதியிலே அல்பஶக்திகனான அடியேன் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திஸாக₃ரத்திலே குளித்துச் சில முத்துக்களையும் ரத்தினங்களையும் வழங்க முயல்கின்றேன.

அவதாரிகை முற்றிற்று.

முதல் அத்தியாயம்

ப்ரத₄ாநத்₃ருஷ்டாந்த நிரூபணம்.

4 ஸித்₃தோ₄பாய விஷயத்தில் ஓர் ப்ரத₄ாநத்₃ருஷ்டாந்தம் உள்ளது. அதை நன்கு உணர்ந்தால் அதிக₃ஹநமான ஶாஸ்த்ரார்த்த₂ங்களை ஸாமாந்ய ஜனங்களும் புத்தியிற் கொள்வது எளிதாகுமாகையால், அதை முதலில் விரிவாக விளக்கிவிட்டு மேலே செல்வோம். நற்குணங்களெல்லாம் நிரம்பிய தந்தையொருவன் ஒரு குடும்பத் தலைவனாயிருக்கிறான். அவனுக்குப் பல பிள்ளைகள் உண்டு. அவர்களில் ஒருவன் மிகவும் துறுதுறுக்கைத்தனமும் சுயநல மனப்பான்மையும் உள்ளவன். இவனைப் பள்ளியில் தந்தை சேர்க்கப் போகும்போது அடம்பிடித்து அழுகிறான் பிள்ளை. பள்ளியில் சிறிது நேரமும் உட்கார மறுக்கிறான். பிள்ளையின் ஸ்வபா₄வத்தை அறிந்த தந்தை அக்குழந்தை மிட்டாய் தின்பதில் பெருவிருப்பம் கொண்டது என்று அறிந்தவனாகையாலே, 'நீ பள்ளி சென்றால் தினந்தோறும் உனக்கு ஒரு மிட்டாய் கொடுக்கிறேன்' என்று பேரம் பேசி இசையச் செய்து, அது இவனுடைய ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைப்பதாயினும், கல்வியூட்டுவதில் உள்ள நன்மையைக் கருதி, தினந்தோறும் மிட்டாய் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்பி வருகிறான். சிலகாலம் சென்றபிறகு மிட்டாயில் பையனுக்கு அலுப்புத்தட்டவே, அதை அவனே கைவிடுகிறான், பழக்கத்தாலே ஒழுங்காகப் பள்ளி செல்லத் தொடங்கிவிடுகிறான். அடுத்தபடி, பட்டுச் சட்டையிலே அப்பையனுக்குப் பெருவிருப்பம் ஏற்படுகிறது. 'வகுப்பில் நீ முதல் மார்க் வாங்கினையென்றால் உனக்குப் பட்டுச்சட்டை

தைத்துப்போடுகிறேன்' என்று பேரம் பேசுகிறான் தந்தை. பையனும் குறிக்கொண்டு படித்துப் பட்டுச்சட்டையைப் பரிசாகப் பெறுகிறான். மேன்மேலே இதே ரீதியில் பேரம் பேசும் தந்தையிடமிருந்து ஒவ்வொன்றைப் பரிசாகப் பெற நன்றாகப் படித்து ஒவ்வொரு வருடமும் வகுப்பில் முதல் மாணவனாகவே நின்று கலாசாலையில் புகுகிறான். படிப்பு பெரிதானாற்போலே ஆசையும் பெரிதாகின்றது. மோட்டார் ஸைகிள் வேண்டுமென்று ஆசைப்படுகிறான் பையன். மாகாணத்திலேயே முதல்வனாக வந்தாயென்றால் மோட்டார் ஸைகிள் வாங்கித் தருகிறேன் என்கிறான் தந்தை. மிக முயன்று படித்து மாகாணத்திலேயே முதல்வனாகி மோட்டார் ஸைக்கிளையும் தந்தையிடம் பரிசாகப் பெறுகிறான். இப்படி முயன்று படித்துத் தந்தையிடம் பரிசுபெற முடியாத தன் ஸஹோத$_3$ரர்களிடம் இப்பரிசுகளைத் தன் முயற்சியாலே பெற்றுவிட்டதாகப் பெருமை பேசிக்கொள்ளவும் செய்கிறான். கடைசியாக பி. எச். டி. என்னும் மிகவுயர்ந்த படிப்பைப் படிக்கிறான். 'அதில் நீ தேறிவிட்டால் உனக்கு என் ஸர்வஸ்வத்தையும் தருகிறேன்' என்று பேரம் பேசுகிறான் தந்தை. அதிலும் தேறுகிறான் தனயன். இவ்வளவு படித்தமையாலே அறிவு பெருமலர்ச்சி பெறுகின்றது. மிட்டாயிலிருந்து தொடங்கி, சொத்துக்கள் வரையிலும் உள்ள பொருள்களைப் பரிசாகக் காட்டிக் காட்டித் தன்னைப் படிப் படியாக முன்னேற்றவைத்திருக்கிறார் தந்தை என்று உணர்கின்றான். இப்பரிசுகளுக்குத் தன் படிப்பை ஸாத$_4$னமாக்கத் தான் எண்ணியது மயக்கமே என்றும், உண்மையில் தன்னை இந்த அளவு படிக்கவைப்பதற்காகத் தந்தை தான் விரும்பும் இப்பரிசுகளைக் காட்டித் தன்னை முன்னேற்றியிருக்கிறார் என்றும், பரிசுகளைப் பெற்றுத் தான் அனுப$_4$விப்பது தன் தந்தைக்கு உத$_3$தே$_3$ச்யமன்று. தான் படித்துத் தேறி பு$_3$த்$_3$தி$_4$விகாஸமடைவதே தந்தைக்கு உத$_3$தே$_3$ச்யம் என்றும், தான் இப்போது பெற்றிருக்கும் கல்விக்கு ஒப்பிடும்போது இப்பரிசுகளெல்லாம் மிக அற்ப

மானவை இவற்றைத் தந்தையோடு ப்ரேமபேசித் தான் பெற்றது மிகவும் தகாதசெயல் என்றும் உணர்ந்து அநு தபிக்கிறான். தந்தையின் பரமகருணையையும் சாதுர்யத்தை யும் நினைந்து நினைந்து உருகுகிறான் அவன் திருவடிகளிலே வீழ்ந்து. "எந்தையே! என் மயக்கத்தாலே ப்ரேமபேசி தேவரீரிடம் பல பரிசுகளைப் பெற்றுவிட்டேன். இப்போது மயக்கம் நீங்கப்பெற்றேன். நான் பி. எச் டி. தேறிய தற்குப் பரிசாக தேவரீருடைய ஸர்வஸ்வம் எனக்குத் தேவையில்லை. உடைமையான அடியேனுக்கு உடையவ ரான தேவரீருடைய உகப்பிற்காகவே செய்யும் நித்ய கைங்கர்யமே வேண்டியது. இதுவே அடியேனுக்கு ஸ்வ ரூபப்ராப்தமானது. இந்தப் பெறுவிப்பதற்காகவே பரம க்ருபையாலே அடியேனைப் படிப்படியாக தேவரீர் முன் னேற்றியுள்ளது என்பதை உணர்ந்துகொண்டேன். இப் போது இப்பயனையும் அந்தக் கிருபையினாலேயே அருள வேண்டியது' என்று ப்ரார்த்திக்கிறான். 'தன் பிள்ளை இப்படி ஆகவேணும், அவன் வாயிலிருந்து வரும் இவ் வார்த்தையைக் கேட்கவேணும்' என்று நீண்ட நாளாகப் பாரித்துப் பெருமுயற்சிசெய்துவந்த தந்தை மிகமகிழ்ந்து அவனுக்குத் தன்னையே அளிக்கிறான்.

5. மேலே காட்டிய த்ருஷ்டாந்தத்தில் பித்ருவிஷயத் தில் செய்யும் பரார்த்த கைங்கர்யமே பிள்ளைக்குப் பரம ப்ராப்யமாகும். நிர்ஹேதுகமாக இதைப் பிள்ளைக்கு அளிக் கத் தந்தை என்றும் ஸித்தனாயிருக்கிறான். சிறு வயதிலோ, அறிவு நிரம்பாத காலத்திலோ இதைச் சொன்னால், நன்மை தீமைகள் ஒன்றும் அறியாத பையனுக்கு இது ஏறாது, மிட்டாய், மோட்டார் ஸைக்கிள் முதலானவற்றில் ருசி யுடைய அவனுக்கு இது ருசிக்கவும் செய்யாது. ஆகை யால் சதுரனான தந்தை அவனுக்கு அவை ஹிதத்தைச் செய்யமாட்டா என்று தான் அறிந்தபோதிலும்—மிட்டாய், மோட்டார் ஸைக்கிள் முதலியவற்றைப் பரிசாகக் காட்டிக்

கொடுத்து அவனை மேனமேலே படிக்கவைதது. பு$_3$த$_3$தி$_4$ விகாஸத்தை ஏறபடுததி உணமை நிலையை உணரவைக கிறுன. பித்ருவிஷய பரார்தத$_2$கைஙகாயம் தனயனுககு பராப்யம. இதை நிரஹேதுகமாக அவனுககுக கொடுககத தநதை எனறும துடிததுககொண்டிருககிறுன. "தநதை நிருபாதி$_4$கரக்ஷகன், நாம ரக்ஷ்யம, அவன ஶேஷி நாம ஶேஷபொருள். தநதைககேயான கைஙகாயம செயவதே நமககுப பரமபராபயம" எனறு உணராமையாலே, மிட்டாய், மோட்டார் ஸைககிள் முதலானவறறை பராப்ய மாக நினைத்து, தநதையைவிட்டு விலக முயலகினறுன தனயன அந்த ருசிகளையே பற்றுசாகக்கொணடு அரும் பாடுபட்டுச் சிறிது சிறிதாக இவனுககு பு$_3$த$_3$தி$_4$விகாஸததை விளைத்து, இவனுககும தனககும் உள்ள ஶேஷஶேஷி ப$_4$ாவ ரக்ஷ்ய ரக்ஷகப$_4$ாவங்களை உணரவைதது தனனை விட்டு விலகாமல் செயது தனனையே அளிககிறுன தந்தை. இங்கு பிதருவிஷய பரார்த்த$_2$ கைங்கர்யம தனயனுககு பராபயமாகிறது. அதை நிரஹேதுகமாக அளிப்பவன தந்தையேயாகிறுன். நீண்ட காலமாகப் பிளளை அதைப் பெறுமைககுக் காரணம, ஸவஸ்வரூபஜ்ஞானம ஏற்படாமை யும், அதடியாகத தனககுத தான நனமை தேடுவதாக நினைத்து அப்ராப்தமானவறறை விருமபித தநதை செய் யும் ரக்ஷணததை விலககி, தந்தையைவிட்டு விலகிச சென்றமையுமேயாகும சதுரனை தநதை இவன் வழி யிலேயே சென்று இவனுககு பு$_3$த$_3$தி$_4$விகாஸததை விளைதது, ஸ்வஸவரூபஜ்ஞானத்தையும் விலககாமையையும் ஏற படுததி, இவனுக்கு நிர்ஹேதுகமாகத் தன்னையே அளிக கிறுன. இவ்விடததில பிதருவிஷய பரார்தத$_2$ கைங்காயம ப்ராப்யம. அதைத தனயனுக்கு ருசிககச செய்யும பு$_3$த$_3$தி$_4$ விகாஸமும் அதனுல ஏற்படும ஸ்வஸ்வரூபஜ்ஞாநமும் அதி$_4$ காரி விஶேஷணம. இது தனயன ஸவரூபததில சேரநத தாகையாலும தான ஏறபடுததிக கொண்டதலலவாகை யாலும உபாயமாகாது. இவன விருமபும் பரிசுகளைக்

காட்டிக் காட்டி, இவனைக் கடுமையாகப் படிக்கவைத்து விலக்ஷ்யனற இவனை மீட்டு ப்ரக்ருதிவிகாஸத்தையும், ஸ்வஸ்வரூப ஜ்ஞானத்தையும் ஏற்படுத்தி இவனுக்குத் தன்னையே அளிக்கும் தந்தையே உபாயமாவான்.

6. இனி த்ருஷ்டாந்தத்துக்கு வருவோம். ஸகல கல்யாணகுணங்களுக்கும் இருப்பிடமாயிருப்பவன் ஜகத்குடும்பியான ஸர்வேஶ்வரன். இவனுக்கு எண்ணிலடங்காத பிள்ளைகள் உண்டு. அவர்களில் பலர் ஸ்வார்த்தமையாகிற சுயநலமனப்பான்மையும், அதற்கேற்ப ஸ்வபரவ்ருத்தியும் உடையவர்கள் இவர்களில் ஒரு சேதனனை எடுத்துக் கொள்வோம். பரமநாஸ்திகனுன அவன் அண்டை வீட்டுக்காரன் வாழ்வைப் பொருதவன். அண்டை வீட்டுக்காரனைத் தொலைப்பதே அவனுக்குப் பரமபுருஷார்த்தம். நேரில் சென்று அண்டை வீட்டுக்காரனைக் கொல்லுவதற்கு ஶக்தியற்றவன், ஶக்தியுள்ளவர்களைத் துணைகொண்டு கொன்றாலும் ராஜதண்டனை ஏற்படும். இதற்காக இவனைத் தான் கொன்றது தெரியாமல் அழிக்க ஏதாவது வழியிருக்கிறதா என்று ஆராய்கிறான். வேதம் படித்தவர் ஒருவர் 'வேதத்தில் ஶ்யேநயாகம் என்று ஓர் யாகம் கூறப்பட்டிருக்கிறது; அதை முறைப்படி செய்தாயானால் அம்புபட்ட கழுகுபோலே அடுத்தவீட்டுக்காரன் அழிந்தொழிவான்'' என்று உபதேஶிக்கிறார். இதுவரையில் ஶாஸ்த்ரவிஶ்வாஸமில்லாதவனுயிருந்தபோதிலும், 'இதைச் செய்துதான் பார்ப்போமே' என்று செய்கின்றான். அடுத்தவீட்டுக்காரன் அழிந்தொழிகிறான். இவனுக்கும் ஶாஸ்த்ரத்தில் நம்பிக்கை பிறக்கிறது. ஶாஸ்த்ரமாகிற பள்ளிக்கூடத்தில் படிக்கமாட்டேன் என்று அடம்பிடித்துவந்த இவனுக்கு, அடுத்தவீட்டுக்காரனின் அழிவாகிற மிட்டாயைக் காட்டி, ஶ்யேநயாகமாகிற முதல் வகுப்பிலே படிக்கவைத்துவிட்டான ஸர்வேஶ்வரனுகிற தந்தை. ஸ்ருஷ்டி காலத்திலேயே ஶாஸ்த்ரங்களை அளித்தவன் ஸர்வேஶ்வரனேயாகையால்,

ஶ்ருதிஸ்ம்ருதி விதி$_4$களையெல்லாம் அவனுடைய நியமனங்களாகவே கொள்ளவேண்டும். 'ஶ்ருதி ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா' என்று அவனே கூறினானன்றோ? மிட்டாயைத் தின்ற குழந்தை அதனால் ஆரோக$_3$யம் நலிவுற்று, தந்தை கொடுக்கும் கசப்பு மருந்தைச் சாப்பிட்டு ஆரோக$_3$யத்தை மீட்டுக்கொண்டு மிட்டாயில் ஆசைநீங்கப்பெறுவதுபோலே, இவனும் ஶ்யேநயாக$_3$த்தாலே அடுத்தவீட்டுக்காரனை அழித்ததினால் நரகம் ஏற்படும் என அறிந்து, அது ஏற்படாமைக்கு ஶாஸ்த்ரங்களில் விதி$_4$க்கப்பட்ட ப்ராயஶ்சித்தங்களை அனுஷ்டி$_2$த்துவிட்டு, இத்தகைய க்ரூரகார்யங்களிலும், அவற்றுக்கு ஸாத$_4$நமாக ஶாஸ்த்ரம் விதி$_4$க்கும் ஶ்யேந யாக$_3$ம் முதலானவற்றிலும் ஆசையை விட்டொழிக்கிறான். ஆனால், ஶாஸ்த்ரவிஶ்வாஸமாகிற பள்ளிப்படிப்பு முன்னேறுகிறது. மழையில்லாமல் தன் வயலிலுள்ள பயிர் வாடுவதைப் பார்த்து வேத$_3$த்தில் மழைக்கு ஸாத$_4$நமாகச் சொல்லப்பட்டுள்ள காரீரியாக$_3$த்தைச் செய்து மழையைப் பெறுகிறான். ஶாஸ்த்ரவிஶ்வாஸம் மேலும் உறுதியாகிறது. இப்படி இம்மைப் பலன்களைக் கண்கூடாகப் பெற்றமையாலே அவற்றிலும் சிறப்புற்ற ஸ்வர்க$_3$த்தை மறுமையில் பெற ஆசை உண்டாகிறது. அதற்காக வேத$_3$த்தில் விதி$_4$க்கப்பெற்ற ஜ்யோதிஷ்டோம யாக$_3$த்தைச் செய்து ஸ்வர்க$_3$த்தைப் பெறுகிறான். அதுவும் அஸ்தி$_2$ரமாகையாலே, மறுபடியும் ஒரு காலத்தில் இக்காமபூ$_4$மியில் பிறக்கிறான். பூர்வஜந்ம ஸம்ஸ்காரவஶத்தாலே ஶாஸ்த்ரவிஶ்வாஸம் இவனுக்கு உறுதியாயிருக்கிறது. ஒருமுறை ஸ்வர்க$_3$த்தை அநுப$_4$வித்தவனாகையாலே அதினுடைய அல்பாஸ்தி$_2$ரத்வங்களையிட்டு அதிலும் சலிப்பு ஏற்பட்டிருக்கிறது. அநந்தஸ்தி$_2$ரப$_2$லம் ஶாஸ்த்ரங்களில் உள்ளதா என்று பார்க்கிறான். அப்போது தன் ஆத்மாவை அநுப$_4$விப்பதாகிற கைவல்யமோக்ஷத்தையும், அதற்கு ஸாத$_4$னமாக விதி$_4$க்கப்பட்டிருக்கும் கர்மஜ்ஞாநயோக$_3$ங்களையும், பரமபுருஷனையடைவதாகிற பரமமோக்ஷத்தையும், அதற்கு

ஸாத$_4$னமாக விதி$_4$க்கப்பட்டிருக்கும் ப$_4$க்திப்ரபத்திகளையும் காண்கிறான். பூர்வபுண்ய ஸம்ஸ்காரவஶத்தால ஸ்வார்தத$_3$தையில (சுயநல மனப்பான்மையில) உள்ள ஏற்றத்தாழ்வு காரணமாக கைவல்ய ப$_4$க$_3$வத் ப்ராப்திகளில் ஒவ்வொரு சேதனனுக்கு ஒவ்வொன்றில் ருசி ஏற்பட்டிருக்கிறது. ஸ்வார்தத$_2$தை அதி$_4$கமாக உள்ள சேதனன் கைவல்ய மோக்ஷத்தில் தன் ஆத்மாவை நித்யமாக அநுப$_4$வித்துக் கொண்டிருப்பதே போதும் என்று நினைக்கிறான். கல்லூரிப் படிப்பு சிறந்தது என்று அறிந்தும், தந்தை அதையும் படிக்க வைக்க ஸித்$_3$த$_4$னாயிருந்தும் உயர்நிலைப்பள்ளிப் படிப்பே போதும் என்று கருதி அத்துடன் நிறுத்திவிடும் சில பையன்களைப்போலே, ப$_4$க$_3$வத் ப்ராப்தி இதைவிடச் சிறந்ததென்று அறிந்தும், ருசியின்மையாலே ஸ்வாத்மாநுப$_4$வமாகிற கைவல்யமோக்ஷத்திலேயே திருப்தி பெற்று, அதற்கு ஸாத$_4$னமாக கர்மஜ்ஞானயோக$_3$ங்களை அநுஷ்டிக்கின்றனர் சிலர். பையன்களுக்கு அவரவர்கள் ருச்யநுகு$_3$ணமாகப் படிப்பை அளிக்கும் தந்தையைப்போலே ஸர்வேஶ்வரனும், இவர்களுடைய ருச்யநுகு$_3$ணமாக — ஸர்வகர்மங்களையும் கழித்து ஸூக்ஷ்மஶரீரத்தையும் கழித்து, பரமபத$_3$த்தில் ஒரு மூலையில் ஶரீரமற்றவராய்த் தம் ஆத்மாவையே எப்போதும் அநுப$_4$வித்துக்கொண்டிருக்கும் கைவல்ய மோக்ஷத்தை இவர்களுக்கு அளித்துவிடுகிறான். இந்த ருசி நித்யமாயிருக்கையாலே இவர்களுக்கு இந்த மோக்ஷமும் நித்யமாயிருக்கிறது. முற்கூறியவர்களிலும் அதி$_4$கமான புண்யஶாலிகள் சிலர்க்கு அவர்களைக் காட்டிலும் ஸ்வார்த்த$_2$தை குறைவாயிருக்கிறது. அதனால் இவர்களுக்குப் பரமபத$_3$த்தில் சென்று தங்கள் இன்பத்திற்காக எம்பெருமானை அனுப$_4$விப்பதில் ருசி அதி$_4$கமாயிருக்கிறது. கல்லூரியில் பி. ஏ., பி. எஸ்ஸி. போன்ற படிப்புகளோடு படிப்பை நிறுத்துவதில் ருசியுள்ள பையன்களைப் போன்றவர்கள் இவர்கள். இவர்களுக்கும் ப$_4$க்தியோக$_3$த்தை

ஸாத₄னமாக விதி₄த்து, இவர்களுடைய ருசிககு அநுகு₃ண மாக ஸவார்த்த₂மான ப₃ரஹமாநுப₄வத்தை அளிககிருன. முற்கூறியவாகளிலும் அதி₄கமான புணயமாலிகள் சிலாககு, அவர்களைககாட்டிலும ஸவார்த்த₂தை குறைவாயிருககிறது. அதனுல இவர்களுககுப் பரமபத₃த்தில சென்று தங்கள் இனபத்திறகாக எமபெருமானை அநுப₄விபபதோடு கைங கர்யமும விஶேஷமாகச் செய்யவேணடும எனபதில் ஆசை அதி₄கமாயிருக்கிறது. கலலூரியில எம்.ஏ., எம்.எஸ்ஸி. போனற படிப்புகளோடு படிபபை நிறுததுவதில ருசியுள்ள பையன்களைப் போன்றவர்கள இவாகள். இவர்களுக்கும் ஸ்வக₃தஸ்வீகாரமாகிற ஶரணாக₃தியை உபாயமாக விதி₄தது இவர்களுடைய ருச்யநுகு₃ணமான ஸவார்த்த₂ாநுப₄வ கைங கர்யங்களை அளிககிருன, 'யமேவைஷ வ்ருணுதே 'பரஜா பதிஸ தவம் வேத₃ [எம்பெருமான தானே எவனை வரிக கிருனோ,அவனே அவ்வெமபெருமானைபபெறும ப₄ாக₃யசாலி] 'அமலங்களாக விழிககும்' 'உனறன்னைபபிறவி பெறுந்தனைப புண்ணியம் யாமுடையோம்' 'மயர்வற மதிநலம அருளினன்' எனகிறபடியே அவனுடைய விஶேஷகடாக்ஷம் பெற்றமை யாலோ, பரமஸாத்விகர்களின் உபதே₃ஶததாலோ ஶாஸதர பாயாலோசனையினுலோ, உபாயபு₃த்₃தி₄யோடுளள ஸ்வப்ர வ்ருததி ஸாமாந்யமும் நீங்கபபெறறு, அதனுலேயே முற கூறிய அனைவரிலும் சிறபபுற்ற சில அதி₄காரிகளுககு ஸ்வார்த்த₂தை அடியோடு கழிகையாலே, பரமபத₃ததில பரார்தத₂கைங்கர்யம செய்வதில ருசியுண்டாகிறது. தநதை யின் நியமனததையும், ஸுஹ்ருததுககளின உபதே₃ஶததை யும் அநுஸரித்து பி.எச்டி. படிப்பையும் படித்துத தேறும பையனகளைபபோன றவாகள் இவர்கள். இவர்களுடைய அறிவு பரிபூர்ணமலர்ச்சி பெறறிருககிறது. அவனைபபெறுவ தற்கு அவனைபொழிய வேறு உபாயமிலலை, அப்படியுளள தாக நினைததெதலலாம மயககம என்று உணரபபெறுகிருா கள் இவர்கள். முநதியவர்களெலலாம இவ்வுணர்வைப் பெருமையால, ஒவ்வோரளவுக்கு ஸவார்த்த₂தையும் ஸ்வப்ர

வ்ருத்தியும் நீங்கப்பெறாதவர்களாய், அதனால் ஏற்பட்ட ருசி பேதத்தாலே குறைவுபட்ட புருஷார்த்தங்களையே ஸ்வபர வ்ருத்தி ஸாத்யமான ஸாதனங்களுக்குப் பலனாகப் பெற்றுப் போகிறார்கள். இவர்கள் இவ்வுணர்வைப் பெற்றமையால் தம் ஆனந்தத்துக்காக எம்பெருமான் மோக்ஷத்தைக் கொடுக்க வந்தாலும், "எம்மா வீட்டுத் திறமும் செப்பம்" என்று நிஷேதித்து, "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே" "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று அவனுக்கும் உபதேசிக்கும் பெருமை பெறுகிறார்கள். நிரதிசயபுருஷார்த்தமான பரார்த்தகைங்கர்யத்தை நிர்ஹேதுகமாக அவன் கொடுக்கப் பெற்று வாழ்ச்சி பெறுகிறார்கள். ஆக, சுருங்கக்கூறின், ஸ்வார்த்தத்தை அடியோடு கழியப்பெறாமல், தமக்கு ஹிதம் என்னும் மயக்கத்தினால் ஸ்வப்ரவ்ருத்தியில் ஈடுபட்டவர்களுக்கு, அவரவர்களுடைய ஸ்வார்த்தத்தையின் கனத்துக்குத் தக்கவாறு ருசிபேதம் ஏற்பட்டுக் குறைவுபட்ட புருஷார்த்தங்களையே அவர்கள் விரும்புகையாலே, ஒவ்வொரு ஸாதனத்திற்குப் பலனாக ஸர்வேஶ்வரன் அவற்றை அளிக்கிறான்; ஸ்வார்த்தத்தை அடியோடு கழியப்பெற்று மோக்ஷார்த்தமாக ஸ்வபரவ்ருத்திலேசத்தையும் ஸஹியாதவர்களுக்கே மோக்ஷத்தில் பரார்த்தகைங்கர்யரூப பரமபுருஷார்த்தம் ருசிக்குமாகையால், அதை அவர்களுக்கு பகவான் நிர்ஹேதுகமாக அருளுகிறான். இவர்களே ஸித்தோபாய நிஷ்டர்கள் என்றும், பரகதஸ்வீகாரநிஷ்டர்கள் என்றும் கூறப்படும் மிகச்சிறந்த ப்ரபன்னர்கள்.

7. தனயனைத் திருத்த முயலும் தந்தைக்குப்போலே சேதனரை அநாதிகாலமாகத் திருத்தமுயலும் ஸர்வேஶ்வரனுக்கும், ஒவ்வொருவர் விஷயத்தில் ஒவ்வொரு விதமான அநுபவம் ஏற்படுகிறது. ஸ்வார்த்தத்தையின் வலிமையால் மோட்டார் ஸைகிளைப்பெற்று, அதைக்கொண்டு ஊர்சுற்றுவதில் விருப்பமுண்டாகித் தந்தையைவிட்டு விலகிய

சென்றுவிடும் சில பிள்ளைகளைப்போலே, சில சேதனா ஸ்வர்கக$_3$ாதி$_3$ புருஷார்த்த$_2$ங்களில் ஒன்றைப்பெற்று விலகியே சென்றுவிடுகிறார்கள். புத்$_3$தி$_4$க் குறைவாலே. தந்தை எதை ஆசைகாட்டினாலும் படிக்க இயலாத சில பிள்ளைகளைப் போலே சில சேதனர் இப்படிப் படிப்படியாக முன்னேற்றம் போவதும் உண்டு. தனயனைத் திருத்தமுடியாத தந்தை கண்ணீரோடே கைவாங்கிப் பிறிதொரு காலத்தில் திருத்தும் முயற்சியைத் தொடர்வதுபோலே. இவர்கள் விஷயத்தில் எம்பெருமானும் கண்ணீரோடே கைவாங்கி. ஜன்மாந்தரத்தில் அம்முயற்சியைத் தொடர்கிறான். ஸம்ஸாரம் நீங்கும் வரையில் ஒவ்வொரு சேதனர் விஷயத்திலும் இம்முயற்சியைக் கைவிடுவதில்லை. ஸுக்ருததாரதம்யத்தாலே ஏற்பட்ட ருசியாலே. ஸம்ஸாரம் நீங்கிக் கைவல்யத்தையோ ஸ்வப்ராப்தியையோ பெற்றபின்பு. அவை மோக்ஷமாகையால் முயற்சி செய்வதில்லை. பு$_3$த$_3$தி$_4$ஶக்திக் குறைவால் படிப்பைக்கண்டு பயந்தோடும் முற்கூறிய பிள்ளைகளில் சிலர் லோகாநுப$_4$வத்தாலும். ஸுஹ்ருத்துக்களின் உபதே$_3$ஶத்தாலும் ஸ்வரூபம் உணரப்பெற்று. "எந்தையே! எவ்வளவு முயன்றாலும் எனக்குப் படிப்பு ஏறமாட்டேன் என்கிறது. நான் படித்து எந்த அறிவைப் பெறவேண்டுமென்று தேவரீர் விரும்புகிறதோ. அதை இப்போதே பெற்றுவிட்டேன். என்னைப் பூர்ணமாக ரக்ஷிப்பதற்காகவே சிறுவயஸ்ஸிலிருந்தே படிக்கவைப்பது முதலான காரியங்களைச் செய்து தேவரீர் பாடுபட்டு வருகிறதென்று எனக்குத் தெரிகின்றது. இனி அடியேன் நாய்போலே தேவரீர் திருவடிகளிலேயே விழுந்து கிடக்கிறேன், தேவரீர் என்ன சொன்னாலும் கேட்கிறேன். உம் உகப்புக்கான கைங்கர்யத்தைத் தவிர வேறு எப்பரிசும் எனக்கு வேண்டாம். அதை ஸாதி$_4$க்கும் படிப்பும் வேண்டாம். என்னை ரக்ஷிக்கவேண்டியது தே$_3$வரீருடைய ப$_4$ரம்" என்று கூறித் தந்தையையே எல்லாமாகப்பற்றுவது போலே, ஸாத$_4$நாந்தரங்களில் அஜ்ஞாநாஶக்திகளாலே வித$_3$

தே4ாபாயநிஷ்ட2ராகும் சேதனரும உணடு. பி.எச்டி. தேறி பு3த்3தி4விகாஸமபெறறு ஸ்வரூபததை உணர்ந்து, பரிசுபெறு வதறகாகப் படிதது வநதது தகாது எனறு அறிந்து தநதை யைபபறறும பிளளைகளைப்போலே ஜ்ஞாநச்சிறபபாலே உபாயாநதரங்கள் ஸவரூபவிருத்3த4ஙகள் எனறு உணர்ந்து ஸித்3தே4ாபாயநிஷ்ட2ராகும சேதனரும உண்டு.

8. மிட்டாயோ, மோட்டார் ஸைககிளோ பராடய மாகமாட்டா; பள்ளிசெலவதும முதல வனுகத் தேறுவதும அவறறுககு நேரான ஸாத4னமாகமாட்டா. கடுமையான படிபபை மேற்கொள்வதனமூலம பு3த்3தி4விகாஸததைக காலகரமததில இவன அடைநது ஸ்வரூபம் உணரவேணடும எனபதறகாக அவறறுககு ஸாத்4யஸாத4னத்வம தநதை யால ஏற்படுத்தபபட்டது. இவறறை ஸாத்4யஸாதந4ஙக ளாகக கற்பித்து இவனைத திருததிய தநதையே நேரான உபேயமும, உபாயமுமாவான. அதுபோலவே, யோகயாக3ம முதலாக, ஸ்வக3தஸவீகாரமீருக உளள ஸாத4னங்கள — கடுமையான நியமங்களை உள்ளடககியவையாகையாலே, ஜ்ஞானவைராக்3யஙகளை உண்டாககிப் படிப்படியாக இவனைத் திருததி, ஸவரூபததை உணரவைக்கும எனனும் எண்ணததுடன அந்தந்த ப2லங்களுககு ஸாத4னமாக எம் பெருமானால ஏறபடுத்தப்பட்டவையேயாகும். இவறறை ஸாத்4யஸாத4னஙகளாகக் கற்பித்து இவனைத் திருததிய ஸர்வேஸ்வரனே நேரான உபேயமும் உபாயமுமாவான. ஸ்வாரத்த2தைத காரணமாக இவ்வுண்மையை உணராமல அபராபத விஷயஙகளை ப்ராப்யஙகளாகவும, ப4கதி ப்ரபததி முதலானவறறை அவறறுககு நேரான ஸாத4னஙகளாகவும மயஙகி, ப்ரவ்ருத்தி செய்பவர்களுககுக குறைவுறற ப2லங் களே கிடைக்கினறன. ஸ்வரூபஜ்ஞாநததாலே ஸவாரத் த2தைத கழிகையாலே, பரார்த்த2 கைஙகர்யமே பராப்யம என்றும், ஸ்வஸ்வரூபஜ்ஞானம ஏறபடுவதற்கு இவ்வளவு பாடுபட்ட எம்பெருமானே உபாயம எனறும உணர்நத அதி4

காரிககு உபாயபு$_3$த்$_3$தி$_4$யோடுகூடிய ஸ்வப்ரவ்ருததி ஸாமாந்யமும நீங்குகையாலே நிரதிஶயபுருஷார்தத$_2$ம் கிடைககிறது. இவ்வண்ணமாக "ப$_4$க$_3$வத் பரவ்ருததி விரோதி$_4$ ஸவபரவ்ருததி நிவருததியே பரபததியாகும்" எனற பூர்வாசார்ய ஸ்ரீஸூகதிககு இந்த த்$_3$ருஷடாநதத்தை விவரணமாகக கொள்ளலாம்.

பரத$_4$ாந த்$_3$ருஷடாநத நிரூபணபரமான முதல் அததியாயம நிறைவுபெறறது.

இரணடாம் அததியாயம்

உண்மையுரைத்தல்

9. ஸவக$_3$தஸ்வீகாரநிஷடை$_2$ எனறும, பரக$_3$தஸ்வீகாரநிஷடை$_2$ எனறும பரபததி இருவகைப்பட்டதெனறும, முந்தியதறகு ஸவார்தத$_2$ கைஙகர்யம ப$_2$லமென்றும, பிந்தியதறகுப் பரார்தத$_2$ கைங்கர்யம ப$_2$லமெனறும, ஸாத$_4$நாநதரமான ப$_4$க்திக்கு ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வபரத்வம் ப$_2$லம என்றும இவ்வாதத$_2$ஙகள் ஸ்ரீப$_4$ாஷயகாரர் தொடககமாகப் பெரிய வாச்சானபிள்ளையீறாகவுள்ள பூர்வாசார்யர்களுடைய க$_3$ரந்த$_2$ஙகளிலும்,பிள்ளைலோகாசாரயருடைய இதரக$_3$ரந்த$_2$ங்களிலும் காணப்படவில்லையே; பிள்ளைலோகாசார்யர் அருளிய ஸ்ரீவசநபூ$_4$ஷணத்திலும, அதை நிலைநிறுத்தவந்த ஆசாரயஹ்ருத$_3$யததிலும் தானே இவை முதன்முதலாக வெளியிடப்பட்டிருககின்றன. இது ஏன? என்னும் ஐயம பலர்ககு எழக்கூடும. இதற்கு உணமையான காரணததை முதலில விளககுவோம்.

10. முன அத்தியாயததில் கூறிய த்$_3$ருஷடாந்தத்திறகுச் செலவோம. அங்கு, பேரம பேசித் தனயனைத் தந்தை படிப்படியாக முனனேறறி வருமபோது, இதன் ஸூக்ஷ்மம் அறியாத ஒருவர் பிள்ளையிடம வந்து, "உன் தந்தைக்கு நீ விரும்பும பரிசுகளைக் கொடுபபதில நோக்கிலலை. உனனைப் படிக்க வைப்பதற்கு இப்படி பேரம்

பேசிக் கார்யம் செய்கிறா” என்று உண்மையைக் கூறி விடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்போது என்ன ஆகும்? பரிசு பெறுவதற்காக அதிதீவிரமாகப் படித்து வந்த பையனுக்குப் படிப்பில ஶ்ரத்₃தை₄ குறையும். அது காரணமாக பு₃த்₃தி₄விகாஸம் ஏற்படாமல தந்தையின இஷ்டம் ஸித்₃தி₄க்காமல போய்விடும். இதே ரீதியில பர வ்ருத்திபரர்களுக்கு அஶ்ரத்₃தை₄ ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே, ஶாஸ்த்ரங்களிலும், பெரியவாச்சான பிள்ளையிருக்கவுள்ள பூர்வாசார்யர்களுடைய க்₃ரந்த₂ங்களிலும் இவை ஸ்பஷ்டமாகக் கூறப்படவில்லை. “யமே வைஷ வ்ருணுதே” “ப்ரஜாபதிஸ் தவம வேத₃” “அம்ருதஸ்யைஷ ஸேது:” முதலானவிடங்களிலும், ரஹஸ்ய த்ரயத்திலும ஶாஸ்த்ரம் இவற்றின ஸூசன மாத்ரத்தைச் செய்தது பூர்வாசார்யாகள் இவவர்த்த₂ங்களை க்₃ரந்த₂ ஸ்த₂மாக்காமல, தக்க அதி₄காரிகளைத தேர்ந்தெடுத்து, ரஹஸ்யத்ரயார்த்த₂ உபதே₃ஶத்தினபோது வெளிப்படுத்தி வந்தார்கள். காலக்ரமத்திலே இவ்வரும்பெரும அர்த்த₂ங்கள் க்₃ரந்த₂ஸ்த₂மாக்கப்படாமலேயிருந்தால லோபமடைந்து விடுமோ என்னும அதிஶங்கையாலே, பிள்ளைலோகாசார்யர் ஶ்ரீ வசநபூ₄ஷணத்திலே இவற்றைப பரமகருணையாலே வெளிப்படுத்தினர். ஶ்ரீ வசநபூ₄ஷணத்தை நிலைநிறுத்த வென்றே அருளிச்செய்யப்பட்ட ஆசார்யஹ்ருத₃யத்தில அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும் இவற்றை விரிவு படுத்தினா என்பதே உண்மை.

11. இவ்வர்த்த₂த்தை மாமுனிகளே ஶ்ரீ வசநபூ₄ஷண வ்யாக்₂யான அவதாரிகையில பினவருமாறு தெளிவு படுத்தியிருக்கிறார்.— “அப்படியே ஸம்ஸாரிசேதனர் இழவு ஸஹிக்கமாட்டாத பரமகருபையாலே, தது₃ஜ்ஜீவநார்த்த₂ மாகத் தாமும் பல ப்ரப₃ந்த₄ங்கள் அருளிசசெய்த பிளளை லோகாசார்யர், ஆசார்யபரம்பராபராப்தமான அர்த்த₂ங் களில அவர்கள்தாங்கள் கௌ₃ரவாதிஶயத்தாலே ரஹஸ்ய

மாக உபதே$_3$ஶித்துப் போந்தவையாய், அருமை பெருமை களைப் பற்ற இதுக்கு முன்பு தாமும் ப்ரகாஶிப்பியாமல் அடக்கிக்கொண்டு போந்தவையுமான அர்த்த$_2$விஶேஷங்கள் எல்லாவற்றையும் பின்புள்ளாரும் இழக்கவொண்ணா தென்கிற தம்முடைய க்ருபாதிஶயத்துக்குமேலே, பெருமாளும் ஸ்வப்நத்திலே திருவுள்ளமாயருளுகையாலே, ஸ்ரீவசந பூ$_4$ஷணமாகிற இப்ரப$_3$ந்த$_4$முகே$_2$ந வெளியிட்டருளுகிறார்" என்று மாமுனிகள் அருளிச்செய்திருப்பதைக் காணலாம். இதிலிருந்து இப்ரப$_3$ந்த$_4$த்தில் மாத்திரம் வெளியிடப்பட்டிருக்கும் முற்கூறிய ஆத்த$_2$ங்கள் ப்ரவ்ருத்திபரர்களாகிற அநதி$_4$காரிகளின் பார்வையில் பட்டால் அவர்களுக்குத் தாம் இழிந்தஸாத$_4$னத்தில் அஶ்ரத்$_3$தை$_4$ ஏற்படும் என்று பூர்வ க்$_3$ரந்த$_2$ங்களில் வெளியிடப்படாமல் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று விளங்குகிறது.

12. இந்த மனப்பான்மை பூர்வாசார்யர்களுக்கு உண்டு என்பதை கீ$_3$தாபா$_4$ஷ்யத்திலேயே காணலாம். கீ$_3$தாசரமஶ்லோகபா$_4$ஷ்யத்தில், சரமஶ்லோகத்தை ஸ்வதந்த்ரப்ரபத்திபரமாக வ்யாக்$_2$யானம் செய்யாமல் வேறுவகையில் இரண்டுவித$_4$மாக பா$_4$ஷ்யமிட்டிருப்பது இந்த மனப்பான்மையாலேயேயாகும். சில அதி$_4$காரிகளுக்குக் கர்மங்களில் அஶ்ரத்$_3$தை$_4$யைத் தடுக்க ஜைமிநிமஹர்ஷி ப்$_3$ரஹ்ம காண்ட$_3$த்தைக் கர்மகாண்ட$_3$ஶேஷமாக வர்ணித்ததும் இந்த மனப்பான்மையினாலேதான். இதையே அநவாருஹ்ய வாத$_3$ம் என்பது இது ஒருவகை அருளினால் ஏற்படுவது. தே$_3$ஶிகனும் இவ்வருளினாலே—ப்ரவ்ருத்திபரர்களுக்கு ஸ்வப்ரவ்ருத்தியில் அஶ்ரத்$_3$தை$_4$யை உண்டாக்கிவிடக்கூடாது என்பதற்காகவே 'ஸாத$_4$நாந்தரங்களுக்கு உண்மையான மோக்ஷோபாயத்வம் உண்டு. அவை ஸ்வரூபவிருத்$_3$த$_4$ங்களல்ல, அவற்றால் பெறும் ப$_2$லனில் வாசியில்லை'' என்று உபபாதி$_3$த்தார் என்று ஸ்ரீவசநபூ$_4$ஷண மீமாம்ஸாபா$_4$ஷ்யகாரர் எழுதியது தே$_3$ஶிகனுக்கு தூ$_3$ஷணமாகாது.

'தேசிகன் மயங்கிப பரமார்த்தங்களை அறியவில்லை' என்று எழுதுவதுதான தூஷணமாகும்.

13. இனி மற்ருெரு கேள்வி இங்கு எழும். முற கூறிய அருளினுலே மற்ற ப்ரபந்தங்களில் இவ்வாத்தங் களை மறைத்துப் போந்த பிள்ளைலோகாசாரியர் ஸ்ரீ வசந பூஷணத்தில் மாத்திரம் இதை வெளியிடுவானேன ? பர வ்ருத்திபராகளுக்கு அஸ்ரத்தை இதனுல விளைந்துவிடாதா? எனபதே அககேள்வி. இதறகு பதில் பினவருமாறு — பெரியவாச்சானபிள்ளை வடககுத்திருவீதிப்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களுடைய விஸதாரமான வியாககியானங்களில ஆங்காங்கு காணப்படும ஸமபரதாய பரதிதநதரார்த்தங் களை ஒனருகத் திரட்டிப் பிள்ளைலோகாசாரியா பல ரஹஸ்ய கரந்தங்களை அருளிசசெய்யத் தொடஙகியபின், சிலா அந்த ப்ரதிதந்தரார்த்தஙகளில ஆக்ஷேபங்களைச் செய்ய முற பட்டனா. 'இப்படி ஆக்ஷேபம் எழுந்த பின்பும், முற்கூறிய பரமார்த்தங்களை நாம கரநதஸ்தமாககாமல விட்டிருந்தோ மானுல, இவ்வர்த்தங்களுககு லோபமே வந்துவிடும' என்னும அதிசஙகையாலே, இவ்வர்த்தங்களை அதிகாரி கள் பலர் அறிவதால் உணடாகும் சேதநோஜ்ஜீவநதைக் கருததில கொள்ளுமபோது, ப்ரவ்ருததிபரரான சிலர்கரு அஸ்ரத்தை விளைநதாலும பாதகமில்லை என்று கருதி, அதிகாரிகளான பல சேதனர் உஜ்ஜீவிக்கவேண்டும் என் னும் பேரருளாலே ஸ்ரீ வசநபூஷணத்தில பிள்ளைலோகா சார்யர் இப்பரமார்த்தங்களை பசவந்நியமனம்பெற்று க்ரநதஸ்தமாக்கினுர் எனறு கண்டுகொள்வது. பிற் காலத்தில் எமபெருமான் ஸம்ப்ரதாயபேதத்தை உண் டாககி ப்ரவ்ருத்திபரர்களை இவ்வர்த்தங்களை ஏற்றுக் கொள்ளாமறசெய்து, அவர்களுககு ஸ்வப்ரவ்ருத்தியில அஸ்ரத்தை விளையாமல பாதுகாத்து வருவதையும் ப்ரத் யக்ஷமாகக காணகிறோம்.

14. அர்ஜுனனைப் போர்புரியச் செய்யவேண்டும் என னும பதறறததாலே பரமகு3ஹ்யமான ஸித்3தோ4பாய நிஷ்டை2யைக காட்டும் சரமஶ்லோகததை நீசர் நடுவே வெளியிட்டுவிட்டு. "இத3ம் தே நாதபஸ்காய" என்று தொடங்கி, "(நான் இபபடி வெளியிட்டதுபோலே) நீ கண்டவர்களுக்கு வெளியிடடுவிடாதே" என்று எசசரிககை செய்தான கீ3தாசாரியன. அவ்வெச்சரிககையைப் பின பறறியே, எமபெருமானுருககு முன்புள்ள திருக்கோஷ்டியூர் நமபிகள் முதலான ஆசாரியாகள், அதி4காரிகளைக் கடுமை யாகப் பரீக்ஷிததபின்பே ரஹஸ்யத்ரயார்தத2ங்களை உப தே3ஶித்து வநதார்கள். இந்நிலை நீடிததால நம் த3ர்ஶனம் ப்ரசாரமடையாது என்று உணாந்த எதிராசா, "ஆசை யுடையோர்க்கெல்லாம ஆரியர்காள்! கூறும்" என்று தம் இன்னருளால் நியமித்து வரமபறுத்தார். அவரும் அவர்க குப பினபும சிலகாலம ரஹஸ்யார்த்த2ங்களை ஆசையுடை யார்ககு ஆசார்யாகள் உபதே3ஶித்து வந்தார்களேயொழிய க்3ரந்த2ஸ்த2மாககாமலிருந்தார்கள். இதனாலேயே எம் பெருமானார் கீ3தாபா4ஷ்யத்தில சரமஶ்லோகததின் முக2 யார்த்த2ததைத் தெரிவிககவிலலை. இப்படியேயிருநதால ரஹஸ்யார்தத2ங்கள் காலகரமததில லோபமடைந்துவிடும என னும் அதிஶங்கையாலே பரமகாருணிகரான பெரிய வாச்சான்பிள்ளை ரஹஸ்யக3ரநத2ங்களை அருளிச்செய்வதைத தொடங்கி வைத்தார். பிள்ளைலோகாசார்யர் அவருடைய அடிச்சுவட்டைப் பினபற்றி விரிவாகப் பல ரஹஸ்யக3ரந் த2ங்களை அருளிச்செய்தார். இந்த க்3ரநத2ங்களிலும இவ் வததியாயத்தின தொடககததில காட்டப்பட்ட பரம ரஹஸ்யாாத்த2ங்களை அவறறின் அருமைபெருமைகளை நோககி வெளிப்படுத்தாமலேயிருந்தார்கள். அவ்வர்த்த2ங் களுக்கு ஆக்ஷேபம் விளைந்து லோபமடையுமோ எனனும அதிஶங்கை ஏற்பட்டவுடன. பிள்ளைலோகாசாாயர் தம அபாரகருணையால ஸ்ரீ வசநபூ4ஷணததில அவற்றை வெளி

யிட்டருளினுர் என்பது தென்னுசார்ய ஸம்ப்ரதாயததில் உபதேசபரம்பராப்ராப்தமாக வந்துகொணடிருககும பரம ரஹஸ்யார்த்தமாகும்.

15. "சொனனுல் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேணமினே' எனகிற ரீதியில. மறறுமோா உண்மையை யும் நாம இஙகு சொலலவேணடியுளளது இவ்வததியா யததில சென்ற ஆறு பாராககளில நாம விளக்கிய உணமை ஸ்ரீ வசநபூஷணததைத தகக அதிகாரிகளிடம் காலக்ஷேபம கேட்டவாகளுககுததான விளஙகும. ஸம்பரதாய க்ரநதங களைத் தம புத்திபலத்தாலே ஏடுபார்ததுப படிபபவா களுககும. அந்த கிரந்தங்களைக கணடிககவேண்டும, அலலது தம ஸமபரதாயாநுகுணமாக நயனம செய்ய வேண்டும் என னும் அபிருசியுடன படிப்பவர்களுக்கும் விளஙகாது. ஒவ்வொரு மதத்திலும, ஸமப்ரதாயததிலும் இவ்வண்ணமாக குருமுகமாகக கேடடே அறியவேணடிய அாததஙகள் பல உண்டு. அப்படி கேட்டு அறிந்தவர்க ளாலதான அநத மத ஸமபரதாயார்த்தங்களைப் புரிநது கொள்ள முடியும. ஒரு மதம அலலது ஸம்ப்ரதாயததைக கண்டிக்கவேண்டும, அல்லது அதைத் தம் மதஸமப்ர தாயாநுகுணமாக நயனம செய்யவேண்டும் என்று விருமபு கிறவர்களும், அந்த மத ஸமப்ரதாயாாத்தஙகளைப புரிநது கொண்டு கணடநம் அலலது நயனம் செய்தாலதான் அது சிறககும. அதைப் புரிந்துகொள்ள முற்கூறிய ரீதி யில குருமுகமாகக் கேட்பதொனறே வழியாகும. ஆக, ஒரு மதம் அலலது ஸமபரதாயத்தைக் கணடிககவோ, தம மதம் அலலது ஸமப்ரதாயததுககு அநுகுணமாக நயனம செய்யவோ விருமபுகிறவர்களும், அந்த மதம் அலலது ஸம்ப்ரதாயததிலுள்ள முக்கியமான க்ரந்தங் களைத தக்க அதிகாரிகளிடமிருந்து அதிகரித்தால்தான அவாகளுக்கு அந்த மதம் அலலது ஸம்ப்ரதாயததைக கண்டிக்கவோ நயனம் செய்யவோ தகுதி உண்டு எனபதை

எவரும் மறுகக முடியாது. இககாரணத்தாலதான் ஜக3த3ா
சாாயரான எமபெருமானுா் அத3வைதியான யாத3வபரகாஶ
ரிடம பல வருடஙகள் கு3ருகுலவாஸம செய்து அத3வைத
மததைதக் கறறபினபே, அதைக க2ண்டி3ககும க3ரந்த2ங
களை எழுதுவதில ஈடுபட்டார். தம ஸித3தா4நதத்தைப்
பினபறறுகிறவர்கள் அனைவருககும இந்த வாயபபு கிடைக
காது எனறு உணாந்து, ஸ்ரீ பா4ஷ்யததின் தொடககததில
ஜிஜ்ஞாஸாதி4கரண பா4ஷ்யததில, லகு4பூர்வபக்ஷததிலும,
மஹாபூர்வபக்ஷததிலும, அத3வைதிகளே வியககுமபடி
அத3வைதமததத்தை விரிவாக விளககியபினபே அதைக்
க2ண்டி3த்ததன மூலம, தம் சிஷ்யப்ரஶிஷ்யாகளுககு ஸ்ரீபா4ஷ
யததைக் காலக்ஷேபமாகக கேட்குமபோது அத3வைதமதக
கொள்கைகளையும் கு3ருமுக2மாகக கேட்டாக வேண்டிய
நிர்ப்ப3ந்த4ததை உண்டாககினா இந்த ரீதியில தெனனு
சாாய க்3ரந்த2ங்களில் தே3ஶிகஸம்ப்ரத3ாயார்தத2ஙகளோ,
தே3ஶிகக3ரந்த2ங்களில் தென்னுசார்ய ஸம்ப்ரத3ாயார்தத2ங்
களோ பூாவபக்ஷமாக விரிவாக விளக்கப்படவிலலை. ஆகை
யால, இரண்டு ஸம்பரத3ாயஸ்த2ர்களும, அவர்கள் சது
ஶாஸ்தரங்களையும் கரைகண்டவாகளானுலும மறற ஸமப்ர
த3ாய க3ரந்த2ங்களைக க2ண்டி3ககவோ நயனம செய்யவோ
விருமபிலை அவறறை கு3ருமுக2மாக அதி4கரிபபது தவிர
வேறு வழியிலலை.

16. அந்நாள் தொடங்கி இநநாள் வரையில தென்னு
சார்ய ஸமபரத3ாயஸத2 பண்டி3தோத்தமாகள் தே3ஶிக
க3ரந்த2ங்களை ஸவாசார்யனிடம் காலக்ஷேபமாகக கேட்டே
வருகிறாா்கள். தே3ஶிக க்3ரந்த2ங்களுக்கு ப்ராசீந வ்யாக்2
யானஙகள் எழுதியவர்கள் பலர் தெனனுசார்ய ஸமபர
த3ாயஸ்த2ர்களே எனனும தததுவததைக் காணும்போது
இவவுணமை எளிதில் விளஙகும. பிரகிருததில 'மாமுனி
கள் கண்ட வேத3ாந்த ஸார நிஷ்காஷ'மும, 'நிஷ்கர்ஷ
நிகஷ'மும் எழுதிய ஸ்ரீ உ. வே. வேஞுககுடி வரத3ாசார்ய

ஸ்வாமி தம் ஆசார்யரான காரபங்காடு ஸ்வாமியிடம் ரஹஸ்யத்ரயஸாரம் முதலான பல தேஶிக க்₃ரந்த₂ங்களை அதி₄கரித்தவர். தே₃ஶிகஸம்ப்ரதா₃யஸ்த₂ வித்₃வான்களோ வெனில நெடுங்காலமாகத் தென்னாசார்ய க்₃ரந்த₂ங்களில உபேக்ஷை பாராட்டி வருகிறார்களாகையாலே, அவற்றை அதி₄கரிக்க முயலவில்லை. இதனாலேயே அவர்கள் தென்னாசார்ய ஸம்ப்ரதா₃ய பரிதந்த்ரார்த்த₂ங்களைப் புரிந்துகொள் வதேயில்லை. ஆகையால், அவர்கள் எழுதும் க₂ண்ட₃னங் களும் சிறப்பாக அமைவதில்லை. ஸமீபகாலத்தில தென்னா சார்ய க்₃ரந்த₂ங்களில ப்ரவேஶம்பெற்ற வாத்தமான ஆண்டவன ஸ்வாமி அவருடைய ஸ்ரீகார்யமான ஸ்ரீ உ. வே. சித்ரகூடம் விஜயராக₄வாசார்ய ஸ்வாமி போன்ற ஒருசில தே₃ஶிக ஸம்ப்ரதா₃யஸ்த₂ வித்₃வான்கள் அந்த க்₃ரந்த₂ங் களின சுவையில ஈடுபட்டு க₂ண்ட₃ன ப்ரவ்ருத்தியில ஈடு படுவதில்லை.

17. ப்ரக்ருதத்தில், தென்னாசார்ய ஸம்ப்ரதா₃யத்தை நயனம் செய்யவும், க₂ண்டி₃க்கவும் எழுந்த ஸ்ரீ உ. வே. மது₄ராந்தகம் வீரராக₄வாசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ உ வே. D. T. தாதாசார்ய ஸ்வாமியும் தென்னாசார்ய ஸம்ப்ரதா₃ய க்₃ரந்த₂ங்களை அதி₄கரித்தவர்களல்லர். விவாத₃ம் ஏற்பட்ட வுடன தென்னாசார்ய ஸம்ப்ரதா₃ய க்₃ரந்த₂ங்களில தேடி, தமக்கு ஸாத₄கம்போலே மேலெழத்தோன்றும் சில வசனங் களை இட்டு நிரப்பி மது₄ராந்தகம் ஸ்வாமி ஸாரதமநிஷ் கர்ஷத்தை வெளியிட்டிருப்பதை அச்சிட்டே காட்டியிருக் கிறோம். மேலெழத்தோன்றும் அர்த்த₂ங்கள் அபார்த்த₂ங் கள், உண்மையான அர்த்த₂ங்கள் இவையிவை என்று நிஷ்கர்ஷ நிகஷத்தில வரத₃ாசார்ய ஸ்வாமி விஸ்தாரமாக நிரூபித்திருப்பதையும் அச்சிட்டிருக்கிறோம். இப்போது க₂ண்டி₃க்க வந்திருக்கும் ஸ்ரீ உ. வே. D. T தாதாசார்ய ஸ்வாமி, பெரியவாச்சான்பிள்ளை முதலான தென்னாசார்யர் களிடமும், அவர்களுடைய கிரந்தங்களிலும் உபேக்ஷை

மாத்திரமல்லாமல் கடுமையான த்வேஷமுமுடையவர். இருபது வருடங்களுக்கு முன்பே இந்த த்வேஷத்தைக் காட்டி ஸுத3ர்ஶனத்திடம் தக்க பதிலைப் பெற்றவர். அதற்குப் பின்பும் த்வேஷ மனப்பான்மை இன்றளவும் குறையாமலேயிருப்பவர். ஆகையால் இவருக்குத் தென்னாசார்ய க்3ரந்த2ங்களின் உண்மையான அர்த்த2ங்கள் புலப்பட வழியில்லை. த்வேஷமுள்ளவர்களுக்கு கிரந்தங்களின் அர்த்த2ங்கள் விளங்காது என்று இவரே தம் கையால் எழுதியிருக்கிறார் "யதா2ர்த்த2 ராமானுஜன்-2" அட்டையின் இரண்டாம் பக்கத்தின் கடைசியில் 'யதா2ர்த்த2 ராமானுஜன்-1' விளம்பரத்தில். "பிறருக்கு விளங்காத, அதனால் அவர்களால் தூற்றப்படுகிற தே3ஶிகன் ஸ்ரீஸூக்திகளில் பலவற்றுக்கு விளக்கம் செய்வது" என்று எழுதியிருக்கிறார் இவர். இங்கு 'பிறர்' என்று இவர் குறிப்பது காஞ்சீ மஹாவித்3வான் ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியை. ஸ்வாமியின் கூடஸ்த2ரான ப்ரதிவாதி3 ப4யங்கரம் அண்ணா "வேதா3ந்த தே3ஶிக கடாக்ஷவிவ்ருத்3த4 போ3த4ம்" [ஸ்ரீ வேதா3ந்த தே3ஶிகருடைய கடாக்ஷத்தால் அறிவுவளரப் பெற்றவர்] என்று தனியனிடப்பெற்றவர். ஸ்ரீபா4ஷ்யாதி3 க்3ரந்த2ங்களை ஸ்ரீவேதா3ந்ததே3ஶிக குமாரரிடமிருந்து அதி4கரித்தவர் அந்தப் பரம்பரையில் இன்றளவும் தே3ஶிக க்3ரந்த2ங்கள் அதி4கரிக்கப்படுகின்றன. அந்த ஸ்வாமி தே3ஶிக க்3ரந்த2ங்கள் முழுவதையும் முதன் முதலாக வெகுவிரைவில் அச்சிட்டு வெளியிடும் அருங் காரியத்தை ஸாதி4த்தவர். அறுபது வருடங்களுக்கு மேலாகத் தம் நூற்றுக்கணக்கான நூல்களில் ஆயிரக்கணக்கான தே3ஶிக ஸ்ரீஸூக்திகளை மேற்கோள்களாகக் காட்டி வருகிறார். ஆயிரக்கணக்கான உபந்யாஸங்களிலே தே3ஶிக ஸ்ரீஸூக்திகளை க3ங்கா3ப்ரவாஹம்போலே பொழிந்து வருகிறார். 'மஹாவித்3வான்' என்றும், 'மஹாமஹிமோபாத்4யாயா' என்றும் பா4ரததே3ஶத்திலிருக்கும் ஆஸ்திகர் அனைவராலும் கொண்டாடப்படுகிறார். இந்த ஸ்வாமிக்கு தே3ஶிக

ஸ்ரீஸூக்திகள் விளங்கவில்லை என்கிறார் தாதாசார்யஸ்வாமி, தே3சிகனிடமும். அவருடைய ரஹஸ்யத்ரயஸாரம் முதலானவற்றில் தென்னாசார்ய ஸித்3தா4ந்த க2ண்ட3நமாயிருக்கும் பல ஸ்ரீ ஸூக்திகளிலும் த்வேஷத்தாலே அவருக்கு, அந்த ஸ்ரீஸூக்திகள் விளங்கவில்லை என்றே இவருக்குக் கருத்தாயிருக்கவேண்டும். அறுபது வருடங்களுக்கு மேலாக தே3சிக க்3ரந்த2ங்களில் பரிசயமுள்ள காஞ்சீ ஸ்வாமிக்கே த்3வேஷத்தினால் தே3சிக ஸ்ரீஸூக்திகளுக்கு அர்த்த2ம் விளங்காதெனில், தென்னாசார்ய ஸம்ப்ரதா3ய க்3ரந்த2ங்களில் பரிசயமேயில்லாத இவருக்கு த்3வேஷத்தினால் அவற்றின் அர்த்த2ம் விளங்காது என்பதை விளக்கவும் வேண்டுமோ? ஆக இவருக்குத் தென்னாசார்ய க்3ரந்த2ங்களில் அர்த்த2ம் விளங்காது என்பது இவர் எழுதியிருப்பதிலிருந்தே ஸித்3தி4க்கிறது. இதுவே நாம் இவ்வத்தியாயத்தில் வெளியிட விரும்பிய இரண்டாவது உண்மை.

18. ஆக, ஸ்ரீ உ. வே. மது4ராந்தகம் ஸ்வாமியும், ஸ்ரீ உ. வே. D T. தாதாசார்யஸ்வாமியும் இனியும் தென்னாசார்யஸம்ப்ரதா3யக்3ரந்த2ங்களை நயனம் செய்யவோ, க2ண்டி3க்கவோ விரும்பினால், ப4க3வத்3விஷயம் ஸ்ரீவசநபூ4ஷண வ்யாக்2யானம் (மீமாம்ஸை அரும்பத3வுரைகளுடன்) ஆசார்ய ஹ்ருத3ய வ்யாக்2யானம் ஆகியவற்றையாவது, தென்னாசார்ய ஸம்ப்ரதா3யக்3ரந்த2ங்களை கு3ருமுக2மாக அதி4கரித்த அதி4காரிகளிடமிருந்து அதி4கரித்த பின்புதான் நயனம் செய்வதிலோ அல்லது க2ண்ட3நம் செய்வதிலோ கைவைக்க வேண்டும். அப்படி அதி4கரியாமையால், தத்ஸம்ப்ரதா3ய பரிதந்த்ரார்த்த2ங்களைப் புரிந்துகொள்ளாமலே இப்போது எழுதுவதுபோலே மேன்மேலும் எதையாவது எழுதிக் கொண்டுபோனால் அதனால் ஒரு பயனும் ஏற்படாது. இவற்றை அதி4கரிக்கத்தக்க அதி4காரிகள் எங்களுக்குக் கிடைக்கவில்லையே என்று இவர்கள் கூறுவார்களாகில், அதற்கு ஸுலப4மான வழியொன்று சொல்லுகிறோம்.

ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரத₃ாசார்யஸ்வாமியும் ஸ்ரீ உ. வே D T. தாதாசார்யஸ்வாமியும் சென்னையிலேயே வாழ்ந்து வருகிறார்கள். வேளுக்குடி ஸ்வாமி தாதாசார்ய ஸ்வாமிக்கு மிகவும் பூ₄ஜ்யமானவர். அடியேன் வார்த்தையையும் தட்டமாட்டார். தாதாசார்ய ஸ்வாமிக்கு ஓழிந்த நேரங்களில் அவருடைய திருமாளிகைக்கு எழுந்தருளி, அவரை அநுவர்த்தித்து வாக்₃ம்ருதவர்ஷி ஸ்வாமியை முறகூறிய க்₃ரந்த₂ங்களின் அர்த்த₂ங்களைச் சொல்லச் செய்கிறேன். இதே ரீதியில் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ உ. வே. மது₄ராந்தகம் ஸ்வாமிக்கு அங்கேயே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ உ. வே. ஸுதாபி₄ஷேகம் ஸ்வாமியை முறகூறிய க்ரந்த₂ங்களின் அர்த்த₂ங்களை சொல்லச் செய்கிறேன். இப்ரவசனங்களை—நஞ்சீயர் நியமனத்தாலே, நம்பிள்ளை செய்ததாகப் பிரஸித்தி பெற்றதோர் பிரவசனத்தை அடியொற்றியிருப்பதாக அந்த ஸ்வாமிகள் செய்வார்கள். ஸ்ரீ உ. வே. D T. தாதாசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ உ. வே. மது₄ராந்தகம் ஸ்வாமியும் பொறுமையோடு கேட்டு அவ்வர்த்த₂ங்களைப் புரிந்துகொண்டார்களானால், அவற்றை நயனம் செய்யவோ, க₂ண்டி₃க்கவோ முறபடமாட்டார்கள் என்பது அடியேனுடைய உறுதியான அபி₄ப்ராயம். இப்படிச் செய்யாமல், பழைய ரீதியிலேயே பதில் எழுதி வந்தார்களானால் அவற்றை உபேக்ஷிப்பது தவிர வேறு வழியில்லை. பரதந்த்ரார்த்த₂ங்களையே புரிந்துகொள்ளாமல் க₂ண்ட₃நம் எழுதுகிறவர்களுக்கு, அவற்றைப் புரியவைத்து பதில் எழுதவேண்டிய வீண் வேலையில் இனியும் நாம் ஈடுபடமாட்டோம். ஆனால், ஒரு காரியத்தை நம் ஆயுளுள்ள வரையில் விடாமல் செய்துவருவோம். அதாவது—ஸம்ப்ரதா₃யஸாம்ப்ரதை₄யிலுள்ள வாத₃ங்களுக்கு, பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே பல மஹநீயர்களால் பதில் உரைக்கப்பட்டிருக்கின்றன என்று எடுத்துக்காட்டும் 'அருளிச்செயல் ரஹஸ்ய பூ₄ஷணம்' என்னும் வாக்₃ம்ருதவர்ஷிவ்யாக்₂யானத்துடன் கூடிய அருளிச்செயல் ரஹஸ்யத்தை

ஸூத3ர்ஶனம் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் வெளியிடப்போவதுபோலே பல க3ரந்த2ங்களை வெளியிட்டு வருவோம். ஸ்ரீவசநபூ4ஷண வ்யாக்2யானத்தை—இவர்களுடைய எல்லா வாத3ங்களுக்கும் பதில் உரைக்கும் அரும் பதவுரைகளோடு முதல் 22-ஸூத்ரங்களை முதல் பா4க3மாக வெளியிட்டிருப்பதுபோலே, எஞ்சிய எல்லா பா4க3ங்களையும் (இரண்டாயிரம் பக்கங்களுக்குமேல் வரக்கூடியவை) அச்சிட்டு வெளியிடுவோம். அவற்றையெல்லாம், நாம் முன் சொன்ன ரீதியில் தக்க அதி4காரிகளிடம் அதி4கரித்துக் க2ண்ட3னம் எழுதுவதில் தம் திறமையை இவர்கள் காட்டட்டும்.

